


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:256 | 01-04-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

01.04.2026 பங்குனி 18
புதன் கிழமை

சூரிய உதயம் 6.12

திதி:
இன்று காலை 7.37 வரை
சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று மாலை 4.37 வரை
உத்திரம் பின்பு அஸ்தம்.

யோகம் :
இன்று மாலை 3.56 வரை
விருத்தி பின்பு துருவம்.

கரணம்
இன்று காலை 7.37 வரை
வணிசை பின்பு இரவு 7.47
வரை பத்திரை பின்பு பவம்

அமிர்தாதி யோகம் :
இன்று மாலை 4.37 வரை
அமிர்த யோகம் பின்பு யோகம்
சரியில்லை.

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 4.37 வரை
அவிட்டம் பின்பு சதயம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

இன்று பங்குனி உத்திரம் நாள்.
பௌர்ணமி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தோற்பதற்காக தமிழ்நாடு வந்துள்ளது தே.ஜ. கூட்டணி : மு.க. ஸ்டாலின்

**திருவாரூர், ஏப்.1:**

“திராவிட மாடல் 2.0 ஆட்சியில் எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் அளவு சிறப்பான ஆட்சியை வழங்குவோம்” என்று திருவாரூரில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், திருவாரூரில் நேற்று பிரச்சாரத்தை தொடங்கினார். திருவாரூர் தெற்கு வீதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திமுக வேட்பாளர்கள் திருவாரூர் பூண்டி கலைவாணன், மன்னார்குடி டிஆர்பி.ராஜா, திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் மாரிமுத்து, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் நன்னிலம் எஸ்டிபிஐ வேட்பாளர் முகமது முபாரக் ஆகியோரை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இந்த 2026 தேர்தலின் சூப்பர் ஸ்டார் தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டேன். நேற்று கொளத்தூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தேன். இன்று தலைவர் கருணாநிதியை வளர்த்தெடுத்த திருவாரூர் மண்ணிலிருந்து திமுக



தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி பிரச்சாரத்தை தொடங்குகிறேன். திருவாரூர் என்றால் அது திமுக ஊர். அதனால் இங்கிருந்து தொடங்குகிறேன்.

திருவாரூர் பெயர் அழகு. அதைவிட திருவாரூர் தேர் பேரழகு. நேற்று முன்தினம் தான் திருவாரூர் தேரோட்டம் கம்பீரமாக நடந்து முடிந்துள்ளது. கடந்த 1948-க்குப் பிறகு 22 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருவாரூர் ஆழித்தேரை ஓட வைத்தவர் கருணாநிதி. திமுக ஆட்சியில் இருக்கும் போதெல்லாம் திருவாரூருக்கு நிறைய செய்துள்ளோம்.

திருவாரூர் மாவட்டத்தை உருவாக்கியது, ஆட்சியர், நீதிமன்றம், மாவட்ட காவல் அலுவலகங்கள், நகராட்சி கட்டிடம், புதிய பேருந்து நிலையம், மத்திய பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி, மன்னார்குடி அரசு கல்லூரி, பாமணி உரத் தொழிற்சாலை, மாவட்டம் முழுவதும் குடிநீர் வசதி, டி.ஆர்.பாலு முயற்சியால் செம்மொழி உட்பட 5 புதிய ரயில்கள் என ஏராளமான வளர்ச்சி திட்டங்களை செய்துள்ளோம். நெல் ஜெயராமனுக்கு நினைவுச் சின்னம் அமைத்து வருகிறோம்.

கடந்த 2021-ல் எங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைத்து ஆட்சி பொறுப்பை ஒப்படைத்தீர்கள். முதல்வராக பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்து பெண்கள் விடியல் பயணம், 1.31 கோடி பெண்களுக்கு உரிமைத் தொகை, மாணவர்களுக்கு காலை உணவு, நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டம் என ஏராளமான திட்டங்கள் கொண்டு வந்தேன். பொங்கல் தொகுப்பு ரூ.3,000 வழங்கினோம்.

தமிழகத்தில் திமுகவை எதிர்க்க தங்களுக்கு வலிமையில்லை என்பதால் அதிமுகவை பாஜக விலைக்கு வாங்கி உள்ளது. பொதுவாக பாஜக மக்களுக்கு நல்லது செய்யாது. தேர்தல் வந்தால் பட்ஜெட்டில் கண்துடைப்புக்காக சில அறிவிப்புகளைப் கொடுப்பார்கள். ஆனால், தமிழகத்தில் அதைக் கூட செய்ய மனமில்லாத வஞ்சக எண்ணத்தோடு இருக்கும் உருவம்தான் என்டிஏ.

பாஜக மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்துக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. எந்த சிறப்பு திட்டத்தையும் செய்யவில்லை.

இத்தனையும் சமாளித்து பல்வேறு சாதனைகளை செய்துள்ளோம். திறமையான நிர்வாகத்தால் நம்பர் ஒன் மாநிலமாக உள்ளோம்.இந்தி திணிப்பை ஏற்கவில்லை என்பதால் நம் வீட்டு குழந்தைகளுக்கான கல்வி நிதியைக் கூட தரவில்லை. இப்படி வஞ்சக எண்ணம் கொண்ட கூட்டத்திடம் தமிழகத்தின் எதிர்காலத்தை ஒப்படைக்க முடியுமா? எனவே, என்டிஏவை புறக்கணிக்க வேண்டும். அப்போது தான் தமிழகத்தின் எதிர்காலம் காப்பாற்றப்படும்.

இந்தத் தேர்தல் என்பது தமிழ்நாடு அணி வெர்சஸ் டெல்லி அணி. தமிழகத்தை காக்க திமுகதான் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும். தமிழகம் கலவர பூமியாக மாறாமல் இருக்க பாஜக- அதிமுக கூட்டணியை வேரோடு வீழ்த்த வேண்டும். நாம் போராடுவது திமுக கூட்டணிக்கான வெற்றி அல்ல, இது தமிழகத்துக்கான வெற்றி. எனவே, அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு,தமிழகத்தைக் காக்க மக்கள் அனைவரும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும் . அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் அளவு சிறப்பான ஆட்சியை வழங்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

# பிஹார் கோயில் கூட்ட நெரிசல் பலி எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

**பாட்னா, ஏப்.1:**

பிஹாரின் நாளந்தா மாவட்டத்தில் உள்ள ஷிதாலா தேவி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோ எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது. மேலும், காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதுவரை உயிரிழந்தோரில் 6 பேரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், உயிரிழந்த அனைவருமே பெண்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு மாநில அரசு தலா ரூ.6 லட்சம் இழப்பீடு அறிவித்துள்ளது. அதேபோல், பிரதமர் மோடியும் இரங்கல் தெரிவித்துள்ளதோடு, பிரதமரின் நிவாரணத் தொகையிலிருந்து உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்க



உத்தரவிட்டுள்ளார்.

நடந்தது என்ன?

நாளந்தா மாவட்டத்தின் மாக்தா என்ற கிராமத்தில் உள்ள ஷிதாலா மாதா கோயிலில் செவ்வாய்க் கிழமைதோறும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. அதிலும், இன்று சைத்ர மாதத்தின் கடைசி செவ்வாய்க்கிழமை என்பதாலும், மஹாவீர் ஜெயந்தி என்பதாலும் அதிகளவில் பக்தர்கள் வருகை தந்துள்ளனர்.வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களில் சிலர், விரைவாக சாமியை தரிசிக்க முயன்றதில் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதில், 9 பேர் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் பலரும் ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்ட நெரிசல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஒரு பக்தை, “இங்கு செவ்வாய்க்கிழமைகளில் எப்போதும் கூட்டம் அதிகமாக இருக்கும். மக்கள் ஷிதாலா மாதாவின் தரிசனத்துக்காக வருகிறார்கள். நாங்களும் பாட்னாவில் இருந்து வந்துள்ளோம். ஆனால், திடீரென ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக சிலர் உயிரிழந்தனர். போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததே இந்த அசம்பாவிதத்துக்குக் காரணம். இங்கு ஒரு போலீசார் கூட இல்லை” என கூறினார்.

மற்றொரு பக்தை ரீனா ராய் கூறுகையில், “சிலர் மயங்கி விழுந்ததாகவும், சிலர் காயமடைந்ததாகவும் எங்களுக்கு தகவல் கிடைத்தது. சிலர் உயிரிழந்துவிட்டதாகவும் நாங்கள் கேள்விப்பட்டோம். வரிசையில் நிற்க விரும்பாததாலும் மற்றவர்களுக்கு முன்பாக முதலில் தரிசனம் செய்துவிட வேண்டும் என முயன்றவர்களால்தான் இந்த கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இன்று சைத்ர மாதத்தின் கடைசி செவ்வாய்க் கிழமை. நிர்வாக சீர்கேடே இந்த சம்பவத்துக்குக் காரணம்” என தெரிவித்துள்ளார்.

## வரி பாக்கி: ஹைதராபாத்தில் ஜெயலலிதாவின் சொத்து பறிமுதல்!

**சென்னை, ஏப்.1:**

தமிழக முன்னாள் முதல்வரும், அதிமுகவின் முன்னாள் பொதுச்செயலாளருமான ஜெ. ஜெயலலிதாவுக்குச் சொந்தமான வீடு ஒன்று ஹைதராபாத் ஸ்ரீநகர் காலனி, வெங்கடேஸ்வரா ஹில்ஸ் பகுதியில் யூசுஃப்கதா வட்டத்தில் உள்ளது.

இது ஜெயலலிதா பெயரிலேயே பதிவு செய்யப்பட்டதாகும்.

இதனைத் தொடர்ந்து, உதவி மாநகராட்சி ஆணையர் மற்றும் பணியாளர்களின் முன்னிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிலுவை வரி செலுத்தப்படும் வரை அந்தச் சொத்து ஹைதராபாத் மாநகராட்சியின் வசம் இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.




## ஏப். 2ல் திருச்சி கிழக்கில் விஜய் வேட்புமனு தாக்கல்: பிரசாரத்திற்கு அனுமதி கோரிய தவெக!

**சென்னை, ஏப்.1:**

திருச்சியில் ஏப்ரல் 2 ஆம் தேதி தவெக விஜய் வேட்புமனு தாக்கல் செய்த பிறகு பிரச்சாரத்துக்கு தவெக அனுமதி கோரியுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று(மார்ச் 30) தொடங்கியது.

நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின், நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், முக்கிய அமைச்சர்களும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தவெக தலைவர் விஜய்யும் நேற்று பெரம்பூர் தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிடவுள்ள நிலையில் வருகிற ஏப். 2 ஆம் தேதி வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளார்.

ஏப்.2 ஆம் தேதி திருச்சி கிழக்கு தொகுதியில் உள்ள பாலக்கரை மாநகராட்சி அலுவலகத்தில் நண்பகல் 12 மணியளவில் வேட்புமனு தாக்கல் செய்யும் விஜய், அதன்பின்னர் அப்பகுதியில் பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

திருச்சி கிழக்கில் பிரசாரம் செய்ய போதிய காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரி தவெக தரப்பில் திருச்சி காவல் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாட்டில் 68 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு: இன்று முதல் அமல்

**சென்னை, ஏப்.1:**

தமிழ்நாட்டில் உள்ள 68 சுங்கச்சாவடிகளில் இன்று நள்ளிரவு முதல் (ஏப்ரல் 1ம் தேதி) முதல் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது. தமிழகத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர், பரனூர், வானகரம், கிருஷ்ணகிரி, மதுரை, நான்குநேரி, வாணியம்பாடி, விராலிமலை, கப்பலூர், கனியூர், ஆத்தூர், தேனி உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்பட உள்ளது.

சுமார் ரூ.5 முதல் ரூ.100 வரை கட்டண உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் பேருந்துகள், சுற்றுலாப் பேருந்துகள், சரக்கு வாகனங்கள் நீண்ட தூரம் பயணிக்கும் போது பல சுங்கச்சாவடிகளைக் கடக்க வேண்டியிருப்பதால், தினமும் இயக்கச் செலவில் சுங்கச் சாவடி கட்டணம் பெரிய சுமையாக மாறி உள்ளது.



இதனால் கிராமப்புற சாலைகளில் நெரிசல் அதிகரிப்பு, சாலை சேதம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. சுமார் 3 முதல் 5 சதவிகிதம் வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதால், கார்களுக்கான கட்டணம் ரூ.5 வரையும், கனரக வாகனங்களுக்கான கட்டணம் ரூ.40 வரையும் உயர வாய்ப்புள்ளது. இதனால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

சென்னை-கன்னியாகுமரி, திருச்சி-சேலம் மற்றும் சேலம்-கோயம்புத்தூர் உள்ளிட்ட முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள 60 சுங்கச்சாவடிகள், 60 கி.மீ. நீளமுள்ள வண்டலூர்-மிஞ்சூர் வெளிவட்டச் சாலையில் நான்கு, மதுரை வெளிவட்டச் சாலையில் இரண்டு, நாவலூர் உள்ளிட்ட மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 8 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண உயர்வு இன்று நள்ளிரவு (ஏப்ரல் 1ம் தேதி) முதல் அமலுக்கு வரவுள்ளது.

தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலைகளில் மீதமுள்ள 17 சுங்கச்சாவடிகளில் ஆண்டு அட்டவணைப்படி செப்டம்பர் 1-ம் தேதி கட்டண உயர்வு மாற்றி அமைக்கப்படும். சுங்கச்சாவடி கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்து மக்கள் மற்றும் போக்குவரத்து துறைக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



# திருக்குறள் குறள்-576

மண்ணோ டியைந்த மரத்தனையர்
கண்ணோடியையடந்துகண் ணோடா தவர்



கண்ணோட்டதிற்க்கு உரிய கண்ணோடுப் பொருந்தி இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர் (கண் இருந்தும் காணாத ) மரத்தினைப் போன்றவர்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில் வாழையிலையாக இருக்காதே பயன்படுத்தி முடித்தவுடன் தூக்கி எறிந்து விடுவார்கள் வேப்பிலையாக இரு பல முறை யோசிப்பார்கள் பயன் படுத்தும் முன்

**ராஜகோபாலன். j**
பெங்களூரு

## ஸ்ரீ கோதண்டராமர் ஸ்வாமி திருக்கோயில் வடுவூர்.




ஸ்ரீ ராமநவமி ப்ரும்மோத்ஸவம் நான்காம் திருநாள் கருடசேவை வைகுண்ட நாதன் திருக்கோலம் இரட்டை குடை சேவை

## ஊஞ்சல் உற்சவம்



தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ தேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் (27.03.2026) அன்று ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனம், மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர். **செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## நம்பெருமாள் பங்குனி திருவிழா



ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.

நம்பெருமாள் பங்குனி திருவிழா 2026 ஆதி பிரம்மோத்ஸவம் எட்டாம் திருநாள் காலை பல்லக்கில், எல்லைக் கரை மண்டபம் புறப்பாடு.

## வேலூர் வாசன் ஐ கேர் மற்றும் ஆரணிஓய்வூதியர் சங்கம் இணைந்து கண் சிகிச்சை மருத்துவ முகாம்



**வேலூர், ஏப்.01:**
ஆரணி நில அளவை சங்க கட்டிடத்தில் வேலூர் வாசன் ஐ கேர் மற்றும் ஆரணி தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் இணைந்து கண் சிகிச்சை முகாம் 29.3.26 காலை10.00 மணிக்கு டாக்டர்V. வெங்கட் பிரசாத் தலைமையில் நடைபெற்றது

மேலாளர் விஜய குமார் மற்றும்சந்தோழ் அலுவலக ஊழியர்கள் அனைத்து துறை ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள் வட்ட தலைவர் அமிர்த லிங்கம் பொருளாளர் சங்கர் செயலாளர் விருஷபதாஸ், விஜயன், ஆர். லோக நாதன், சி.ஆறுமுகம் ஏற்பாடுகள் செய்தார்கள். இதில்65 ஓய்வூதியர் கலந்து கொண்டார்கள்.15 ஓய்வூதியர்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டார்கள்.

# ஸ்ரீராமநவமியை முன்னிட்டு சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சீதாராம ஆஞ்சநேயர் சுவாமி கோவிலில் 3வது நாள் பரதநாட்டியம்!

**வேலூர், ஏப்.01:**
வேலூர் மாவட்டம், குடியாத்தம் சந்தப்பேட்டை பகுதியில் உள்ள சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சீதாராம ஆஞ்சநேயர் கோவிலில் ராமநவமியை முன்னிட்டு 27 ஆம் தேதி முதல் 5ம் தேதி வரை சீதா தேவி திருமணம், நாடக மயில், பரதநாட்டியம், திருவடி சூட்டு விழா, சடாயு வீடு பேறு, வாலி வதம்,, ராவண வதம், ராமர் முடிசூட்டு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது.



இதனை தொடர்ந்து 3வது நாளாக ஏராளமான சிறுமிகள் மற்றும் பள்ளி மாணவிகள் பரதநாட்டியத்தில் கலந்து கொண்டு சிறப்பாக நடனம் ஆடினர். இந்த பரதநாட்டியத்தில் ராமர் சீதா தேவி திருமணம் உள்ளிட்ட பல்வேறு பாடல் களுக்கு சிறுமிகள் மற்றும் பள்ளி மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு நடனமாடி காண்போரை வெகுவாக கவர்ந்தனர். வெகு சிறப்பாக பரதநாட்டியம் ஆடிய மாணவிகளை பார்வை யாளர்கள் பாராட்டினர். இந்த பரதநாட்டியத்தை ஏராளமான பொதுமக்களும், பெற்றோர்களும் பரத நாட்டியத்தை கண்டுகளித்தனர்.

# பங்குனி மாதம் வளர்பிறை பிரதோஷம் சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை, ஏப்.01:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நந்திகேச பெருமானுக்கு பங்குனி மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேச பெருமானுக்கும், மூலவர், ஸ்ரீ வீரட்டேஸ்வரருக்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், பால்,தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், தேன், வெட்டிவேர், பஞ்சாமிர்தம், விபூதி வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வில்வ மாலைகளால் அலங்கரித்து வில்வத்தினால் அர்ச்சனை செய்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, சிவ வாத்தியங்கள் இசைக்க,பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.




பின்னர் உற்சவர் வேத மந்திரங்கள் ஒலிக்க ஆலயம் மூன்று முறை சுற்றி வந்தன தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் நந்திகேச பெருமானை அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# வந்தவாசி பகுதியில் பிரதோஷ வழிபாடு..!

**வந்தவாசி, ஏப் 01:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பங்குனி மாத பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. மூல மூர்த்திகளுக்கு மகா தீபாராதனை நடந்தேறியது. வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று தங்க கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார்.

வந்தவாசி அருகே மருதாடு ஸ்ரீ புரந்தரீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற வளர்பிறை பிரதோஷ வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# "மகளிர் தின விழா - ஔவை விருது"



**திருச்சி,ஏப்.01:**
திருச்சிராப்பள்ளி சிரா இலக்கிய கழகம் சார்பில் மகளிர் தின விழா கொண்டாட்டம் திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க குளிர்மை அரங்கில் நேற்று (31.03.26) நடைபெற்றது.

இதில் கல்வியாளர் முனைவர் இரா.ஜெயலட்சுமி உட்பட 17 பேருக்கு ஔவை விருதுகள் வழங்கப்பட்டன. விருதினை வழங்கிச் சிறப்பித்த அனைவரும் ஆண்கள்.

முன்னதாக திரு.பீட்டர் நடசேன் தமிழ்த்தாய் வாழ்த்து பாட, திரு. முகமது ஷபி வரவேற்புரை ஆற்ற கவியரங்கம், பட்டிமன்றம், மறைந்த திருச்சி பெண் எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகம் ஆகியவை இடம் பெற்றன.

சிரா இலக்கிய கழக நிறுவனர் கவிஞர் பா.ஸ்ரீராம் நன்றி நவில நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

# கற்றல் திறன் மாணவர்களுக்கு சான்றிதழ் கல்வியாளர் வழங்கினார்..!

**வந்தவாசி, ஏப் 01:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வீனஸ் வித்யாலயா பள்ளியில், எய்டு இந்தியா சார்பில் டெக்னாலஜியை பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பித்தல் திறன் செயல்பாடுகள் நடைபெற்றது. அடிப்படைத் திறனான கூட்டல், கழித்தலில் சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு மனக்கணக்குகள், வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடத்தைப் பிடித்த மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.




மேலும் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும், சான்றிதழும் வழங்கப்பட்டது, இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் பங்கேற்று , கற்றல் திறன் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார்.

மேலும் திட்ட மேலாளர் க.முருகன், யுரேகா ஆசிரியர் சங்கரி, பள்ளி வகுப்பு ஆசிரியர் மோனிகா, சத்திய பிரியா, பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் யுரேகா ஆசியை சங்கரி நன்றி கூறினார்.

# ஸ்ரீவைத்திய வீரராகவ பெருமாள் தாயார் உத்ஸவம்



திருஎவ்வுள் ஸ்ரீவைத்திய வீரராகவ பெருமாள் தாயார் உத்ஸவம் முதல் நாள்.

# ஸ்ரீராமநவமி 3 -ஆம் நாள், 4-ஆம் நாள் உற்சவம்



**கடலூர், ஏப்.01:**
கடலூர் மாவட்டம் புவனகிரியின் கண் ஸ்ரீ வைஷ்ணவ ஆர்ய வைஸ்ய பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாண்டுரங்க சுவாமி சன்னதியில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி 27.3.2026 முதல் பங்குனி மாதம் 22 ஆம் தேதி 5.4.2026 முடிய உற்சவம் நடைபெறும். தினமும் காலை 11 மணி அளவில் திருமஞ்சனம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், 3-ஆம்நாள் சேஷ வாகனம் (பரமபதநாதன் சேவை )4-ஆம் நாள் உற்சவம் (சீதா சுயம்வரம் ) அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பரம பத நாதன் சேவை, சீதா சுயம்வரம் பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ பாண்டுரங்க சுவாமியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உபயம். புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# காட்பாடி சட்டமன்ற தொகுதியில் 13வது முறையாக போட்டியிடும் மாஜி அமைச்சர் துரைமுருகன்!

**வேலூர், ஏப்.01:**
காட்பாடி சட்டமன்ற தொகுதியில் 13 வது முறையாக போட்டியிடும் திமுக வேட்பாளர் துரைமுருகன் சித்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து அண்ணா சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்த பின்னர் தனது பிரச்சாரத்தை தொடங்கினார் - விஜய்யை தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. நான் மீண்டும் காட்பாடியில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. நான் என் தொகுதிக்கு என்னென்ன செய்தேன் என்பது மக்களுக்கு தெரியும் என பேட்டியளித்தார். வேலூர் மாவட்டம், ,காட்பாடி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் 30ம் தேதி ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்பாடிக்கு வந்தார். அவருக்கு திமுக தேமுதிக, விசிக, மதிமுக, கம்யூனிஸ்ட்டுகள் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உற்சாக வரவேற்பளித்தனர். அங்கிருந்து தொண்டர்களுடன் ஊர்வலமாக வந்த துரைமுருகன் சித்தூர் பேருந்து நிலையத்திலிருந்து பிரச்சாரத்தை தொடங்கினார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் மற்றும் துணை மேயர் சுனில்குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மக்களிடையே திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேசுகையில், இந்த வாக்காளர்கள் தெய்வங்களுக்கு நன்றி. மீண்டும் எனக்கு காட்பாடி தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்துள்ளனர்.



மகிழ்ச்சியளிக்கிறது. ஒவ்வொரு முறையும் எனக்கு ஆதரவளித்து வாக்களிக்கிறீர்கள். இம்முறை வாக்களியுங்கள் என பேசினார். பின்னர் துரைமுருகன் கூறுகையில், நான் மீண்டும் காட்பாடியில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

நான் என் தொகுதிக்கு என்னென்ன செய்தேன் என்பது மக்களுக்கு தெரியும். நான் வெற்றி பெற்ற பின்னர் தொகுதிக்கு செய்ய சில திட்டங்களை வைத்துள்ளேன். வெற்றி பெற்ற பின்னர் அவைகளை செய்வேன். விஜய் திமுக தேர்தல் அறிக்கை உடைந்த கண்ணாடி, கிழிந்த துணி என கூறியது குறித்து கேட்டதற்கு விஜய்யை நான் தலைவராகவே ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்.

# இளையான்குடி பகுதியில் தேர்தல் விழிப்புணர்வு ஊர்வலம்

**மானாமதுரை ஏப் 01:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை (தனி) சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட இளையான்குடி வட்டார பகுதிகளில் வருகிற சட்ட மன்ற தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற் றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜாசிங் தலை




மையில், மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல அலுவலர் பழனிகுமார், இளை யான்குடி தாசில்தார், உதவி தேர்தல் நடத்தும் அலுவல ரான ரத்தினவேல் பாண்டி யன் ஆகியோர் முன்னிலை யில் ஊர்வலம் நடைபெற் றது. இதில் 100 சதவீதம் பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியு றுத்தி விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை அலுவலர்கள், கலை குழுவினர்கள், சமூக ஆர்வ லர்கள், கலந்து கொண்ட னர். ஊர்வலம் இளையான் குடி கண்மாய்க்கரை பகுதி யில் இருந்து தொடங்கி காம ராஜர் சாலை, சாலையூர் வழியே சென்று புறவழிச்சா லையில் நிறைவு பெற்றது. சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் நூறு சதவீதம் வாக்குப்பதிவு நடை வேண்டும். என் வாக்கு என் உரிமை வாக்குகளை விற்க்கமாட்டேன் என உறுதிமொழி வாசித்தார்.

இதே போல சாலைக்கிராமம் பஸ் நிலையம், சூராணம் ஆகிய பகுதிகளிலும் தேர்தல் ஐ விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

இதற்கான ஏற்பாடுகளை இளையான்குடி வருவாய் துறை அதிகாரிகள் செய்தி ருந்தனர்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### 5 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்தார் ராமதாஸ்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை பாமக நிறுவனர் ராமதாஸ் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

அதன்படி, சேலம் மேற்குத் தொகுதியில் பாமக (ராமதாஸ் தரப்பு) மாநில இணைப் பொதுச் செயலாளர் இரா. அருள் போட்டியிடுகிறார். வந்தவாசி தொகுதியில் கட்சியின் பொதுச் செயலாளர் முரளி சங்கர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். கும்பகோணம் தொகுதியில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான ம.க.ஸ்டாலின் போட்டியிடுகிறார். இதேபோல், விருத்தாசலம் தொகுதியில் மாவட்டச் செயலாளர் இ.கே. சுரேஷ் மற்றும் மயிலாடுதுறை தொகுதியில் மாவட்டச் செயலாளர் பாக்கம் சக்திவேல் ஆகியோர் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சியில் சமீபகாலமாக ராமதாஸ் மற்றும் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகிய இருவருக்கும் இடையே நிலவி வரும் அதிகாரப் போட்டி, கட்சியின் முக்கிய முடிவுகளை எடுப்பதில் யாருடைய கை ஓங்கியிருக்க வேண்டும் என்பதில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வரும் சூழலில், இந்த முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் விதிகளை மீறியதாக விஜய் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு

சென்னை கொளத்தூரில் பரப்புரையின்போது தேர்தல் விதிகளை மீறியதாக த.வெ.க. தலைவர் விஜய் மீது பெரவள்ளூர் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

5 ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்ட நிலையில், தேர்தல் அதிகாரிகளிடம் அளித்த உறுதிமொழியை மீறி 30 ஒலிபெருக்கிகளை பயன்படுத்தி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தேர்தல் அதிகாரி அளித்த புகாரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் 5 ஆயிரத்திற்கும் அதிகமாக பொதுமக்களை திரட்டியதாகவும், பிரசாரத்தின்போது ஆம்புலன்ஸ் பாதையை மறைத்ததாகவும் தேர்தல்நிலை கண்காணிப்பு குழு அதிகாரி கொடுத்த புகாரின் அடிப்படையில், விஜய் மீது 5 பிரிவுகளின் கீழ் பெரவள்ளூர் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அமமுகவுக்கு பிரஷர் குக்கர் சின்னம் ஒதுக்கீடு

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கான வேட்பாளர்களையும் கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அறிவித்துள்ளார். வரும் நாட்களில் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். 120 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையையும் தினகரன் வெளியிட்டார். இந்த தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.

அமமுகவுக்கு பொதுச்சின்னமாக பிரஷர் குக்கர் சின்னம் ஒதுக்குமாறு தினகரன் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்திருந்தார். அந்த மனுவை பரிசீலித்த தேர்தல் ஆணையம், அக்கட்சிக்கு பிரஷர் குக்கர் சின்னத்தை ஒதுக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே அமமுக குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு இருப்பதால், அந்த சின்னம் மக்கள் அறிந்த சின்னமாக உள்ளது. அதனால் கூட்டணியில் உள்ள அமமுகவுக்கு வெற்றி எளிதாக இருக்கும் என அக்கட்சியினர் கருதுகின்றனர்.

### சசிகலா கட்சியில் 21 வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு



சசிகலாவின் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் போட்டியிடும் 21 வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் வீரப்பன், அயோத்திக்குப்பம் வீரமணி ஆகியோரின் என்கவுன்டரில் முக்கிய பங்காற்றிய போலீஸ் அதிகாரி வெள்ளத்துரை நாங்குநேரி தொகுதியில் போட்டியிடுகிறார்.

அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை சசிகலா தொடங்கியுள்ளார். இந்த தேர்தலில் போட்டியிடுவதாகவும் அறிவித்தார். தனது ஆதரவாளர்களுடன் தொடர் ஆலோசனை நடத்தி வந்த அவர், பாமக நிறுவனர் ராமதாஸை சந்தித்து, கூட்டணி ஒப்பந்தமும் செய்தார். இதற்கிடையில் மார்ச் 18 முதல் 23-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரியில் போட்டியிட விரும்பும் கட்சியினரிடம் விருப்ப மனுக்கள் பெறப்படும் என அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து 21 வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை சசிகலா வெளியிட்டுள்ளார்.

## சென்னை மாவட்டத்தில் 47 வேட்புமனுக்கள் தாக்கல்: முதல் நாளிலேயே குவிந்த வேட்பாளர்கள்

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முதல் நாளிலேயே சென்னையில் முதல்வர் ஸ்டாலின், தவெக வில் விஜய், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அதிமுகவில் அசோக் உட்பட 47 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



வில்லிவாக்கம் தொகுதியில் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, சிட்கோ நகரில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் இல.மைதிலியிடம், தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அவருடன் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பூக்கடை குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “கடந்த 6 மாதங்களாக இந்த தொகுதியில் பயணம் செய்து வருகிறேன்.

வில்லிவாக்கம் தொகுதியில் எம்எல்ஏ அலுவலகம்கூட கிடையாது. எம்எல்ஏ.க்கள் தொகுதிக்கு என்ன செய்தார்கள் என்பதை முதல்வர் ஆய்வு செய்தாரா? என்பது தெரியவில்லை. தவெக ஆட்சிக்கு வந்ததும், 3 மாதத்துக்கு ஒருமுறை எம்எல்ஏ ஆய்வுக்கூட்டம் நடைபெறும்.

வில்லிவாக்கத்தை முன்னேற்றமான தொகுதியாக மாற்றுவோம்”என்றார். வில்லிவாக்கம் தொகுதியில் 2 சுயேச்சைகள் வேட்புமனு தாக்கல் செய்தனர். அதில் வில்லிவாக்கம் திருமலை நகரைச் சேர்ந்த 60 வயதான கந்தசாமி, மனுத்தாக்கலின் போது டெபாசிட் தொகையான ரூ.10 ஆயிரத்தை, சில்லறையாக அதிகாரிகளிடம் வழங்கினார். அவர் கொடுத்த ரூ.2, ரூ.10, ரூ.20 சில்லறைக் குவியலைக் கண்டு அதிகாரிகள் திகைத்துப் போயினர். பின்னர் அவற்றை எண்ணுவதற்கு நீண்ட நேரமானதால், அலுவலக வளாகத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. 2011 முதல்தவறாமல் அனைத்து சட்டப் பேரவை மற்றும் மக்களவைத் தேர்தல்களிலும் சுயேச்சையாக போட்டியிடும் கந்தசாமியின் இந்த ‘சில்லறை’ டெபாசிட் விவகாரம், தேர்தல் களத்தில் சுவாரசியமான பேசுபொருளாக மாறியுள்ளது.

ஆர்.கே.நகர் தொகுதிக்கு, தவெக சார்பில் பிரபல கல்வி நிறுவனத்தின் மேலாளரான மரிய வில்சன் நேற்று 2 மனுக்களை தாக்கல் செய்தார். மேலும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வெண்ணிலா தாயுமானவன் மற்றும் சுயேச்சைகள் சார்பில் 4 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய் 2 வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார். நாம் தமிழர் சார்பில் எஸ்.வெற்றி தமிழன், மாற்று வேட்பாளராக ஆர். ஆரோக்கியதாஸ், தாக்கம் கட்சி சார்பில் எம்.கீதா வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

எஸ்யூசிஐ கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜெ.செபாஸ்டின் 2 வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார். மதுரவாயல் தொகுதியில் நொளம்பூர் பாரதிசாலையில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் நாம் தமிழர் வேட்பாளர் ரேவதி 2 மனுக்களும், மாற்று வேட்பாளராக பிலோமினாவும் மனுத்தாக்கல் செய்தனர். இது தவிர சுயேச்சைகளாக என்.ஏ. மணி, வெங்கடேசன் ஆகியோர் மனுக்களை தாக்கல் செய்தனர். ராயபுரம் தொகுதியில் நாம் தமிழர் வேட்பாளர் ஏ.பாபு மயிலனும், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் சுயேட்சை வேட்பாளர் முகமத் மீராவும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 3 வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார். இதுதவிர நாம் தமிழர் சார்பில் சவுந்திரபாண்டியன்லூடர்சேத், வீரத்தியாகி விசுவநாததாஸ் தொழிலாளர்கள் கட்சியில் கே.ஏழுமலை மனுதாக்கல் செய்தனர்.

எழும்பூர் தொகுதியில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் எ.சரண்யா இம்ரான் மட்டுமே நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். இதுதவிர, விருகம்பாக்கம் தொகுதிக்கு நாதக வேட்பாளர் சந்தோஷ், ஆனந்த் (மாற்று வேட்பாளர்) மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் இசக்கிமுத்து நாடார், லுக்மான்பாபு ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

## புதுச்சேரியில் போட்டியிடும் வேட்பாளர்களில் 119 பேர் கோடீஸ்வரர்கள்

புதுச்சேரி பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 119 பேர் கோடீஸ்வரர் கள். அதிக சொத்தும், அதிக கடனும் உள்ள முதல் 3 வேட்பாளர்கள் என்டிஏ கூட்டணியைச் சேர்தவர்கள்.

இதுதொடர்பாக புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம் ஒருங்கிணைப்பாளர் ஜோசப் விக்டர் ராஜ் வெளியிட்ட அறிக்கை: புதுச்சேரி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தாக்கல் செய்யும் பிரமாண பத்திரங்களை தேர்தல் கண்காணிப்பகம் ஆய்வு செய்து அறிக்கைகளை, கடந்த 2011 முதல் 6 தேர்தல்களாக வெளியிட்டு வருகிறது.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் 30 தொகுதிகளில் 294 பேர் போட்டியிடுகின்றனர். அதில் 291 பேரின் சுய உறுதிமொழி வாக்குமூலம் ஆய்வு செய்யப்பட்டன.

இதில் 34 வேட்பாளர்கள் தேசியக் கட்சிகளையும், 63 பேர் மாநில கட்சிகளையும், 80 வேட்பாளர்கள் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகளையும், 117 வேட்பாளர்கள் சுயேச்சையாக போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்களில் ஆய்வு செய்யப்பட்ட 291 பேரில் 66 பேர் (23 சதவீதம்) மீது கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. 28 பேர் (13 சதவீதம்) மீது கொலை, கொலை முயற்சி, திருட்டு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் போன்ற கடும் கிரிமினல் வழக்குகள் உள்ளன.


இதில் 2 வேட்பாளர்கள் மீது கொலை வழக்கும், 3 பேர் மீது பாலியல் வன்கொடுமை வழக்குகளும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் வேட்பாளர்களில் 3 பேர் மீதும், என் ஆர்காங்கிரஸில் 4 பேர் மீதும், பாஜகவில் 5 பேர் மீதும், திமுகவில் 6 பேர் மீதும், அதிமுகவில் ஒருவர் மீதும் கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. வேட்பாளர்களில் 119 பேர் அதாவது 41 சதவீதம் பேர் கோடீஸ்வரர்கள்.

என் ஆர்காங்கிரஸ், பாஜக, லஜகவில் 100 சதவீத பேரும், காங்கிரஸில் போட்டியிடும் 21 பேரில் 17 பேரும் கோடீஸ்வரர்களாக உள்ளனர். புதுச்சேரி வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.7.21 கோடியாக உள்ளது.

## கேரளத்தில் சைக்கிள் ஓட்டி ராகுல் காந்தி பிரசாரம்!

காங்கிரஸ் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேரள மாநிலம் கோட்டயத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட பிறகு மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கேரளத்திற்கு இரண்டு நாள்கள் பிரசாரப் பயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி முதல் நாள் பயணத்தை சைக்கிள் ஓட்டி நிறைவு செய்தார்.

கேரளத்திற்கு ஏப்ரல் 9 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இதனையொட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து ராகுல் காந்தி கேரளத்தில் இரண்டு நாள்கள் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

முதல் நாளான பத்தினம்திட்டா, புதுப்பள்ளி, கோட்டயம் உள்ளிட்டப் பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். பிரசாரத்தின் ஒரு பகுதியாக கோட்டயம் பகுதியில் ராகுல் காந்தி மிதிவண்டி ஓட்டினார். இது தொடர்பான புகைப்படங்களை காங்கிரஸ் கட்சி தங்களின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. கோட்டயத்தின் பிரசாரத்தின்போது பேசிய ராகுல் காந்தி, ஆளும் இடது ஜனநாயக முன்னணியை கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

2016 தேர்தலின்போது ரப்பர் விலையை ரூ. 250 ஆக உயர்த்துவதாகக் கூறியிருந்ததாகவும், ஆனால் பினராயி விஜயன் அரசு கடந்த 10 ஆண்டுகளாகவே அதனைச் செய்யவில்லை எனவும் விமர்சித்தார். இந்த முறையுன் பொய்யான வாக்குறுதிகளையே இடதுசாரி அறிவித்துள்ளது.

ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சி அமைத்ததும் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்திலேயே ரப்பர் விலையை ரூ. 250 ஆக நிர்ணயம் செய்வோம் என உறுதி அளித்தார்.

மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியம் ரூ. 3,000 ஆக உயர்த்தப்படும். தனது தாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனால், நான் இங்கு எந்தவித பதற்றமும் இல்லாமல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளேன். ஏன் என்றால், கேரளத்தைச் சேர்ந்த செவிலியர் என் தாயை பராமரித்து வருகிறார் என நெகிழ்ச்சியுடன் பேசினார்.

## அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட 19 செல்லாத ஓட்டுகள் திமுகவில் போட்டி: பழனிசாமி கிண்டல்

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்கள் திமுகவில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட 19 பேர் திமுகவில் போட்டியிடுகின்றனர். இந்த செல்லாத ஓட்டுகளால் எந்த பயனும் இல்லை.



அதிமுக சொந்தக்காலில் நிற்கிறது. மக்களை நம்பி தேர்தலில் போட்டியிடுகிறோம். ஆனால், கூட்டணியை நம்பி திமுக உள்ளது. தமிழ்நாட்டுக்கும், டெல்லிக்கும் இடையேதான் போட்டி என்று ஸ்டாலின் கூறுகிறார். தேர்தல் தமிழ்நாட்டில் நடக்கிறதா, டெல்லியில் நடக்கிறதா? பொம்மை முதல்வராக ஸ்டாலின் உள்ளார். அவருக்கு சுயமாக சிந்திக்கும் திறனில்லை.

எங்களுக்கு எதிரி திமுகதான். மக்கள் விரோத திமுக ஆட்சியை வீழ்த்துவோம். இந்த தேர்தல் திமுகவுக்கு இறுதி தேர்தல். திமுக என்றால் கருணாநிதி குடும்பம் மட்டுமே. இந்த குடும்ப ஆட்சி நாட்டுக்கு தேவையா?. வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இந்த முறை திமுகவுக்கு மக்கள் நிச்சயமாக தகுந்த பாடத்தை புகட்டுவார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி 210 இடங்களில் வெற்றி பெறும். அதிமுக தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

கண்களை இமை காப்பதுபோல் சிறுபான்மையினரை பாதுகாத்தது அதிமுக அரசு. சிறுபான்மையின மக்களுக்கு ஏராளமான திட்டங்களை அதிமுக நிறைவேற்றியது. அப்துல் கலாமுக்கு வாக்களித்து குடியரசுத் தலைவராக்கியது அதிமுக. ஆனால், அப்துல் கலாமுக்கு எதிராக வாக்களித்தது திமுக. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் வந்த ஆம்புலன்ஸ்: பழனிசாமி பேசிக்கொண்டு இருந்தபோது அந்த வழியாக ஆம்புலன்ஸ் ஒன்று வந்தது. தொண்டர்கள் வழி விட்டு, ஆம்புலன்ஸ் செல்வதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு பழனிசாமி கேட்டுக் கொண்டார். ஆம்புலன்ஸ் கடந்து சென்றதும் பிரச்சாரத்தை தொடர்ந்தார்.

## மயிலாப்பூரில் பிரச்சாரத்தை பழனிசாமி தொடங்கியது ஏன்? - உதயநிதி காரணம் சொல்கிறார்

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மயிலாப்பூரில் இருந்து தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கியது ஏன் என்பதற்கு துணை முதல்வர் உதயநிதி காரணம் சொல்லியிருக்கிறார்.



தேர்தல் பிரச்சாரத்துக்காகக் காஞ்சிபுரம் வந்த துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் காஞ்சிபுரத்தில் அண்ணா இல்லத்துக்குச் சென்றார். தொடர்ந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

தேரடி அருகே அவர் பேசியதாவது: இப்போது நடக்கும் தேர்தல் டெல்லிக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையில் நடக்கும் தேர்தல். மத்திய பாஜக அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்துக்கு எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்படவில்லை. தமிழ்நாடு என்ற பெயர் கூட அந்த அறிக்கையில் இடம் பெறவில்லை.

அண்ணா பிறந்த இந்தக் காஞ்சிபுரத்தில் இருந்து நான் எனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளேன். அதேபோல், முதல்வர் ஸ்டாலின் திருவாரூரில் இருந்து தனது பிரச்சாரத்தைத் தொடங்க உள்ளார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தனது பிரச்சாரத்தை எங்கிருந்து தொடங்கினார் தெரியுமா?

பாஜக போட்டியிடும் மயிலாப்பூரில் இருந்துதான் அவர் தனது பிரச்சாரப் பயணத்தை ஆரம்பித்துள்ளார். நமக்குக் கொள்கைத்தலைவர்கள் அண்ணா, கருணாநிதி என்றால் அவருக்குக் கொள்கைத்தலைவர்கள் மோடியும், அமித் ஷாவும்தான். அதனால்தான் அவர் தனது பிரச்சாரத்தை பாஜக போட்டியிடும் மயிலாப்பூரில் இருந்து தொடங்கினார்.

இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் தமிழக விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் பாஜகவிற்கும் நடக்கும் போராட்டம். தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுக்கவும், சமூக நீதியைக் காக்கவும் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு மக்கள் பெருவாரியாக வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# வந்தவாசி ரங்கநாத பெருமாள் கோவிலில் பங்குனி பிரம்மோற்சவ தேரோட்டம்

**வந்தவாசி, ஏப்.1:**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகரில் உள்ள மிகவும் பழமையான ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோவிலில் பங்குனி மாதம் பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. பிரம்மோற்சவத்தின் ஏழாம் நாளான இன்று முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது.

இதையொட்டி ரங்கநாத பெருமாளுக்கும் ரங்கநாயகி தாயாருக்கும் அதிகாலை முதல் திறப்பு அபிஷேகங்கள் ஆராதனைகள் நடைபெற்றன. பின்னர் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரங்கநாத பெருமாள் மற்றும் ரங்கநாயகி தாயார் தேரில் அமர்த்தப்பட்டு பல்வேறு பூஜைகள் செய்யப்பட்டு தேர் வடம் பிடிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து 'கோவிந்தா கோவிந்தா' என்று பக்தி முழக்கம் எழுப்பியபடி தேர் இழுத்தனர். ரங்கநாத பெருமாள் கோவிலில் இருந்து புறப்பட்ட தேர், காந்தி சாலை, அச்சரப்பாக்கம் சாலை, கே ஆர் கே தெரு, சன்னதி தெரு வழியாக சென்று நிலையை அடைந்தது.

# த.வெ.க வேட்பாளர் மீது பாலியல் வன்கொடுமை வழக்கு



**திருவள்ளூர், ஏப்.1:**

நடிகர் விஜயின் தவெக கட்சியின் பூந்தமல்லி வேட்பாளர் பிரகாசம் (எ) குட்டி மீது பாலியல் வன்கொடுமை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் தெற்கு மாவட்டச்செயலாளராக இருப்பவர் தான் பிரகாசம் , இவர் 6 மாதத்திற்கு முன்னர் கட்சி நிர்வாகியின் திருமண விழாவில் கலந்து கொண்ட போது தவெக பெண் நிவாகியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்து கட்சித் தலைமையிடம் 6 மாதங்களுக்கு முன்பே புகாரளித்தும் நடவடிக்கை எடுக்காத நிலையில், அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அப்பெண் கூறியிருக்கிறார். இதற்கிடையில் திருவள்ளூர் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் அந்த பெண் தனது கணவருடன் சேர்ந்து பாலியல் சீண்டல் புகார் அளித்திருக்கிறார். இதனையடுத்து பிரகாசம் மீது திருவள்ளூர் நகர போலீசார் 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தவெக பெண் நிர்வாகிக்கு பதவி கொடுக்காமல் விட்டதால் தன் கணவர் மீது பொய் புகார் அளித்துள்ளதாக பிரகாசம் மனைவியும் எஸ்.பி அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

# கள்ளழகர் கோவிலில் திருக்கல்யாண திருவிழா தொடங்கியது



**மதுரை, ஏப்.1:**

மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் உள்ள கள்ளழகர் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் திருக்கல்யாண திருவிழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.

விழாவை முன்னிட்டு நேற்று மாலையில் கள்ளழகர் பெருமாள், தேவியர்களுடன் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினார். பின்னர் மாலையில் உற்சவர் ஸ்ரீதேவி, பூதேவியர்களுடன் கள்ளழகர் பெருமாள் சகல பரிவாரங்களுடன் புறப்பாடாகி ஆடி வீதிகள் வழியாக வந்து மண்டபத்தில் எழுந்தருளினார்.

அங்கு பட்டர்களின் வேத மந்திரங்களுடன், விசேஷ பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து அதே பரிவாரங்களுடன் சுவாமி புறப்பாடாகி சென்று இரவு கோவிலுக்குள் இருப்பிடம் சேர்ந்தார். விழாவில் இன்றும், நாளையும் மாலையில் சுவாமி அதே மண்டபத்தில் எழுந்தருள்வார்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வாக 1-ந்தேதி அன்று காலையில் திருக்கல்யாண திருவிழா மங்கள இசையோடு, பட்டர்களின் வேத மந்திரங்களுடன் நடைபெறுகிறது.

அன்று காலை காலை 9 மணிக்கு மேல் 9.20 மணிக்குள் பெரியாழ்வார் முன்னிலையில் ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாண சுந்தரவல்லி தாயார் மற்றும் ஆண்டாள் ஆகிய 4 பிராட்டிமார்களையும் ஒரே நேரத்தில் கள்ளழகர் பெருமாள் ஒரே மேடையில் மணக்கிறார்.

தொடர்ந்து 2-ந்தேதி மஞ்சள் நீர் சாற்று முறையுடன் விழா நிறைவடைகிறது.

# நாகேஸ்வரசுவாமி கோயிலில் தேரோட்டம் கோலாகலம்!



**தஞ்சாவூர், ஏப்.1:**

நாகேஸ்வரசுவாமி திருக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

நாகேஸ்வரர் -பிரகன்நாயகி திருத்தேரில் எழுந்தருள ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நாககேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான இந்த தலத்தில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திர பெருவிழா 13 நாள்களுக்குச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதுபோலவே, இவ்வாண்டும் இவ்விழா கடந்த 23 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவினை முன்னிட்டு தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி திருவீதியுலா நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று நடைபெற்றது.

உற்சவர் நாகேஸ்வர சுவாமிக்கும், பிரகன்நாயகியம்பிகை, திருத்தேரில் எழுந்தருளத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுந்து வந்தனர்.

# நாயன்மார்களுடன் வீதி உலா வந்த கபாலீஸ்வரர்

**சென்னை, ஏப்.1:**

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனிப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வான அறுபத்து மூவர் விழா விமரிசையாக நடைபெற்றது. 63 நாயன்மார்கள் வீதி உலா வந்து அருள்பாலித்தனர்.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பங்குனிப் பெருவிழா கடந்த 23-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதிகார நந்தி, வெள்ளி ரிஷப வாகனம் என தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

கடந்த 29-ம் தேதி தேரோட்டம் நடைபெற்றது. இந்நிலையில், விழாவின் 8-ம் நாளான நேற்று அறுபத்து மூவர் விழா பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது. விழாவின் தொடக்கமாக, மதியம் 3.30 மணி அளவில் திருஞானசம்பந்தர் எழுந்தருளி, எலும்பை பூம்பாவையாக்கிய அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, அலங்கரிக்கப்பட்ட வெள்ளிச் சப்பரத்தில் கபாலீஸ்வரர் எழுந்தருள, அவரைத் தொடர்ந்து 63 நாயன்மார்களும் தனித்தனி சப்பரங்களில் வீதி உலா வந்தனர்.

விநாயகர் முன்னே செல்ல, கற்பகாம்பாள் உடனுறை கபாலீஸ்வரர், முருகப் பெருமான், சண்டிகேஸ்வரர், முண்டகக்கண்ணி அம்மன், அங்காள பரமேஸ்வரி மற்றும் வீரபத்திரர் அணிவகுத்து வந்தனர்.

கடைசியாக, மயிலை காவல் தெய்வமான கோலவிழியம்மன் வீதி உலாவுடன் விழா நிறைவு பெற்றது. மாட வீதிகளில் அறுபத்து மூவர் வீதி உலா வரும் காட்சியைக் காண பிற்பகலில் இருந்தே சென்னை மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர்.

மயிலாப்பூர் மட்டுமின்றி சுற்றியுள்ள அனைத்து பகுதிகளிலும் தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனத்தினர் ஆங்காங்கே பந்தல் அமைத்து பக்தர்களுக்கு அன்னதானம், நீர் மோர், பானகம், குளிர்பானங்கள் வழங்கினர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர்.

கோயிலைச் சுற்றி சிசிடிவி கேமராக்கள், கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்து போலீஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். பங்குனிப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான திருக்கல்யாணம் இன்று (ஏப்.1) இரவு 8.30 மணிக்கு நடைபெற உள்ளது.






## நலம் தரும் மருத்துவம்

### ஆரோக்கியம் தரும் சிவப்புப் பழங்கள்!



இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த, லைகோபீன் (LYCOPENE), ஆந்தோசயனின் (ANTHOCYANINS) மற்றும் பொட்டாசியம் நிறைந்த சிவப்பு நிற பழங்கள் சிறந்தவை. இவை ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, வீக்கத்தைக் குறைத்து, கொழுப்பைக் குறைப்பதன் மூலம் இதயத்தை நோய்களிலிருந்து பாதுகாக்கின்றன. அந்த வகையில் இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சிவப்பு பழங்கள் பற்றி பார்ப்போம்.

**தக்காளி:** தக்காளி இதயத்திற்கு நலம் சேர்க்குமா என்று ஆச்சரியப்படலாம். வாரத்திற்கு ஐந்து முறைக்கு மேல் தக்காளி போன்ற லைகோபீன் அதிகம் உள்ள உணவுகளை உட்கொள்வது, இதய நோய் அபாயத்தை 26 சதவீதம் குறைக்கும் என்பது அமெரிக்காவின் பாஸ்டனில் உள்ள டப்ட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இதில் உள்ள லைகோபீன் (LYCOPENE) என்ற ஆன்டி-ஆக்ஸிடன்ட், பொட்டாசியம் மற்றும் நார்சத்து, கெட்ட கொழுப்பை (LDL) குறைத்து, இரத்த அழுத்தத்தை சீராக்கி, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

**மாதுளை :** ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் (புனிகலகின்ஸ்) மற்றும் அந்தோசயனின்கள் அதிகம் உள்ளதால், இது தமனிகளில் ஏற்படும் அடைப்பைத் தடுத்து இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. மேலும் மாதுளை ரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், கெட்ட கொழுப்பை (LDL) குறைக்கவும், ரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், தமனிச் சுவர்களில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும் உதவுகிறது. மாதுளைச் சாறு தமனிகளில் அடைப்பு உருவாவதைக் குறைத்து, அவற்றின் நெகிழ்வுத்தன்மையைப் பராமரிக்கும் திறனைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

**செர்ரி:** செர்ரிஜூஸ், உலர்ந்த செர்ரி, புளிப்பு செர்ரி மற்றும் இனிப்பு செர்ரி என அனைத்து செர்ரிகளும் சுவையானவை. அவற்றில் ஆந்தோசயின்கள் நிறைந்துள்ளதால், இது இதயத்தின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது மற்றும் ரத்த நாளங்களை பாதுகாக்க உதவிடும். இதில் உள்ள அதிகப்படியான ஆன்டிஆக்ஸிடன்ட்கள், பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து ஆகியவை இதய நோய்களைத் தடுக்கவும், வீக்கத்தைக் குறைக்கவும், இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்கவும் உதவுகின்றன.

- நாளையும் தொடரும்

# கொழுப்பு பிரச்னையால் ஆண்களை விட பெண்களுக்கே அதிக பாதிப்பு!

30 முதல் 49 வயதுக்குள்பட்ட ஒவ்வொரு 10 இந்தியப் பெண்களில் 5 முதல் 6 பேருக்கு வயிற்றுப் பகுதியில் அதிகப்படியான கொழுப்பு பிரச்னை இருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயது முதிர்வு, நகர்ப்புற வாழ்க்கைமுறை, அதிக வருமானம் காரணமாக ஏற்படும் உணவுப் பழக்க மாற்றங்கள் மற்றும் அதீத அசைவ உணவுப் பழக்கம் ஆகியவற்றின் காரணமாக வயிற்றுப் பகுதியில் அதிகப்படியான கொழுப்பு சேர்வதாகவும் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.



'நீரிழிவு மற்றும் வளர்சிதை மாற்ற நோய்க்குறி: மருத்துவ ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள்' என்ற இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில் இந்தியாவில் ஆண்களை விட பெண்களுக்கே இடுப்புச் சுற்றளவு பெரிதாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இது இந்தியாவில் ஒரு ஆழமான அவசரநிலை பிரச்னை தொடர்பான அறிகுறிகள் தென்படுவதாக எச்சரித்துள்ளது. மேலும், இதில் பதின் வயதினர் மற்றும் இளைஞர்கள் குறிப்பாக பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இது, ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக ஏற்படும் வாழ்க்கைமுறை மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது.

வயிற்றுப் பகுதியில் கொழுப்பு சேர்வதால் இதய நோய், நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு, கல்லீரல் கொழுப்பு நோய் (ஃபேட்டி லிவர்), வகை 2 நீரிழிவு நோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் போன்ற குறிப்பிட்ட சில புற்றுநோய்கள் உள்பட பல உடல் உறுப்புகள் சார்ந்த நோய்களுடன் தொடர்புடையதாக இருப்பதால், இவ்வகை உடல் பருமனை அளவிடுதல் பற்றிய அவசரத் தேவையை இந்த ஆய்வு தெரியப்படுத்துகிறது.

வெள்ளை இனத்தவர்களுடன் இந்தியர்களை ஒப்பிடுகையில், ஆசிய இந்தியர்கள் குறைந்த பி.எம்.ஐ. அளவில் அதிக உடல் கொழுப்பைக் கொண்டிருப்பதால், அவர்களின் உடல்பருமனை பி.எம்.ஐ. துல்லியமாகக் கணக்கிடுவதில்லை. எனவே, உடல் பருமனில் இருக்கும் கவனத்தை வயிற்றில் உள்ள கொழுப்பு சார்ந்த பருமனுக்கு மாற்ற வேண்டும்.

இதில், தோலுக்கு கீழும் கல்லீரல் மற்றும் கணையம் போன்ற உறுப்புகளைச் சுற்றியும் உள்ள அதிகப்படியான கொழுப்பும் அடங்கும். இவை வளர்சிதை மாற்ற மற்றும் இதய நோய் தொடர்பான பிரச்னைகளின் முக்கியக் அறிகுறிகளாகும்.



பி.எம்.ஐ. கணக்கீடுக்கு பதிலாக இதய வளர்சிதை பற்றிய பிரச்னைகளை மதிப்பிட இடுப்புச் சுற்றளவு மற்றும் இடுப்பு - உயர விகிதத்தைக் கணக்கிட நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

வயிற்றில் சேரும் கொழுப்பு சார்ந்த உடல் பருமன் பிரச்னை நகர்ப்புறங்கள் அல்லது வசதி படைத்த மக்களிடையே மட்டுமின்றி கிராமப்புறங்களிலும், நடுத்தர மக்களிடமும் கூட அதிகரித்து வருவதாக இந்த ஆய்வு குறிப்பிடுகிறது. தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (2019-2021) தரவுகளின்படி

இந்தியாவில் சுமார் 40% பெண்களும், 12% ஆண்களும் இந்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஒப்பீடுகள்



என்னடி மகாராணி
இன்னைக்கும் நீ
வேலைக்கு போகலியா
என்ற குரலோடு வீட்டுக்குள்
நுழைந்தான் கணேசன்,,,

கணேசனை ஏறெடுத்து
பார்த்த கனகா "நான்
என்னங்க பன்றது
எங்கப்போனாலும்
பொங்கல் கழிச்சு
வரச்சொல்றாங்க,,,
பொங்கல் கழியட்டும் நான்
போறேன் அதுவரைக்கும்
பொறுத்துக்குங்க,,,"

"நீ எதுக்கும் லாயக்கில்லடி
ஒவ்வொருத்தி எப்படி
சம்பாதிக்கிறா நீ காரணம்
சொல்லிட்டேயிரு,,,
அந்த பில்லிடிங்கல போயி
சிட்டாளு வேல கேக்கலாமே
அதுக்குமா பொங்கல்
தீபாவளின்னு
சொல்வானுங்க"

"ஏங்க இவ்வளவு
பேசுறீங்களே நீங்கதான் ஒரு
வேல பாத்துட்டு வரலாமே
நான் போவேன்ல"

"ஆமா இவ பெரிய
அப்பா டக்கரு இவளுக்கு
வேலப்பாக்க ஒரு ஆளு
வேணும்,,,அடி போடி அந்த
முக்கு வீட்டு பார்வதியை
பாரு ஒரு நாளைக்கு
வீட்ல இருக்கால பனியன்
கம்பேனி கேண்டின்ல வேல
பாத்துட்டு சாயங்காலம்
வரும்போது வீட்டுக்கு
டிபன் எடுத்துட்டு வாரா,
நீ அவளமாதரியெல்லாம்
வரமுடியாதுடி நான் போயி
ஒன்ன கட்டினேன்பாரு
எனக்கு இதெல்லாம்
தேவதான்,,,"

"இதாபாருங்க,,,இப்படி
பேசினா எனக்கு கெட்ட
கோபம் வரும் அவ இப்படி
இவ அப்படின்னு என்கிட்ட
பேசாதீங்க"

"என்னடி வாய் நீளுது
பேசினா என்ன
செய்வே,,உண்மையை
சொன்னா
தாங்கமுடியலயா,,,"

"அப்போ நான் சொல்லுட்டா
அந்த பக்கத்துவீட்டு
கோபாலும்தான்
அந்த கார்மெண்ட்ஸ்
கம்பேனில சூப்பர்
வைசர் வேலப்பாக்குறான்
பைக் வாங்கி ஓட்டுறான்
புள்ளைங்கல கான்வென்ட்
ஸ்கூலில் படிக்க
வைக்கிறான் நீ என்ன
பன்ற மார்கெட்ல போயி
மூட்ட தூக்குற நான் அத
கேக்குறேனா,, நீ ஏன்
அவனமாதரி இல்லன்னு
சொல்லி இருப்பேனா,,,
ஒவ்வொருத்தருக்கும் என்ன
முடியுமோ அததான் செய்ய
முடியும்
அவளமாதரி நீ இல்ல
இவளமாதரி நீ இல்லன்னா
எப்படி,,, எல்லாரும்
ஒரே மாதரி எப்படி
இருக்கமுடியும்,,,?
பேசாம இருங்க இன்னும்
ஒரு வாரம்தானே நான்
வேலைக்கு போய்
தொலைக்கிறேன் நீ
நிம்மதியா இருக்கலாம்,,,"

"சரி சரி என்னமோ
பன்னித்தொல வாயி நீளுது
அடக்கு இல்லன்னா
அடக்குவேன்,,"னு
சொன்னாலும் மனைவி
சொல்வதின் உண்மை
உணர்ந்த கணேசன்
சட்டையை மாட்டிக்கொண்டு
வெளியே சென்றான்
அமைதியாக,,,
புருசன் போவதையே
பார்த்துக்கொண்டிருந்த
கனகா, பாவம் அவரும்தான்
என்ன செய்வார்,
கிராமத்திலிருந்து
நல்லா வாழலாமுன்னு
நகரத்துக்கு வந்து
நரகத்தில் மாட்டிக்கிட்டோம்,
ரெண்டுப்பேரும்
உழைச்சாதானே
வாழமுடியுமுன்னு, தனக்குத்
தானே பேசிக்கொண்டாள்.

**-நாகை ஆசைத்தம்பி**

# எது உண்மையான செல்வம்




நம்மைப் பெரியவர்கள் ஆசிர்வாதம் செய்யும் பொழுது 16 செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்று சொல்லி நம்மை ஆசீர்வதிப்பது உண்டு. இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் நாம் அனைவருக்கும் நிறைய தேவைகள் உள்ளது. அது ஆட்களுக்கு ஏற்ப மாறுபடும்.
நல்லூர் என்ற கிராமத்தில் நடந்த ஒரு சிறிய சம்பவம். ராமு-சோமு என இரு நண்பர்கள் இருந்தனர். இவர்களில் ராமு என்பவர் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர். சோமு மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். இருவரும் ஒரே பள்ளியில் படித்து வந்தனர். ராமு எப்பொழுதும் தன்னிடம் இருக்கும் வீடு, பணம் ,தோட்டம், துறவு என அனைத்தையும் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டு இருப்பான். இதைக் கேட்கும்போது தன்னிடம் இவ்வளவு செல்வம் இல்லையே என்று சோமுவும் மிகவும் வருத்தப்பட்டது உண்டு.
ஒருநாள் தன்னுடைய வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் வந்தார். அவர் பாடம் எடுக்கும்போது சொன்னார் ஒருவருக்கு என்றும் அழியா செல்வம் என்பது அவர் பெற்ற கல்வி என்று. அதற்காக திருக்குறள் ஒன்றையும் மேற்கோள் காட்டினார்.
“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை”. அதிகாரம் - 40 - கல்வி
இதனைக்கேட்ட சோமு கல்வி ஒருவரின் வாழ்க்கையை மாற்றுமா ! என்று நினைத்தான் . தான் மிகவும் கடினப்பட்டு உழைத்து சோமு ஒரு மாவட்டத்தின் ஆட்சியராகப் பொறுப்பேற்றான். தன்னால்



இயன்றவரை கல்வி பெற முடியாத நிலையில் உள்ள மற்றவர்களுக்கு உதவிகளையும் செய்து வந்தான். இதன்மூலம் அரசின் உயரிய விருதுகளையும் பெற்றான்.
இப்பொழுது ராமுவுக்கு வருவோம் .
எப்பொழுதும் தன்னுடைய சொத்துக்களை பட்டியலிட்ட ராமு, குறைந்த அளவு கல்வியை மட்டுமே கற்று தன்னுடைய சொத்துக்களை மேலும் மேலும் பெருக்க முடியாமல் தனக்கு என்று ஊரில் இருந்த பெரிய பணக்கார குடும்பம் என்ற பெயரையும் இழந்துவிட்டான். இறுதியாக அவர் இன்று ஊரில் யாரும் மதிக்க முடியாத அளவிற்கு சென்று விட்டான்.
இந்த சமயத்தில் சோமு தன்னுடைய நல்லூர் கிராமம் இருக்கும் அதே மாவட்டத்திற்கு ஆட்சியராக இடமாற்றம் கிடைத்து வந்தார். பிறகு தன்னுடைய பழைய பள்ளிக்குச் சென்று தனக்கு கற்றுத் தந்த ஆசிரியரைப் பார்த்து வரவேண்டுமென்று சென்றார். அப்பொழுது அந்த ஆசிரியருக்கு மிகவும் ஆச்சரியம். சோமு இப்போது மாவட்ட ஆட்சியராக இங்கு வந்திருக்கிறார் என்று ஆசிரியர் மாணவரிடம் சொன்னார் .கல்வி என்ற ஒன்றின் மூலம் தன்னுடைய ஏழ்மையை மாற்றியவர் இவர் என்று மற்ற மாணவர்களுக்கு உதாரணமாக சோமுவை காட்டினார் . கல்வி என்பது என்றும் அழியாச் செல்வம் என்றும் கூறி மாணவர்கள் மத்தியில் சோமுவை உதாரணமாக காட்டினார் . இப்போது உங்களுக்கே புரிந்திருக்கும் எது உண்மையான செல்வம் என்று.
நன்றி

**- கா.ச.சோமேஸ்வரன்.**
ஸ்ரீ வித்யா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, திருஈங்கோயிமலை, முசிறி.




# ஊர்மிளையின் ஊமைமனம் 5



**கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## ஊர்மிளையின் ஓவியம்

அன்பருடன் பேசியதில் தன் மனம் லேசானது போல் உணர்ந்தாள் ஊர்மிளா. இந்தக் காலத்தின் நீட்சி குறையாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். அவளது நினைவில் காலம் சிரித்தது.
துன்பம் வரும்போது காலம் நீட்சி அடைதலும், இன்பங்கள் வரும் பொழுது குறுகுவதும் தான் காலத்தின் உண்மை தன்மையா?
“நிலவுலகில் பல கலைகளையும் உன் போல் அறிந்தவர் அரியரன்றோ?”என்றாரே அன்பர் அன்று.
“ஆம்! நாம் அன்று வரைந்த பட்டாபிஷேக ஓவியம் எங்கு உள்ளது? என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.” என்று நினைத்தாள்.
அப்போது இலக்குவன் சாரளத்தின் வழிநோக்க ஒருகொடி, மரத்தின் மீது படர்வதைக் கண்டு மெல்ல நகைத்தான்.
“ஆஹா! அன்று சொன்னோமே! பெண் குலமே தியாகம் செய்குலமன்றோ? அதற்கும் ஊர்மிளா அளித்த பதில் எப்படி அறிவுபூர்வமாக இருந்தது!”
பெண்ணும் கொடியும் ஒன்றாம். தன்னலம் பேணாமல் தாங்கிப் பதியை அமுதமென நினைக்குமாம். இது சீதைக்கு அல்லவா பொருந்தும். பதியை நம்பி வந்த ஊர்மிளையை நாம் அணைத்ததும் இல்லை என்று வருந்தினான். ஏன் அப்படி நடந்து கொண்டாள்? என்ற ஒரு கேள்வி எழுந்தாலும், அவளிடம் கேட்க வேண்டும் என்று தோன்றினாலும், கேட்க மனம் வரவில்லை. “ஏன் அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது!” என்பாள்.
இன்று அவளிடத்தில் தனித்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தால் கண்டிப்பாகக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் இலக்குவன்.
அப்போதுதான் அவனுக்கும் நினைவு வந்தது ஊர்மிளை வரைந்த பட்டாபிஷேக ஓவியம். அதனைத் தேடி எடுக்கத் தானும் அந்த அறைக்குள் நுழைந்தான். இதற்குள் ஊர்மிளை அவ் ஓவியத்தைக் கண்டு, பிரியமோடு கொணர்ந்தாள்.
அன்போடு அதனை வாங்கியவன் ஓவியத்தில் ஒவ்வொன்றும் உயிர் கொண்ட உண்மை தன்மை உள்ளதாகச் சித்தரிக்கப்பட்டு இருப்பதைக் கண்டான்.
“ஆம்! இவளது நினைவு அந்த தருணத்தை எடுத்துச் செல்ல தயங்கியவன் நினைத்துக் கொண்டான். ”சீதையை யார் கொண்டு போயிருக்க கூடும் என்று எண்ணும்போது ஊர்மிளை மட்டும் பார்த்து இருந்தால் உண்மையானவனை ஓவியமாக வரைந்து காட்டி இருப்பாள்!” என்று தான் நினைத்ததை அவளிடம் கூற நாணியவன்,
“ ஊர்மிளா! இவ் ஓவியத்தில் நம் குடும்பம் மட்டுமே இருக்கிறது”.
“ஆனால் பட்டாபிஷேகத்துக்கு வந்தவர்கள் கோடானுகோடி பேர்கள்!” என்றாள் ஊர்மிளா.
“ஊர்மிளா எனக்கு ஒரு உதவி செய்வாயா?” என்றான் இலக்குவன். அவன் குரலில் எங்கோ ஒரு மூலையில் ஏக்கம் குடி கொண்டிருப்பது போல் தோன்றவே “சொல்லுங்கள் அன்பரே! விரைவாக நானும் முடிப்பேன் விரைவாக!” என்றாள்.
“ஆஹா! அன்று சொன்னது போலவே நீ வாணி தான்! விரைவாக என்று ஆரம்பித்து விரைவாக என்று முடிக்கிறாயே!” என்று ரசித்தவன் “நீ பார்த்த பட்டாபிஷேக நிகழ்வை ஓவியமாக வரைந்து தருகிறாயா?” என்றான்.
“ஆம்! அவர்தான் அன்று நித்ராதேவிக்குக் கட்டுப்பட்டு உறங்கி விட்டாரே! இதில் தன் தவறுக்குக் காலம் தரும் அன்பளிப்பாய் இதனை அவருக்கு வரைந்து பரிசாகக் கொடுத்தால் நமக்கும் இன்பம் தானே!” என்று நினைத்தாள்.
“கண்டிப்பாக நான் முடித்துத்



தருகிறேன்!” என்றாள்.
“அன்றைய அன்னையர், இந்த ஓவியத்தில் இருக்க மாட்டார்கள் அன்பரே! மேலும் அங்கதன், அனுமன், வசிஷ்டர், பரத்வாஜ் முனிவர், விபீஷணன், சுக்ரீவன், குகன், பரதன், சத்ருக்கனன் இருப்பார்கள்!” என்றாள்.
“ஆமாம்! எல்லாரோடும் சேர்ந்து அந்தப் பட்டாபிஷேகம் நிகழ்ச்சியை முழுவதும் பார்க்க என்னால் முடியாமல் போயிற்று.”
“கவலைப் படாதீர்கள்! அவற்றை நேரில் பார்த்த மாதிரியே நான் ஓவியம் வரைந்து தருகிறேன்!” என்றவள் சீதையைக் கண்டு வந்ததையும் சொன்னாள்.
“நாளைக்குக் காலையில் இருவரும் அத்தாணி மண்டபத்தில் அவர்களைப் பார்க்கலாம்!” என்று சொன்னவள், இரவு போஜனத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள் ஊர்மிளை.
இரவு போஜனம் முடிந்து தாம்பூலத்தை மடித்துக் கொண்டு லக்குவனிடத்தில் ஊர்மிளை மெதுவாக வனத்தில் நடந்த நிகழ்வுகளைக் கேட்க தொடங்கி “பஞ்சவடியில் நீங்கள் அமைத்த பர்ணசாலை யாரிடம் கற்றீர்கள்?” என்றாள்.
“என்ன! உனக்கு எப்படி இது தெரியும்? இந்தக் கேள்வியை அன்றே கேட்டவர் ராமண்ணா அல்லவா?” என்றான்.
“கேள்வி அவரிடம் இருந்து பிறந்ததாகவே இருக்கட்டும்! பதிலைச் சொல்லுங்கள்!” என்றாள் ஊர்மிளை.
“ஆம்! ஊர்மிளா! இயற்கை அழகில் மயங்கி இருவரும் வருவதற்குள் சித்திரக் கூடத்தில் ஒரு பர்ணசாலை அமைத்தேன் அல்லவா? அதற்கே வியந்து போனார்கள் ராமண்ணா! அதன் பின் தான் பஞ்சவடியிலும் நானே அமைத்தேன்!” என்றான்.
“உங்கள் சேவையைப் பாராட்டி உம்மைத் தந்தை என்றாரே ராமண்ணா!” என்றாள்.
வெட்கத்துடன் சிறிது நெளிந்தான் இலக்குவன். “பஞ்சவடியில் உன்னைப் பற்றியும் உன் செயல் திறமை பற்றியும் எண்ணினேன்!” என்றான்.
“எதற்காக நினைத்தீர்கள்? நீங்கள் தான் கோபமாக அல்லவா சென்றீர்கள் என் நினைவே வேண்டாம் என்று!”
“உண்மைதான் ஊர்மிளா! ஆனாலும் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லி இருந்தேன் அல்லவா? எனக்குத் தமையனின் வாழ்வு தான் வாழ்வு என்று. எனவே அனைத்தையும் தெரிந்து கொண்ட பின்னும் எனக்கு எவ்வாறு விடை கொடுப்பாய் என்றுதான், அதனை மிகப்பெரிய பிரச்சனையாக நினைத்தேன் நான்!”
“ஆனால் நீயோ வேறு மாதிரி நடந்து கொண்டாய் ஊர்மிளா. உன்னிடத்தில் எனக்கொரு கேள்வி உண்டு. கேட்டால் கோபிக்காமல் பதில் சொல்வாய் அல்லவா?” என்றான்.
ஊர்மிளைக்கு அந்தக் கேள்வி தெரியும் என்பதால் “கேள்வி கேளுங்கள் கோபப்பட மாட்டேன். என் அறிவுக்குத் தெரிந்த வரைப் பதில் சொல்கிறேன்!” என்றாள்.
உணர்ச்சி வசப்பட்ட லக்குவனன் “நீயேன் அன்று அப்படி நடந்து கொண்டாய்?” என்றான்.
“இது என்ன புதிராக உள்ளது உமது கேள்வி? சரியான கேள்விக்குப் பதில் உண்டு, கேள்வி புரியவில்லை என்று இத்துடன் முடித்துக் கொள்கிறேன், இல்லை இல்லை அடக்கிக் கொள்கிறேன்.”,
“உண்மையாகவே நான் கேட்கும் கேள்வி புரியவில்லையா? திரும்பவும் கேட்கட்டுமா?” என்று என் மனம் இடித்து காட்டுகிறது ஊர்மிளா.
“அப்படியானால் கேள்வியைக் கடந்து விடலாமே! ஏன் அதற்குப் பதில் தேடிக்கொண்டே இருக்கிறீர்கள்?”
“மனம் பொறுக்க மாட்டேன் என்கிறது!”
“ அப்படியானால் கேள்வியைச் சரியாக கேளுங்கள் பதில் சொல்கிறேன்!”
தொண்டையை கனைத்துக் கொண்டு “நீயேன் அன்று அலங்காரவல்லியாய் ஏதோ இந்த ஏகபோக வாழ்வை அனுபவிக்கும் ஆசையுடையவளாய் நடந்து கொண்டாய்!” என்றான்.
“என் நினைவே வரக்கூடாது உமக்கு என்றுதான். என் நினைவு வரும் போதெல்லாம் இக்காட்சி உம் மனதில் வந்தால் வெறுப்பு ஏற்படும் அல்லவா? அதனால் தான் மேலும் அன்னைத் தங்களுக்குக் கட்டளையிடும் போது நானும் அங்கிருந்தேன் நீங்கள் தான் கவனிக்கவில்லை!” என்றாள்.
“ஆனால் நான் அவ்வாறு செய்து கொள்ளாவிட்டாலும் நடந்து கொள்ளாவிட்டாலும் நீங்கள் உங்கள் கடமையைச் செய்திருப்பீர்கள் என்று சீதாக்கா சொன்னார்கள். என் தவறை உணர்ந்தேன்!”
உடனே இலக்குவன் “நானும் உன் நினைவு வரக்கூடாது என்று தான் இருந்தேன் ஊர்மிளா! உறக்கம் என் கண்களைச் சுழற்றிய போது என் உறக்கத்தை வாங்கிக் கொள்ளும் முதல் ஆள் நீயாகத் தான் இருக்கும் என்று முதல் நினைவு வந்தது.”
“அப்படியானால் அடுத்தடுத்து நினைவுகள் உண்டு என்று தானே அர்த்தம்!” குறும்பாக சிரித்தாள் ஊர்மிளா.
“வந்தது உண்மைதான்! காதலும் வீரமும் ஆண்மகனின் இரு கண்கள் அன்றோ? நானும் உனக்கு ஆறுதல் சொல்லி பிரிவுத் துன்பம் ஏற்படா வண்ணம் உன்னைப் பாதுகாத்து இருக்க வேண்டும் என்று பல தடவை நினைத்திருக்கிறேன்.”
“ஆனால் நீ அன்று நடந்து கொண்டது மிகவும் வேதனை அளித்ததால், நாம் என்ன ஆறுதல் சொல்ல போகிறோம் என்று நினைவை அழித்து விட்டேன்!” ம்ம்ம்... என்றவளை
“ஆனால் என் மனம் உம்மோடு பயணித்ததை நான் சொன்னால் தான் புரியுமா? நம்பத்தான் போகிறீர்களா? எனவே அது என் மனதின் பொக்கிஷமாக, அழியா ஓவியங்களாகப் பத்திரமாக இருக்கட்டும்!” என்று நினைத்தவள், ஓவியம் வரைவதற்கான தூரிகை மற்றும் உபகரணங்களை அழகாக எடுத்து வைத்து வரையத் தொடங்கினாள்.
வரைய தொடங்கும் முன் உறங்கிப் போனான் லக்குவனன். தன் அன்பரின் விருப்பமாகிய பட்டாபிஷேக ஓவியத்தை முடித்தவள், இன்னும் நாழிகை இருந்ததால் மற்றொரு ஓவியத்தை வரைய முற்பட்டாள். அதில் ஒரு யுவனும் யுவதியும் அழகாகக் காதல் வயப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு ஆண்மகன் ஒரு பெரிய மலைக்கல்லில் உட்கார்ந்து இருக்கிறான். அவனை நோக்கி ஒரு யுவதி அழகே உருவாக வருவது போன்ற ஓவியத்தையும் வரைந்து முடித்து உறங்க போனாள் ஊர்மிளா.
ஆம்! அவளது ஓவியத்தில் உள்ளவை உயர் பெற்றுத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வது போல் இருந்தன. அவர்களைப் பற்றி தெரிந்து கொண்டாலே வனவாச வாழ்க்கையைப் பற்றிய தெளிவு பெறும் என்று நினைத்தாள் ஊர்மிளா. ஆனால் இப்பொழுது வரைந்து உள்ள ஓவியத்தைக் கண்டு அன்பர் என் செய்வாரோ என்று நினைத்தவள் என் கனவிலும் அவள் வருவாளா என்று நினைத்து சிரித்துக்கொண்டே “அன்பரைப் பாடாய்படுத்திய அந்தச் சூர்ப்பனகை பற்றித் தெரிந்து கொண்டால், அந்த அழகான பெண் சூர்ப்பநகை என்றும் அன்பர்தான் அந்த யுவன் என்றும் புரிந்து கொள்வாரா?” என்று நினைத்தாள்.
“ராமண்ணாவும், சீதாக்காவும் அன்பரும் சூர்ப்பநகையும் தான் இந்த ஓவியத்தில் நாம் வரைந்தவை என்று புரிந்து கொள்வாரா? அங்கு நடந்த நிகழ்வையாவது சொல்வாரா? இல்லை நம் மனதில் மனத்திரையில் இக் காட்சிகள் உயிர்பெற்று அக்கதையினைச் சொல்லக் கூடுமோ?”
கண்ணிமைகள் மெதுவாக மூட மஞ்சத்தில் விழுந்தாள் ஊர்மிளா.

- தொடரும்

# பள்ளி குழந்தைகளின் கோடை கால விடுமுறை மகிழ்ச்சியாக - பயனுள்ளதாக - அர்த்தமுள்ளதாக மாற்றுவது எப்படி?

பள்ளி குழந்தைகள் கோடை கால விடுமுறை காலங்களில் மிகத் தெளிவான சிந்தனையும், நல்ல ஆரோக்கியமான உடல் நலம் பெறவும், தொடர் கால மேற்படிப்பு வாழ்க்கை சிறந்து விளங்கவும், சிறந்த எதிர்காலம் வளமாக மாறுவதற்கும் இந்த வழிகாட்டல் முறைகள் குழந்தைகளின் நுண் ஆற்றல் திறன் மேம்பாட்டிற்கு பெரும் நன்மைகள் சேர்க்கும். என்பது திண்ணம்.

**கோடை விடுமுறையின் முக்கியத்துவம்**

கோடை விடுமுறை என்பது வெறும் ஓய்வு மட்டுமல்ல - அது குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கான தங்கமான காலம். இந்த இரண்டு மாத காலகட்டம், பள்ளியில் கிடைக்காத திறன்களை வளர்க்கும் அரிய வாய்ப்பாகும். உளவியல் ஆராய்ச்சி கூறுவது: AMERICAN ACADEMY OF PEDIATRICS ஆய்வின்படி, கட்டமைக்கப்படாத விளையாட்டு நேரம் குழந்தைகளுக்கு ஆக்கபூர்வமான சிந்தனை, சுய ஒழுக்கம், மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன் ஆகியவற்றை வளர்க்கிறது. விடுமுறையை திட்டமிட்டு கழிக்கும் குழந்தைகள் புதிய கல்வியாண்டில் 23% அதிக கவனத்துடன் படிக்கிறார்கள்.

**விடுமுறையின் 5 பரிமாணங்களை பார்க்கலாம். முதலில் பரிமாணம் பயன் என்ன?**

**உடல் வளர்ச்சி**

ஆரோக்கியமான எலும்பு, தசை, நோய் எதிர்ப்பு சக்தி

**மன வளர்ச்சி கற்பனை, படைப்பாற்றல், சிந்தனை விரிவாக்கம்**

சமூக வளர்ச்சி

நட்பு, ஒத்துழைப்பு, தலைமைத்துவம்

**ஆன்மீக வளர்ச்சி தன்னை அறிதல், நன்றியுணர்வு, மதிப்புகள்**

திறன் வளர்ச்சி கலை, இசை, தொழில்நுட்பம், விளையாட்டு

**தினசரி கட்டமைப்பு -**

ஒரு இலட்சிய அட்டவணை தெளிவான நாள் அட்டவணை குழந்தைக்கு பாதுகாப்பு உணர்வையும் ,நோக்கத்தையும் தருகிறது. ஆனால் இது கட்டாயமாக இல்லாமல், நெகிழ்வான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

**நேரம் செயல்பாடு நோக்கம்**

காலை 6:00-6:30 யோகா / ஓட்டம் / விளையாட்டு உடல் சுறுசுறுப்பு

காலை 6:30-7:00 தியானம் / நன்றி சொல்லுதல் மன அமைதி

காலை 7:00-8:00 காலை உணவு + குடும்ப நேரம் பிணைப்பு, ஊட்டம்

காலை 8:00-10:00 படைப்பு நேரம் (கலை/எழுத்து/இசை) திறன் வளர்ச்சி

காலை 10:00-12:00 கற்றல் செயல்பாடு (புத்தகம்/பயிற்சி) மூளை வளர்ச்சி

மதியம் 12:00-2:00 உணவு + ஓய்வு மீட்டெடுப்பு

மதியம் 2:00-4:00 சேவை / பயணம் / புதிய திறன் அனுபவம்

மாலை 4:00-6:00 விளையாட்டு / நண்பர்கள் சமூக வளர்ச்சி

மாலை 6:00-7:00 குடும்ப உரையாடல் / கதை உணர்ச்சி இணைப்பு

இரவு 7:00-8:00 வாசிப்பு / படைப்பு எழுத்து அறிவு விரிவாக்கம்

இரவு 8:30-9:00 தூக்கம் தயாரிப்பு + கண்ணாடி நேரம் சுய மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**உடல் ஆரோக்கியம் - உற்சாக வாழ்க்கை**

**விளையாட்டும் உடற்பயிற்சியும்**

கோடை காலம் என்பது திரை நேரத்தில் கழிக்கும் காலமாக மாறக்கூடாது. சூரிய ஒளியில் விளையாடுவது வைட்டமின் D தருவதோடு, மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது.

**பாரம்பரிய தமிழ் விளையாட்டுகள்**

(அவசியம் கற்க வேண்டியவை)

- ✶ கிளிஞ்சல் விளையாட்டு - கை-கண் ஒருங்கிணைப்பு வளர்க்கும்
- ✶ பரமபதம் - நல்ல சிந்தனை, மற்றும் பொறுமை கற்றுத்தரும்
- ✶ கோலி விளையாட்டு - கணக்கு சிந்தனை வளர்க்கும்
- ✶கண்ணாமூச்சி, சடுகுடு - குழு உணர்வும் ஆரோக்கியமும்
- ✶ நொண்டி, தாண்டி ஆடல் - சமச்சீர் உணர்வு (BALANCE) மேம்படும்

**நவீன விளையாட்டுகள்**

- ✶ நீச்சல் பயிற்சி - முழு உடல் ஆரோக்கியம்
- ✶ சைக்கிள் சவாரி - இதயம் மற்றும் நுரையீரல் வலுப்படும்
- ✶ யோகா / உடற்பயிற்சி - மனநலம் மற்றும் உடல் நலம் ஒருங்கிணைப்பு
- ✶ கால்பந்து / கைப்பந்து / கிரிக்கெட் - குழு விளையாட்டு திறன் மேம்பாடு.

சத்தான உணவு கோடை கால அட்டவணை

நேரம், உணவு, ஏன் சிறந்தது? என்ற விபரம் அடிப்படையில் படி

**காலை உணவு : இட்லி + சாம்பார் / தோசை + சட்னி : நார்ச்சத்து, புரதம்**

**காலை சிற்றுண்டி: பழங்கள் (வாழை, மாம்பழம்) : இயற்கை சர்க்கரை, வைட்டமின்**

**மதிய உணவு: சாதம் + கீரை + மோர் :**

இரும்பு சத்து, குளிர்ச்சி

**மாலை சிற்றுண்டி: கடலை / கொழுக்கட்டை / நீர் மோர் : புரதம், வயிறு நிறைவு**

**இரவு உணவு**

: கஞ்சி / கோதுமை ரொட்டி + பருப்பு :

**எளிதில் செரிமானம்**

நாள் முழுவதும் 3-4 லிட்டர் தண்ணீர் / இளநீர் நீரிழப்பு தடுப்பு

மூளை வளர்ச்சி - அறிவு பயணம்

**வாசிப்பு திட்டம்**

ஒவ்வொரு குழந்தையும் இந்த கோடையில் குறைந்தது 5-8 புத்தகங்கள் வாசிக்க வேண்டும். வாசிப்பு என்பது மூளையின் 'உடற்பயிற்சி'.

**வயதுக்கேற்ற புத்தக பரிந்துரைகள்:**

6-8 வயது: படக்கதை புத்தகங்கள், சிறார் மின்இதழ், புதிய சிந்தனை பஞ்சதந்திரம், ஈசாப்கதைகள்

9-11 வயது: திருக்குறள் விளக்கம், தமிழ் புராணக் கதைகள், அறிவியல் கதைகள்

12-14 வயது: அப்துல் கலாம் வாழ்க்கை வரலாறு, தமிழ் இலக்கியம் சுருக்கம், வரலாற்று நாவல்கள்

15+ வயது: மனோவியல் புத்தகங்கள், நிர்வாக திறன், தத்துவம்

புதிய திறன்கள் கற்றல் (SKILL BUILDING)

திறன் வகை குறிப்பிட்ட செயல்பாடு பயன்

மொழி திறன் ஒரு புதிய மொழி - பிடித்தமான பிற மொழிகள் / ஆங்கிலம் மற்றும் பிற உலக நாடுகளின் மொழிகள் ஏதேனும் ஒன்று,

**வேலைவாய்ப்பு, மூளை வளர்ச்சி**

கணித திறன் VEDIC MATHEMATICS, LOGIC PUZZLES வேகமான கணக்கிடல்

**தொழில்நுட்பம் கோடிங் அடிப்படை (SCRATCH/PYTHON) எதிர்கால திறன்**

படைப்பு கலை ஓவியம், கவிதை, கதை எழுதல் உணர்ச்சி வெளிப்பாடு

**இசை / நடனம் கர்நாடக சங்கீதம் / பரதநாட்டியம் கலாச்சாரம், ஒழுக்கம்**

சமையல் எளிய உணவு தயாரிப்பு தன்னிறைவு, பொறுமை.

**படைப்பாற்றல் திட்டங்கள்**

1. 'என் கோடை விடுமுறை நாட்குறிப்பு' - ஒவ்வொரு நாளும் 5 வரி எழுதுதல்
2. ஒரு சிறு கதை அல்லது கவிதை நூல் உருவாக்குதல்
3. விஞ்ஞான சோதனைகள் - வீட்டிலேயே செய்யக்கூடியவை
4. தோட்டம் அமைத்தல் - ஒரு செடியை விதைப்பு முதல் முதல் அறுவடை வரை குறிப்புகள் எழுதி பராமரித்தல்.
5. ஒரு புகைப்பட நினைவு ஆல்பம் உருவாக்குதல் திறன் பயிற்சி மேம்படும்.

**சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சி**

**குடும்ப பிணைப்பை வலுப்படுத்துதல்**

கோடை விடுமுறை என்பது குடும்பத்துடன் நேரம் செலவிட சிறந்த வாய்ப்பு. சமூக ஊடகங்கள் தரும் செயற்கை இணைப்பை விட குடும்ப நேரம் குழந்தைக்கு உண்மையான பாதுகாப்பு உணர்வை தருகிறது.

**குடும்ப செயல்பாடுகள்:**

வாரந்தோறும் ஒரு குடும்ப பயணம் | சமையல் கற்றல் - தாத்தா பாட்டி பாரம்பரிய சமையல் | கதை சொல்லுதல் மாலை நேரம் | குடும்ப விளையாட்டு மாலை | வீட்டு தோட்டம் அமைத்தல் | பெரியோரிடம் அவர் வாழ்க்கை கதை கேட்டல்

**சமூக சேவை - இளம் தலைவர்களை உருவாக்குதல்**

மற்றவருக்கு உதவுவது குழந்தையின் தன்னம்பிக்கையையும் நேர்மறை உலக பார்வையையும் வளர்க்கிறது.

அனாதை இல்லம் / முதியோர் இல்லம் சந்திக்கவும்

- ✶ சுற்றுச்சூழல் சேவை - மரம் நடுதல், குப்பை அகற்றல்
- ✶ படிக்க தெரியாதவர்களுக்கு அடிப்படை கற்றல் உதவி
- ✶ விலங்கு காப்பகம் சந்திப்பு மற்றும் கவனிப்பு
- ✶ வட்டார சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

நண்பர்களுடன் தரமான நேரம் செயல்பாடு வளர்க்கும் திறன்: குழு புத்தக வாசிப்பு, பிற கிளப் விவாதம், கேள்வி கேட்கும் திறன்:

கூடாரம் அமைத்தல் / NATURE CAMP, சிக்கல் தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு

குழு ஓவியம் / சிற்பம் படைப்பாற்றல், பகிர்தல்

நாடகம் / சிறு நாட்டுப்புற நிகழ்ச்சி தன்னம்பிக்கை, மொழி திறன்

விளையாட்டு போட்டிகள் போட்டி மனம், தோல்வியை ஏற்றல்.

தெளிவான சிந்தனை - மன ஆரோக்கியம்

தியானம் மற்றும் சுய விழிப்புணர்வு

நவீன உளவியல் ஆய்வுகள் குழந்தைகளுக்கு தினமும் 10-15 நிமிட MINDFULNESS அல்லது தியானம் இருந்தால் கவனம், நினைவாற்றல் மற்றும் உணர்ச்சி கட்டுப்பாடு கணிசமாக மேம்படுவதாக அறிவியல் ஆய்வுகள் மிக தெளிவாக தெரிவிக்கின்றன.







-கோ.சுரேஷ்குமார்
கோவில்பட்டி

# தினம் ஒரு தலைவர்கள்

# சியாமா பிரசாத் முகர்ஜி வரலாறு

சியாமா பிரசாத் முகர்ஜி (6 சூலை 1901 23 சூன் 1953), இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சார்ந்த கல்வியாளர், வழக்கறிஞர் மற்றும் அரசியல்வாதி ஆவர். சுதந்திர இந்தியாவின் முதல் நடுவண் அரசில் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சராக, ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் 15 ஆகத்து 1947 முதல் 6 ஏப்ரல் 1950 வரை இருந்தவர். ஜவகர்லால் நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால், காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேறி, 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை நிறுவினார். பின் இக்கட்சி பாரதிய ஜனதா கட்சி என உருமாறியது.

இளமை வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில், உயர்நீதிமன்ற நீதியரசரும், கொல்கத்தா பல்கலைக் கழக துணைவேந்தருமான சர் அசுதோசு முகர்சி - ஜோகமாயா தம்பதியருக்கு 6 சூலை 1901இல் பிறந்தார். மனைவி சுதா தேவி, இளமையில் மறைந்தபின், இறுதி வரை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளவில்லை.

முகர்ஜி கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியிலும், வங்க மொழியிலும் பட்டம் பெற்றவர். 1926இல் இங்கிலாந்து சென்று சட்டம் பயின்று, 1927இல் பாரிஸ்டர் ஆனார். தனது இளம் வயதில் (33 வயதில்) கல்கத்தா பல்கலைக்கழகத்தில் 1934 முதல் 1938 முடிய துணை வேந்தராக இருந்தவர்.

முகர்ஜி தனது மனைவி சுதா தேவியுடன் 11 ஆண்டுகள் குடும்பம் நடத்தி, ஐந்து குழந்தைகளைப் பெற்றவர். பின்னர் மனைவி சுதா தேவி விஷக் காய்ச்சலால் இறந்தார்.

அரசியல் வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி 1929ஆம் ஆண்டில் மேற்கு வங்காள மாகாண சட்ட இய்மேலவைக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் சார்பில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, மேற்கு வங்க மாகாண சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வென்றார். 1941 1942 ஆண்டில் அம்மாநில நிதி அமைச்சராக பணி செய்தார்.

1937 1941



காலகட்டத்தில் விவசாய-மக்கள் கட்சி மற்றும், முஸ்லிம் லீக் கட்சிகளின் கூட்டணி அரசின் போது, எதிர்கட்சித் தலைவரானார். பின்னர் இந்து மகாசபையில் இணைது, இந்து மக்களுக்காக குரல் கொடுத்தார். 1944ஆம் ஆண்டில் இந்து மகாசபையின் தலைவரானார். இந்திய விடுதலைக்குப் பின்

ஜவகர்லால் தலைமையிலான இடைக்கால இந்திய நடுவண் அமைச்சரவையில் பங்கேற்ற அமைச்சர்கள்; (இடமிருந்து வலம் ) அம்பேத்கர், ரபி அகமது கித்வாய், சர்தார் பல்தேவ் சிங், மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு. இராஜேந்திர பிரசாத், வல்லபாய் படேல், ஜான் மத்தாய், ஜெகசீவன்ராம், அம்ருத் கௌர், சியாமா பிரசாத் முகர்ஜி, (நிற்பவர்கள் - இடமிருந்து வலம்) குர்சேத் லால், ஆர். ஆர். திவாகர், மோகன்லால், என். கோபால்சாமி அய்யங்கார், என். வி. காட்கில், கே. சி. நியோகி, ஜெய்ராம் தாஸ் தௌலத்ராம், கே. சந்தானம், சத்திய நாராயணன் சின்கா மற்றும் பி. வி. கேஸ்கர்.

பிரதம மந்திரி ஜவகர்லால் நேருவின் தலைமையிலான, விடுதலை இந்தியாவின் இடைக்கால நடுவண் அரசில், சியாமா பிரசாத் முகர்ஜி வணிகம் மற்றும் தொழில் அமைச்சரானார்.

1950ஆம் ஆண்டில்,லியாகத்-நேரு ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சை காரணமாக, முகர்ஜி 6 ஏப்ரல் 1950ஆம் ஆண்டில் நேருவின் அமைச்சரவையிலிருந்து விலகியதால், முகர்ஜி மேற்கு வங்க மக்களின் நாயகன் ஆனார்.

ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் தலைவர் எம். எஸ். கோல்வால்கருடன் கலந்தாய்வு செய்த பின், 21 அக்டோபர் 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை தில்லியில் தோற்றுவித்து, அக்கட்சியின் முதல் அகில இந்தியத் தலைவரானார். 1952ஆம் ஆண்டில் நடந்த முதல் இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனசங்கம் கட்சி மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதில் ஒரு தொகுதியில் முகர்ஜி வெற்றி பெற்றவர்.

ஜம்மு காஷ்மீர் மாநில சிறப்புத் தகுதி குறித்து முகர்ஜியின் கருத்து

முதன்மைக் கட்டுரை: இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 370

ஜம்மு காஷ்மீர் மாநில அரசிற்கு தனிக் கொடி, தனிச் சின்னம், தனி பிரதம மந்திரி இருப்பதை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஒரு நாட்டில் இரண்டு அரசியல் அமைப்பு சட்டமும், தேசிய சின்னமும் இருக்க இயலாது என வாதிட்டார். மேலும் ஜம்மு காஷ்மீர் மாநில பிரதமரின் அனுமதியின்றி, இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குள் செல்ல இயலாது என்ற விதியை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தனிக் கொடி, தனி பிரதம மந்திரி போன்ற சிறப்பு தகுதிகள் வழங்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கக் கோரி, முகர்ஜி தலைமையிலான பாரதிய ஜனசங்கம், இந்து மகாசபை மற்றும் ராம ராஜ்ஜிய சபையுடன் இணைந்து குரல் கொடுத்து, சத்தியாகிரகப் போராட்டங்களில் ஈடுபட்டது.

காஷ்மீர் அரசின் அனுமதி அடையாள அட்டையின்றி காஷ்மீரில் உள்ள லக்கன்பூர் என்ற ஊரில் நுழைந்த சியாமா பிரசாத் முகர்ஜியை, ஜம்மு காஷ்மீர் மாநில காவல் துறையினரால், 11 மே 1953இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 23 சூன் 1953இல் விஷக்காய்ச்சலால் மரணமடைந்தார் என காவல் துறை அறிவித்தது.

காவல் துறையினரின் காவலில் இருந்த சியாமா பிரசாத் முகர்ஜியின் மரண இரகசியம் குறித்து விசாரிக்க, தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற முகர்ஜியின் தாயாரின் கோரிக்கையை பிரதம அமைச்சர் ஜவகர்லால் நேரு ஏற்கவில்லை. இதனால் இன்று வரை முகர்ஜியின் மரண சர்ச்சை தீரவில்லை.

சியாமா பிரசாத் முகர்ஜியின் கைது, ஜவகர்லால் நேருவின் சதித் திட்டம் என அடல் பிகாரி வாஜ்பாய் 2004இல் குறிப்பிட்டுள்ளார்.




# நடிகர் சூரியின் புதிய படத்தின் கதாநாயகி இவரா?

இந்தியாவின் பல மொழிகளில் பிரம்மாண்டமான மற்றும் வித்தியாசமான படங்களை தயாரித்து வரும் முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் "மைத்ரி தமிழ் 03" என்ற தனது மூன்றாவது தமிழ் திரைப்படத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்தப் படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தை இயக்குநர் ஆர். ரவிகுமார் இயக்க, நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

'கொட்டுக்காளி', 'விடுதலை', 'மாமன்' உள்ளிட்ட படங்களின் வெற்றிக்கு பிறகு நடிகர் சூரி தற்போது முன்னணி கதாநாயகன் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். 'இன்று நேற்று நாளை' மற்றும் 'அயலான்' போன்ற வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் இயக்குநர் ஆர். ரவிகுமார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் இதற்கு முன்பு தமிழில் அஜித் நடித்த 'குட் பேட் அக்லி' மற்றும் பிரதீப் ரங்கநாதன் நடித்த 'டியூட்' ஆகிய படங்களை தயாரித்துள்ளது.

இந்த நிலையில், இயக்குநர் ஆர். ரவிகுமாருடன் நடிகர் சூரி இணைந்துள்ள புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்க மமிதா பைஜுவை படக்குழு அணுகி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இருப்பினும் இத்தகவல் குறித்து படக்குழு தரப்பில் இருந்து இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.



தென்னிந்திய திரையுலகில் பிரபலமான இளம் நடிகைகளில் ஒருவர் மிருணாளினி ரவி. இவர் இன்ஸ்டாகிராமில் மிகவும் ஆக்டிவாக இருக்கும் பிரபலம் ஆவார். தன்னுடைய போட்டோஷூட், வெகேஷன் செல்லும் புகைப்படங்கள் ஆகியவற்றை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுவார்.

அந்த வகையில், தற்போது தனது சமீபத்திய அசத்தலான போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். மிருணாளினி ரவி வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் ரசிகர்களிடையே வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்களை பாருங்க:



# கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும் கயாடு லோகர்



டிஜோ ஜோஸ் ஆண்டனி இயக்கத்தில் டொவினோ தாமஸ் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'பள்ளிச்சட்டம்பி'. படத்தில் கதாநாயகியாக கயாடுலோகர் மற்றும் விஜயராகவன், பாபுராஜ், அலெக்சாண்டர் உள்பட பலர் நடித்துள்ளனர். ஜேக்ஸ்பிஜாய் இசை அமைத்துள்ளார்.

வேர்ல்ட் வைட் பிலிம்ஸ் மற்றும் சிகியூப் ப்ரோஸ் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படம் வருகிற 10-ந்தேதி திரைக்கு வருகிறது. இதையொட்டி சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கயாடுலோகர் பேசியதாவது:-

இது என்னுடைய 3-வது மலையாள படம். படத்தில் என்னுடைய கேரக்டர் வித்தியாசமானது. என் இதயத்துக்கு நெருக்கமானதும் கூட. டொவினோ தாமஸ் சிறந்த திறமையான நடிகர். எனக்கு கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும். அடுத்ததாக வரும் போது நன்றாக தமிழில் பேசுவேன் என்றார்.

# எதிர்நீச்சல் நடிகையின் 'பயர்' பிறந்தநாள்



சின்னத்திரையில் ஒளிபரப்பாகி வரும் பிரபல தொடர் 'எதிர்நீச்சல்'. தொடரில் ஜனனி கதாபாத்திரத்தில் நடித்து சீரியல் ரசிகர்கள் மனதில் தனி இடம் பிடித்தவர் மதுமிதா. தற்போது அவருக்கு பதில் வேறொரு நடிகை நடித்து வருகிறார்.

தொடர்ந்து மதுமிதா 'அய்யனார் துணை' என்ற தொடரில் நடித்து வருகிறார். இந்நிலையில் மதுமிதா பிறந்தநாள் கொண்டாடிய புகைப்படங்கள் வைரலாகி வருவதுடன் விமர்சனத்துக்குள்ளாகியும் வருகிறது.

பிறந்தநாள் வீடியோவில் மதுமிதா வாயில் இருக்கும் மெழுகுவர்த்தியை சிகரெட் பற்ற வைத்தது போல் ஒருவர் பற்ற வைக்க தொடர்ந்து மதுமிதா கையில் கேக்கை வைத்தபடி ஊதும் போது தீப்பிழம்புகள் சிதறி பறக்கிறது. இந்த காட்சிகளை மதுமிதா தனது சமூக வலைதளபக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

வீடியோ காட்சிகளுக்கு மதுமிதாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

# 'ரீயூனியன்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டார் விஜய் சேதுபதி



தமிழ்த் திரைப்படங்களில் முக்கியத் துணை வேடங்களில் நடித்து பிரபலமானவர் அருள்தாஸ். தற்போது இவரது நடிப்பில் 'ரீயூனியன்' படம் உருவாகி உள்ளது. இப்படத்தில் ஒரு முன்னணி கதாபாத்திரத்தில் அருள்தாஸ் நடித்துள்ளார். அகில் சந்தோஷும் நடிக்கும் இப்படத்தை சத்ஸ் ரெக்ஸ் இயக்கியுள்ளார்.

படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டு, படக்குழுவினருக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இப்படத்தில் அருள்தாஸ், அகில் சந்தோஷ் தவிர, ஜெயக்குமார், அனுபமா குமார், பர்வீன், சுப்ரமணியன், ஜெமினி மணி, சிவம், சேதுபதி ஜெயச்சந்திரன், கராத்தே ராஜா, பூவையார் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.



# அனுஷ்காவின் முதல் மலையாள பட டிரெய்லர் வெளியானது!





நடிகர் பிரபுதேவாவும் இப்படத்தில் ஒரு முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் நடிகர் மோகன்லால் இதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படத்தை ரோஜின் தாமஸ் இயக்கியுள்ளார்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம் என பல்வேறு மொழிகளில் படம் வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி ரசிகர்களிடையே கவனம் ஈர்த்துவருகிறது.

சன் டிவியின் சிங்கப்பெண்ணே சீரியலில் ஆனந்தி ரோலில் நடித்து வருபவர் மனிஷா. டிஆர்பி ரேட்டிங்கில் தொடர்ந்து இது டாப் 3ல் இடம் பிடித்து வ்ருகிறது. மனிஷாவுக்கு அதிகம் ரசிகர்களும் இந்த சீரியல் மூலமாக கிடைத்து இருக்கிறார்கள். தற்போது மனிஷா அழகிய சேலையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க. ரசிகர்களை கவர்ந்த இந்த போட்டோக்களுக்கு லைக்குகள் இதற்கு குவிந்து வருகிறது.

# முதல்முறையாக ஜோடி சேரும் சல்மான்கான் - நயன்தாரா!

வாரிசு பட இயக்குநர் வம்சி பைடிபைலி சல்மான் கானை வைத்து இயக்கும் புதிய படத்தில் நயன்தாரா நடிக்க உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இதன்மூலம் ஷாருக்கானின் 'ஜவான்' படத்திற்குப் பிறகு, மீண்டும் பாலிவுட்டில் நடிக்கிறார் நயன்தாரா. மேலும் சல்மான் கானுடன் நயன்தாரா நடிக்கும் முதல் படம் இதுவாகும். தில் ராஜுவின் தயாரிப்பில் உருவாகும்




இப்படம் ஒரு பேன் இந்தியா ஆக்ஷன் திரைப்படமாக உருவாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே 2020-ஆம் ஆண்டு லடாக் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய-சீன வீரர்களுக்கிடையே நடந்த மோதலை மையமாகக் கொண்டு உருவாகி வரும் 'மாத்ருபூமி' என்ற படத்தில் சல்மான் கான் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை சல்மான் கான் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.







# WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424







# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872










தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE











## இட்லி

சிப்பி மூடா மென்முத்து
அரிசியும் உளுந்தும் கலந்து
அரைவையில் சிக்கி
தன் நிலை இழந்து
பிறர் பசி போக்கும்

அடுப்புச்சூட்டில்
அவதாரமெடுத்த
அன்றாடத் தேவையின்
அலுக்காத உணவு

எளிமைக்கு இலக்கணமாகி
எல்லா வீட்டிலும் உலா வரும்
சமாதானத் தூதுவனாகி
சலிக்காது நோய் விரட்டும்

குற்றம் செய்யாமல்
சோதனைக்கு உள்ளாகும்
தணலில் வெந்து தன்னை
நிரூபித்து வாகை சூடும்


வகையில் பலவாகி
வாகாய் வயிறு நிறைக்கும்
வண்ணமாய் இருந்தாலும்
வடிவம் மாறினாலும் பழமை
மாறாத பக்குவமான உணவு

நெருப்பின் சூடுபட்டு
வல்லினமாகும் மெல்லினம்



சூடு தாங்கி
சோதனைக்கு
உள்ளாகி சுயம்
மாறி பிறர் பசி
போக்கும் இட்லி
பூமியின்அமிர்தம்.

**தமிழ்நிலா**



## கண்ணனும் காரிகையும்

முகிலின் நிழலினில்
முல்லை மணத்தினில்
மிளிரும் காரிகை
கண்ணன் குழலிசை
காற்றின் தாளத்தில்
காதல் நெஞ்சம்

பசுமைத் தரணியில்
பனித்துளி இலையில்
பாவையின் பார்வை

மாலை நேரத்தில்
மஞ்சள் வானத்தில்
மலரும் நினைவுகள்

முல்லைச் சோலையில்
முரளி ஒலியினில்
மயங்கும் மனம்

யமுனைக் கரையினில்
யாழிசைத் தென்றலில்
கண்ணனை தேடும் ஏக்கம்

வசந்த காலத்தில்
வானவில் நிறங்களில்
பொன்னான கனவுகள்
பேசும் பூவையின் விழிகள்

இயற்கை மடியில்
இனிய காதலில்
இணையும் உயிர்கள்
பொழியும் இன்பத்தின்
நிறைவே ...

கண்ணன் நினைவில்
காதல் உறவில்
காலம் தரும் அமுது

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## ஏறுபோல் பீடுநடை ஏல்!

நேரிசை வெண்பா!

உழைத்தே உயர்வோம்
உயர்ந்தே வளர்வோம்
ஒழுக்கம் உயிரென
ஓதி..அழகாக மாறிடும்
கொள்கை மனத்திலே
இல்லாமல் ஏறுபோல்
பீடுநடை ஏல்!

கண்ணியமாய்க் கம்பீரமாய்த்
தன்னம்பிக் கையோடேதான்
வண்ணமய வாழ்வில்
வளர்ந்திவண்..திண்ணமாய்
மாறிடும் கொள்கை
மனத்திலே இல்லாமல்
ஏறுபோல் பீடுநடை ஏல்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தாய்மை நிறைவடையும்

குழந்தை கத்தி அழுதால்
தாய் பதவித்து ஓடி வருவாள்
அள்ளி அணைத்து முத்தம்
தந்து முலை கொடுப்பாள்
பால் குடிக்க தான்.
முகம் பார்க்கும்
குழந்தை தாயின்
முகம் பசியை மறந்து
பார்த்து சிரிக்கும் கோடி
கொடுத்தாலும் கிடைக்காத
இன்பம் தாய்க்கு மட்டுமே
கிடைக்கும்.

**பேரின்பம்**

தாய்க்கு மட்டுமே
கிடைக்கும் சொர்க்க வாழ்வு
சொந்த வாழ்வு இன்பம்
பேரின்பம் இணைந்தே
கிடைத்திடும் பேரின்ப
மயக்கம்.

**தாய்மை நிறைவடையும்**

தாய்க்கு மட்டுமே
தடையில்லாத ஓடோடி வந்து
விடும் தாலாட்டு



ஆராரோ
ஆரிராரோ
நாவாசைத்து
பாடி தாய்மை
நிறைவடையும்
இன்பம்
பெறும்.

**பேராசிரியர் முனைவர்**
**வேலாயுதம் பெரியசாமி**
சேலம்




## தேர்(தல் )திருவிழா

தேர்த் திருவிழாவைப் போல்
வருகிறது... வருகிறது....
தேர்தல் திருவிழா வடம்
பிடித்து இழுத்துப் பார்த்தும்
கொடுத்த வாக்குறுதிகளைக்
காப்பாற்றாமல் அடம்பிடித்த
அனைவரும் கைகூப்பி
அணி... அணியாக திரண்டு
வரும்படி செய்கிறது

’தேர்தல் திருவிழா’– மீண்டும்
மீண்டும் வரும்படி பார்க்க
வலம் வருகிறது நிலையாக
நின்றவர்களையும்– ஒரு
நிலைக்கு கொண்டு
வருகிறது.

ஒன்று கூடி ஊர் கூடி –
ஜனநாயகத் தேர் இழுக்க
அழைத்தால் தெருவில்
கிடப்போரும்
தெருக்கோடியில்
இருப்போரும் – மட்டுமே
ஒவ்வொரு முறையும் ஓடி
வந்து தேர் இழுப்பதால்

அவர்கள் பக்கமே
உருண்டோடுகிறது தேர்
நெட்டை மரங்களின்
பெட்டைப் புலம்பலி தெருவில்
இறங்கி வடம்பிடிக்க வராமல்
–எல்லாம்

பண நாயகம் பண லே
நாயகம் – என்று பாடும்



பழைய பல்லவியைக்
கேட்டு மெல்ல
சிரிக்கிறது தேர் மரச்
சிற்பங்கள்

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை.



1. மக்கள் தொலைபேசியின்
கைதிகள் என்பதை
சுருக்கமாக அழைப்பதற்கு
பெயர்தான் செல்

2. கணவரின் பர்ஸ் காலி
ஆனதால் மனைவி காளியாக
மாறினாள்

3. இங்கு உழைக்காமல்
வாழ்பவர்களை விட வாழாமல்
உழைப்பவர்களே அதிகம்

4. மரணம் என்பது உயிருக்கு
தான் நல்ல பெயருக்கு
இல்லை

5. நம்ம கண்ணுக்கு
அழகாக
தெரிகிற மயில்
இறகு மயிலுக்கு
மயிராகத்தான் தெரியும்

6. கல்வி அழியாத



செல்வம் தான் ஆனால்
நம் செல்வத்தை
அழித்தால் தான்
கிடைக்கிறது இன்றைய
கல்வி

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## தூய்மை போற்றுவோம்

தோழர்களே!
தேசத்தில் வனவிலங்குகளை
வேட்டையாடுவது மட்டுமல்ல
கொசுக்களையும்
ஈக்களையும் உரமிட்டு
வளர்ப்பதும் குற்றமன்றோ!

தேசத்தை அழிக்க
அணுக்குண்டுகள்
தேவையில்லை
பிளாஸ்டிக்கழிவுகளும்
மக்கிய குப்பைகளும்
போதும் தேசமே
கிருமிகளின் அட்சய
பாத்திரமாகிவருகிறது!

இங்கே குப்பைகளைச்
சேர்க்கும் பண்டிகைகளில்
குதூகலிக்கும் நாம்
பழமையைக்கொளுத்திப்
புதுமையைப்புகுத்தும்
போகியை ஆண்டு முழுவதும்
கொண்டாடினால் என்ன?

பூமாதேவிக்கு தொழிற்சாலைக்
கழிவுகளால் அபிசேகம்!
வாகனப்புகைகளால் தூபதீபம்!
குப்பைகளால் அர்ச்சனைகள்
செய்து சாபத்தையே
வரமாய்ப்பெறுவது ஏன்?

உமிழ்நீரை விழுங்கினால்
செரிமானம் எளிதாகும்
நடக்கும் சாலைகளில் காறி
உமிழ்ந்தால்
அவமானமன்றோ!

தேசத்தில் காண்பதெல்லாம்
கேட்பதெல்லாம்
நுகர்வதெல்லாம்
ஐம்புலன்களுக்கும்
பரிமாறப்பட்ட விருந்துகள்
இவைகளுக்கிடையே
அருவருப்பாய் இருக்கும்
குப்பைகள் ஊறுகாய்கள்
அல்ல ஊறு விளைவிக்கும்
கேடுகளன்றோ!

கள்வர்களைக்
காவலர்கள் தான்
பிடிக்க வேண்டுமென்பதில்லை
மாந்தர்களே சுற்றி
வளைக்கலாமே! தேசத்தின்
குப்பைகளை துப்பரவு
பணியாளர்கள் தான்
துடைக்க வேண்டுமென்ப



தில்லை
மாந்தர்களின்
இலட்சியமே
தூய்மையன்றோ!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்



## தையற் கலைஞர்!

கை காலிருப்போர் உழைத்திடு
என்பதை கருத்தாய்
சொல்பவர் தையற் கலைஞர்.!

பொய்யிலே பிறந்த
பொய்யிலே வளந்தோர்
மத்தியிலே இவரோ தையற்
கலைஞர்.!

ஐயமே இல்லை.. அல்லும்
பகலும்.. மெய்யாய்
உழைப்பவர்
தையற் கலைஞர்.!

செய்யும் தொழிலே
தெய்வமாய் நினைப்பர்
சிந்தனைக் குரியோர்..
தையற் கலைஞர்!

காதுள்ள ஊசியைக்
கைகளில் ஏந்தியே..
பாசமாய் நூலிலே
கிழிசலைத் தைப்பார்!

ஆசையாய் வாங்கிய
துணிகளை நமக்காய்
அளவாக வெட்டியே
அருமையாய் தைப்பார்!

கடனே சொன்னாலும்
கவலையே படாமல்..
பண்டிகை நாட்களில்
பரிவுடன் தைப்பார்.!

தன்னுடைய கிழிசலை
புன்னகையில் மறைத்து
நம்முடைய அழகினை
ஆடையாய் தைப்பார்.!

ஆயுத்த ஆடைகள்.. ஜீன்ஸ்
காலாடைகள் போட்டிக்கு
மத்தியிலும் பொறுமையாய்
தைப்பார்!

அங்கத்தை மறைக்க
மானத்தைக் காக்க
ஆண்டவன் அனுப்பிய
தூதராய் இருப்பார்!



வையத்தை
அழகுசெய்ய
எத்தனையோ
கலைஞர்கள்.! மெய்யிற்கு
ஓர் கலைஞர் !
தையற் கலைஞர்!

**வே.கல்யாண்குமார்.**

## நூல் விமர்சனம்

நூலின் பெயர்: அந்தக்கால மருத்துவர்கள்
ஆசிரியர்: டாக்டர் சுதாசேஷய்யன்
வெளியீடு: வானதி பதிப்பகம்
விலை :₹225
தொடர்புக்கு: 044– 2434 2810/2431 0769




அமுதசுரபி இதழில் தொடராக வந்த 30 மருத்துவர்கள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு. திருப்பூர் கிருஷ்ணன் அவர்களின் முகநூல் பதிவைப் பார்த்து சென்னைப் புத்தகக் கண்காட்சியில் என் நண்பர் கணேஷ் பாலா மூலம் வாங்கிய நூல் இது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி - தேவதாசி முறை ஒழிப்புக்கு காரணமாக இருந்தவர்.நடிகர் ஜெமினி கணேசன் அத்தையான இவர் டாக்டர் சுந்தரா ரெட்டியை மணந்ததால் ரெட்டி ஆனவர்.

முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரத்தினவேலு சுப்ரமணியம், சக்கரை அம்மாவை (இவரைப்பற்றி மானுடம் காக்க வந்த மகான்கள்- குமுதம் பக்தி ஸ்பெஷல் இதழில் ஜி.ஏ.பிரபா எழுதியுள்ளார்) தன் குருவாக ஏற்ற டாக்டர் நஞ்சண்டராவ், குடல் அறுவை சிகிச்சை நிபுணர் ரங்கபாஷ்யம், சொந்த விமானத்தில் வந்து சிகிச்சை அளித்த மருத்துவர் ரங்காச்சாரி, அரவிந்தருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் துரைசாமி (தி.நகர் துரைசாமி பாலம்) பின்னாளில் அரவிந்த் கண் மருத்துவமனை உருவாக காரணமான மருத்துவர் வெங்கடசாமி என அவர்களின் பணி அர்ப்பணிப்பை விளக்கும் நூல்.

டாக்டர் ஜெ.பாஸ்கரன் அவர்கள் கல்கி அச்சிதழில் தோல் மருத்துவம் பற்றி 10 வாரத் தொடர் எழுதுகிறார் என்ற விளம்பரம் பார்த்து , அமிர்தம் சூர்யாவிடம் இவர் மூளை நரம்பியல் நிபுணர் ஆயிற்றே எனக் கேட்டபோது அவர் தோல் மருத்துவமும் பயின்றவர் என்றார். நம்மிடையே வாழும் மருத்துவரைப் பற்றியே நமக்கு அதிகம் தெரியாத நிலையில், அந்தக் கால மருத்துவர்கள் பற்றி தெரிந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.

திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் சொன்னது போல இதன் அடுத்த பாகத்தையும் டாக்டர் சுதா சேஷய்யன் எழுத வேண்டும்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## "மறக்காது வாக்களிப்பீர்"

உரிமை தரும் உன் வாக்கு
உனக்கே உரியது!
உலகம் தழைக்கும்
விதை அது உணர்ந்திடு!

மாசுடன் இருள்சூழின்
மண்ணும் அழியும்!

மக்களாட்சித் தத்துவம்
மங்கும் கவனமிரு!
பொய்யின் புனல் வந்து
பொங்கிடும் போதும்

பொற்சிந்தை தளராது
நிலைபெற்று நிமிர்ந்திடு!
கையில் விழும்
மைத் துளி கண்ணீரல்ல
காலத்தின் தீர்ப்பென்று
கருதிடு உறுதியாய்!
மாற்றந்தரும் செயலிதை
மறவாது வாக்களி!

இன்று தவிர்த்திடின்
ஜனநாயகம் சுணங்கும்
எதிர்காலம் கசக்கும்!
மண்ணின் மரபை
மதிக்கின்ற வேந்தனே
மக்களின் விருப்பமாய்

வந்திட வேண்டுமெனில்
வாக்கினைப் பதித்திடு
வரலாற்றைச் செதுக்கிடு!
மறக்காது செல்...
தயங்காது வாக்களி
மக்களாட்சி வாழ்ந்திடணும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## இட்டலி வாங்கித் தாங்கோ!

எனக்குத் தாத்தா வாங்கித் தந்தார் இரண்டு இட்டலி! இன்னும் எனக்கு ஞாபகத்தில் இருக்கு இட்டலி!

காஞ்ச மொளகா தேங்கா சேர்த்து பொட்டுக் கடலைச் சட்டினி! காலைவேலை பிறந்ததுமே தொட்டுத்தின்போம் இட்டலி!

தக்காளியை வதக்கிப் போட்டு கடுகு உலுத்தம் பருப்பு.. சின்ன வெங்காயம் சேரத்துச் செஞ்சா சட்டினியும் சிறப்பு!

புதினாவோட கொத்தமல்லி சேர்த்து அரைத்த சட்டினி.. போடப்போட திண்ணுறோமே.. ஆகா.. வாழ்க இட்டலி!

ரொட்டி ஜாமு.. ரைசுபாத்து எத்தனையோ இருக்குது! அத்தனைக்கும் போட்டி வச்சா இட்டலித்தான் ஜெயிக்குது!

கட்டிதந்த அம்மாவோட அன்பு அதிலே கலக்குது! காரக்குழம்பு இட்டலிக்கும் பொருத்தம்கூட இருக்குது!


தஸ் புஸ் இங்கலீசு பாஸ்ட்டுப் புட்டு கசக்குது! தட்டுத்தட்டா ஏழை உண்ண இட்டலித்தான் இனிக்குது!

காலை மாலை முக்குக் கடைக்கு வாங்க வாங்க போகலாம்! காலங்களை வென்ற இட்டலி காசுதந்து வாங்கலாம்!

ஏழைக்கேத்த உணவுஇது எந்தக்காலம் ஆயினும்.. இனியதமிழ் உறவு வளர்க்கும் இட்டலியை வாழ்த்துவோம்!

**வே.கல்யாண்குமார்.**







## மகிழ்வுறும் நினைவு

இரண்டு உள்ளங்கள்
இணைந்த அந்த நாள்
மனதினில் மகிழ்வும்
நினைவாக இன்பம்
பொங்கும் இல்லற வாழ்வில்
பாசத்துடன் பிரேமமும்
நித்தமும் மலருது
புன்னகையில் பூரிப்பும்
விழியில் பாசமும்
சின்ன ஊடலுக்கு பிறகு
கூடிய அத்தருணத்தில்
காதல் அதிகமாக எத்தனை
அகவை சென்றாலும்
அங்கவையிடம் காதல்
சிறிதும் குன்றாத இதுவே

சிறந்தஇல்லற
வாழ்வென
எண்ணி
மகிழ்ந்தேன்

**உஷா முத்துராமன்**



## காத்திருப்பு:

காலையில் எழுந்து–
அழகுப்படுத்தி காலாற
நடைப்போட்டு– தன்
உடுப்பை சரிப்பார்த்து–
நடுநிசியில் வரப்போகும்
தன் நாயகனுக்காக– தயார்
செய்து பார்க்கையில் –
இவ்வாரமில்லை அடுத்த
மாதங்களில் சந்திக்கலாம்
எனும் செய்தி கேட்டவுடன்–
அனைத்தையும்
நொறுக்கினேன்– என்ன
கொடுமை?? நானும்

இப்பூப்போல்
தானே!!–
மலர்கள்
மட்டும்
என்னிடம்!!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி



## மணக்காத வாழ்க்கை.

வாடிய முகத்துடனே
வாடா மலரை விற்கிறாள்.
கூவி அழைத்தபடியே
குழந்தை முகமாய் நிற்கிறாள்.
தேன்விழும் பூக்களையே
தெருவினில் ஏந்தி
சுமக்கிறாள்.
வறுமையை விரட்டிடத்தான்
வாழ்க்கையைத்
துரத்துகின்றாள்.

பேருந்து மூச்சை விட்டு
இளைப்பாறும் சில நிமிசம்.
யாருக்கோ அழைப்பு விட்டு
விழிதேடி நடைபயணம்.
அண்ணாந்து முகம் நீட்டி
உறவாக மொழி உபயம்.
வெய்யில்
வெந்தணலாய்ச்சுட்டாலும்
விற்பனையே இவள் கவனம்.

நடைபதை வியாபாரம்
அங்கங்கே கடைபோடும்.
நடைபோடும் மனிதர்களின்
மனம் பார்த்தே எடைபோடும்.
விடையில்லா வாழ்கையிலே
வயிற்றுக்கே அலைமோதும்.
இறக்கிவைக்க முடியாமல்
தினம் சுமக்கின்ற துலாபாரம்.

இரைப்பையை நிரப்பிடத்தான்
பூ பாரம் சுமக்கின்றாள்.
இளமையிலே கல் என்ற
பழமொழியை மறக்கின்றாள்.
கனவுகளைப் புதைத்துவிட்டு
கால்நடையாய்
அலைகின்றாள்.
கடந்து போடும் மனிதருக்குக்
கண்காட்சியாகத்
தெரிகின்றாள்.

விரும்பி சில பூக்களுமே
விற்பனையாய்க் காசாகும்.
திரும்பி வரும் மலரெல்லாம்
கண்ணீரால் தீட்டாகும்.
அரும்பி வரும் மணத்தினிலே
அடுப்பினிலே உலை
கொதிக்கும். அழகு
மலர் மணந்தாலும் இவள்
வாழ்க்கை தினம் கசக்கும்.

**நறுமுகை**



விலகி வெகுதூரம் சென்று
விட்டப் பிறகும்....
பாறைகளின் பாசியைப்
போல...படித்திருக்கிறாய்...
தொடர்ச்சியான
நினைவுகளால்....

அவரவர் திசைகளில்

திரும்பிக்
கொண்டோம்...
பாவம்...

தத்தளிபடியே....
நம்
மனங்கள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## மனைவி ஊருக்கு போய்ட்டா... !

அன்று ஒரு நாள் மனைவி
தாய்வீடு சென்றிருந்தபோது..
அடுப்பை பற்ற வைத்து
தேநீர் தயாரித்து...
சமையல் செய்து..
பாத்திரங்கள் கழுவி...
துணிகளை அலசி ...
வீட்டைப் பெருக்கி சுத்தம்
செய்து முடித்த போது
என் முதுகும், உடம்பும்
வலித்தது...கூடவே
தினமும் இப்பணி செய்யும்
மனைவியை நினைத்து.
இதயமும் கனத்தது !

**எம்.பி.தினேஷ்.**
கோவை



## தரிசனம் !

தெய்வத்தை தரிசிக்க
ஆலயத்திற்கு வரும் வாலிப
பருவங்கள் பெரும்பாலும்
கைகளை கூப்புவது

தெய்வத்தை
நோக்கி
என்றாலும்...
பார்வைகள்
எல்லாம்
காத(லி) லை
தேடி தான்
அலைபாய்கின்றன !

**எம்.பி.தினேஷ்.**கோவை

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: ஃபலூடா வித் பாலகணேஷ்
ஆசிரியர்: பாலகணேஷ்
வெளியீடு : வாசகசாலை பதிப்பகம்
விலை : ₹220
தொடர்புக்கு: 9942633833/9790443979

என் இனிய நண்பர் பாலகணேஷ் முகநூலில் வாசககசாலை இணைய இதழுக்காக எழுதிய பல சரக்கு இன்னும் மெட்ராஸ் பேப்பர் இதழுக்காக எழுதிய கட்டுரைகளும் ஃபலூடா ஆக....

தொழில் நுட்பம் இன்று வளர்ந்து முகநூல் / வாட்ஸ் அப் என பல தளங்கள் விரிந்துள்ளதால் பாக்கெட் நாவல் அசோகன் ஜி, பட்டுக்கோட்டைபிரபாகர், சுபா, இந்திரா சௌந்தர்ராஜன், தேவிபாலா , குலசேகர் என அத்தனை பிரபலங்களும் என்னுடைய நட்பாகக் கிடைத்தது பெரும்பேறு.

இவர் பத்திரிகைத் துறையில் கால் பதித்து பட்ட பாடுகள், பெற்ற அனுபவங்கள் , மதுரையில் இருந்து வந்தது, நொந்தது எல்லாம் சுவை பட பிறருக்கு பாடமாகும் வகையில் எழுதியிருக்கிறார். என் இன்னொரு நண்பன் ஆத்மார்த்தி மூலமே இவர் எனக்கு அறிமுகம். சென்னை




சென்றபோது எழும்பூர் ரயில் நிலையத்திற்கு வந்து இவர் என்னை சந்தித்தார். அந்த ஆத்மார்த்தியை பின்னாளில் மதுரை சத்யா நூல் வெளியீடு விழாவில் சந்தித்தேன். பத்திரிகையில் பிழைத்திருத்தும் பணி எவ்வளவு முக்கியம் என்பதை அழகுற விளக்கியுள்ளார் .

இந்தியா-சீனாவுடன் ஒப்பந்தம் ஒரு எழுத்து மாறினால் மீனாவுடன் ஒப்பந்தம் (மீனா அந்த அளவிற்கு பெரிய ஆளா?) குண்டு வெடிப்பு செய்தி ஒரு எழுத்து ட /டூவுக்கு பதிலாக டி ஆனால் ஏற்படும் விபரீதம் எல்லாம் குறிப்பிட்டதும் ரஜினி நடித்த ஆறிலிருந்து அறுபது வரை படத்தில் தலைவர் கொள்கை பிடிப்புள்ளவர் என்பதற்கு பதிலாக "ங் "போட்டு அர்த்தமே மாறுதே என்ற காட்சி கண்முன்னே வந்து போனது.

வாழ்த்துகள் பாலகணேஷ் ஜி

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## ஊதுலி

ஊதுலிகொம்புடன் அழகர்மலையிலிருந்து அப்பன்திருப்பதி வரும்முன் வேர்த்து விறுவிறுத்துப் போச்சு..இரண்டு தோளிலும் மாத்தி வச்சு தூக்கினாலும், தோள் இரண்டும் கனத்து கல்லா போச்சு. அழகரோடு மலையிறங்கினவனுக்கு அவரோடு தான் மலையேத்தமும். கிடாரிபட்டியிலிருந்து அம்பலக்காரர் மாட்டுவண்டியில் அனுப்பிவிட்ட ஊதுலிகள் முச்சூடையும் வித்து காசாக்கணும், சாப்பாடு சவரணையை அவன்தான் பார்த்துக்கிடணும். பெரிய ஊதுலி வித்தாக்க; இருபத்தைந்து ரூபாயும் சிறுசை வித்தாக்க இருபது ரூபாயும், கமிசன்,அவனுக்கு திருநாளுக்குள்ள ஐயாயிரம் பாத்திரலாம். கைசெலவுக்கு காசாகுமே. உச்சி வெயிலில் ஜீன்ஸ் பேண்ட்டும் சட்டையும் போட்டுட்டு நடப்பது கொடுமை. இன்னும் ஒரு ஊதுலி கூட போணியாகல்ல. வியாபாரம் பண்ணறது சுளுவான ஜோலியில்ல. இம்புட்டுக்கும் போட்டியா வேறு ஆளையும் காங்கல்ல. இளநி விக்கிற தொரப்பாண்டி வண்டியோடு ரோட்டோரம் நிக்கிது. "சைக்கிள மிதிக்க முடியல்ல; இன்னாசி! இன்னிக்கு ஒரு நாளு வியாபாரம் பாக்கிறயா? ஒரு இளநிக்கு இருபது ரூபா கமிசன் எடுத்துக்க" என்று சொன்னதும், "சரிண்ணே; இளநி விக்கலேன்னா சங்கட படக்கூடாது" ன்னு சொன்னவனுக்கு மின்னல் வெட்டியது சடம்பொன்றை எடுத்து ஊதுலிகொம்பை மண்தொட்டியில் ஊணி வெச்சு வண்டியோடு கட்டினான். சைக்கிளை லாவகமாக மிதித்து சீட்டி அடித்தவாறே சனக்கூட்டத்துள் முன்னும் பின்னும் போய் வந்ததில் இளநி

வியாபாரம் மட்டுமல்ல; ஊதுலி வியாபாரமும் சூடுபிடித்து, பத்து, பன்னிரெண்டு ஊதுலிகளும் வித்துப் போச்சு. பெருசுங்க இளநி சாப்பிட; சிறுசுங்க ஊதுலி வாங்கன்னு; பரபரப்பாகப் போச்சு ரெட்டைவியாபாரம். ஒரு வியாபாரம் இன்னொண்ணை ஊக்கிவிடன்னு; சுறுசுறுன்னு சுழன்றான்.

**சசிகலா விஸ்வநாதன்**



## வட்டி

நீ ரசித்துச் சிலாகித்துப்
படிக்கிறாய்
என்பதற்காகவே
சினிமா இதழ்களிலும் கூடக்
காதல் கவிதைகளை
எழுதுகிறேன்!
நீயும் கவிதைகளைப் படித்து
அதனுடன் சேர்ந்து
என்னையும் உன்னுள்(உள்)
வாங்கினாய்! நவீன
கதாநாயகிகளின்
விதவிதமான
அழகுப் படங்கள்
அச்சிடப்பட்டிருந்தாலும்
என் கவிதைக்கான
படங்களில் மிளிர்ந்த
அழகுப் பெண்கள்
ஒவ்வொருத்தியும்
எனக்கு நீயாகவே
தெரிந்தாய்!
இதை விட அழகாகக்
கா த ல் இருந்து விட
முடியுமா என்ன?!
என்னுடன் பின்னிப்
பிணைந்திருப்பது
உன்னுடைய அழகு மட்டும்
என்று நினைத்தாயா?
அன்பும்(கூடத்)தான்!
முதல் தான் வட்டியைக்

கொடுக்குமாமே!
உன்னுடைய முதலான
கா த ல் எனக்கு
வாழ்க்கையையே
கொடுத்து விட்டது!

**முத்து ஆனந்த்**வேலூர்



## உலக இட்லி தினம்

உன்னை அடித்துக் கொள்ள
யாருமில்லை

கை உரல் முதல் கரண்ட்
உரல் வரை நீ நீதான்

மணம் மிகுந்த மல்லிகைப்பூ
பெயர் பெற்றாய்

மனம் நிறைந்த பலகார
வகையில் முதலானாய்

மெல்ல நீர் தெளித்து மெத்து
மெத்தாய் உளுந்தரைத்து

செல்லும் வரை அரிசியுடன்
சேர்ந்து அரைத்து

கணக்காய் உப்பிட்டு
கையால் கிளறி வைத்து

நிலவொளியில் வெளியில்
வைத்து புளிக்கச்செய்து

இட்டிலிப் பானையில் நீர்
கொதிக்க தட்டெடுத்து
நனைத்த துணிபோட்டு
நறுவிசாய் மாவு ஊற்றி

நறுமணம் கமழ கமழ கையில்
குழிவெட்டி

வெந்ததை அறிந்தபின் நீர்
தெளித்து

ஆவிபறக்க தட்டிலிட்ட
இட்டலியை

உடல் பற்றி பயமின்றி
சட்டினியும் சேர்த்து

எட்டுப்பத்து என தின்றுவிட்டு
ஏப்பம் விட்டு

திரும்பிப் பார்த்தால்

புரிகிறது இது

உலகெங்கும்
விரும்பப்படும்
பலகாரமென்று

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம



நேசிப்பைச்
சொல்கிற யாரும்
அன்னையைப் போலே..

நேசிப்பைப் பெறுகிற
எவரும் பிள்ளையைப்
போலே..

வேறெப்படி இருக்க முடியும்..

பவழமல்லி
மரம்
தொட்டால் பூ
உதிர்க்கத்தானே
செய்யும்..
வாசமாய் !

**ரிஷபன்**

தேவை சின்னதாய் ஒரு
அழகான தனிமை
சிறிது தேனீர்
நிறைய மௌனம்
மனக் கூட்டில் அலையும்
ஒற்றைச் சிறகை உலாவ
விட்டு எட்டி நிற்க ஆசை
காற்றில் அலையும்
வார்த்தைகளைக் கோர்த்து
கவிதையாக்கி நெஞ்சை

நெகிழ
வைக்க
விருப்பம்
ஆசையின்றி
இருக்கவும்
ஆசை.

**G A Prabha**



## ஹைக்கூ...

பொழுதுப்போக்காகத்தான்
ஆரம்பிப்பாய் பின்னாளில்
அதுவே பொழுதாய்
போய்விடும்...குடி!

**ஏ.எம்.ஷெரீஃப்,**
புதுக்கோட்டை.

## ஆண்டவன்

இறைவனை அடைந்திட
தியானி என்று கூறினர்
அனுபவஸ்தர்கள்
ஏழைகளுக்கு உதவுவதே
தெய்வத்தொண்டு பகன்றனர்
பக்திமான்கள்ஒழுக்கமான
இல்லறமே மேன்மை
என்றனர் மனோதத்துவ
அறிஞர்கள்மந்திர
தந்திரத்தால் எட்டலாமென
ஆசை காட்டினர் அற்பப்
பதர்கள் உனக்கெதற்கு இந்த
வீண்வேலைபகுத்தறிவை
நோண்டி எடுத்தனர்
உனக்கு தோன்றியதைச்
செய்திடு பிறர் கருத்துக்கு
செவிசாய்க்காதே
லட்சியத்தை நோக்கி
நகர்ந்திடு உச்சியை
அடைந்து கோலோச்சு

**பி. பழனி,** சென்னை.



## நோய் செய்தாள் நேரிழையாள் (வெண்சுருட்டு)

சேலையெனும் பெட்டிக்குள் உடல்மறைத்துச்
செவ்வந்தி சுடர்முகத்தில் காமமூட்டிச்
சாலையிலே செல்கின்ற போதே பெட்டிக்
கடைதன்னில் நின்றபடி கண்ணால் பேசிச்
சோலையிளந் தென்றலென நெஞ்சினுள்ளே
சொகுசானக் கற்பனைகள் எழுப்பி விட்டாள்
மாலையினை விழுங்கவந்த இருளைப் போல
மனம்மயங்க விரலிரண்டில் இடையைப் பற்றி

முத்தத்தைக் கொடுக்கின்ற போதே மேனி
முழுவதிலும் மின்சாரம் பாய்ந்தாற் போல
சித்தத்தை மயக்குகிறாள் நெஞ்சில் இன்பச்
சிலிர்ப்புதனை எழுப்புகின்றாள் வாயி னூடே
புத்தமுதப் புகையினாலே சுவையைச் சேர்த்துப்
புதுமையான அனுபவத்தில் உழல விட்டே
மொத்தத்தில் என்னவளாய் ஆகி விட்டாள்
மெல்லமெல்ல எனையடிமை ஆக்கி விட்டாள் !

நண்பர்தம் பழக்கத்தால் நட்பாய் வந்து
நாளடைவில் தேவையெனும் உறவாய் மாறி
பண்பின்றி நண்பர்கள் உள்ள போதும்
பக்கத்தில் நிற்பதற்கே நச்ச ரிப்பாள்
பெண்ணென்ற நாணமில்லா பரத்தைப் போன்றே
பெருமூச்சு விட்டபடி அணைப்பாள்! பூக்கும்
எண்ணத்தில் அவள்நினைவே பித்தாய் ஆக்கி
என்னிதயம் முழுவதையும் ஆக்ர மித்தாள் !

காலையிலே எழுமுன்னே பக்கம் நிற்பாள்
குழம்பிதனைக் குடிக்குமுன்னே எதிரில் நிற்பாள்
வேலையினைச் செய்கின்ற நேரந் தன்னில்
வெடுக்கென்று கைகளினைப் பிடித்தி ழுப்பாள்
மாலையிலே என்னுடனே மகிழ்தி ருப்பாள்
மனைவியுடன் பேசுகின்ற போதும் கங்குல்
வேளையிலும் எனைவிட்டுப் பிரிந்தி டாமல்
வெறியுடனே இதழ்முத்தம் தந்து நிற்பாள் !

இணைபிரியா தென்னுடனே இருந்த தாலே
இரவெல்லாம் இருமலுக்கு வழிவ குத்தாள்
கணையத்தை ஈரலினை ஓட்டை செய்தே
காசநோயைப் பரிசாக ஈந்தும்; பக்கம்
மனையாளும் வருவதற்கே அஞ்ச; எல்லோர்
மருண்டோடத் துப்புகின்ற எச்சி லோடும்
கனைக்கின்ற ஒலியோடும் குருதி சேர்ந்தே
கக்குகின்ற நிலைமைக்கே தள்ளி விட்டாள் !

இளமையினை முதுமையென மாற்று கின்ற
இரசவாத வித்தையினைக் கற்ற மங்கை
பளபளப்பு சரிகையிலே பல்லைக் காட்டிப்
பளபளப்பை என்னுடலில் பறித்து விட்டாள்
வளமானப் பொருளிருந்தும் வாழ்வை நோயால்
வாடவிட்டே தனிமையிலே துடிக்கச் செய்தாள்
குலப்பெண்ணாய் வேடமிட்டே வெண்சுருட்டு
குடிக்கின்றாள் என்னுயுரை மயங்க வைத்தே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road, Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009




















## WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும்.7845904395/ 8668107106




## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539
















Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009



# பல்சுவை களஞ்சியம்




# ஒட்ட_வைத்த_கூத்தர்

ஒருமுறை, (ஒட்டக்)கூத்தரின் வம்சத்தினர், ஒன்றுகூடி கூத்தரிடம் சென்றார்கள். அவர்கள் கூத்தரிடம், "ஐயா புலவரே! நீங்கள் நமது வம்சத்தை போற்றி, ஒரு பாடல் கூட பாடவில்லையே! எங்களுக்காக ஒரே ஒரு பாட்டாவது பாடக்கூடாதா?" என்று கேட்டார்கள். "நீங்கள் கேட்பது நியாயம் தான். நானும் பாடவேண்டியதுதான். ஆனாலும், என் பாட்டுக்கு யார் பரிசு தருவார்கள்." என்று கூத்தர் பதில் உரைத்தார்.

கூத்தரின் இந்த பதிலால் வெகுண்ட அவரது வம்சத்தினர்கள், "நாங்கள் கையால் ஆகாதவர்கள் இல்லை கூத்தரே, எங்களால் அளவற்ற பொருளைத் தரமுடியும்" என்றார்கள்.

"உங்களால் தரமுடியும் என்பதை நான் அறிவேன்.
ஆனால் , எனக்கு சோழ மன்னன் தந்த செல்வங்களே நிறைய இருக்கும்போது, நீங்கள் தரும் பொருளுக்கு அவசியமே இல்லை. வேண்டும் என்றால் ஒன்று செய்யுங்களேன்."

"ஆணையிடுங்கள் கூத்த பிரானே" ஒரே குரலில் ஆர்வத்தோடு இடையிட்டார்கள் கூத்தரின் குலத்தவர்கள்.

"நமது குலத்தில் பிறந்த, எழுபது தலைச்சம் பிள்ளைகளின் தலையை அறுத்து கொண்டு வாருங்கள்.

நான் பாடுகிறேன்" என்று குறும்பாக குறுநகை பூத்தபடியே மொழிந்தார் கூத்தர்.

படிக்கும் நமக்கே குலை நடுங்குகிறதே, காதால் கேட்டஅவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்.

பயந்த அவர்கள் பின்வாங்கினர். இதைக் கவனித்த கூத்தருக்கு தான் செய்த தவறு விளங்கியது. தவறுக்குப் பிராயச்சித்தம், பரிசு இல்லாமல் பாடுவதே என்று முடிவு கட்டினார்.

தனது கணீர் குரலில், தனது குலத்தின் பெருமையை பாட ஆரம்பித்தார். அவர் பொழியும், அமுத கவி மழையைக் கேட்டு, அனைவரும் சொக்கிப்போய் நின்றிருந்தார்கள்.

கூத்தரின் மாணவர்கள், அவர் சிந்தும் அமுத கவித்துளிகளை, சேகரித்துக் கொண்டார்கள். அதாவது குறித்து வைத்துக்கொண்டார்கள்.

கவியில் ரௌத்திர ரசத்தை இழைத்துப் பாட ஆரம்பித்தார் கூத்தர்.
அதைக் கேட்ட அவரது குலத்தவர்களுக்கு சூரத்தனமும், ரோசமும் பொங்கி வழிந்தது.



பாட்டில் இருக்கும் உணர்ச்சி, பாட்டை கேட்பவனுக்கும் ஏற்படுவது தானே ஒரு கவிஞனின் உண்மையான வெற்றி?. அந்த வெற்றியை, கூத்தபிரான் அனாயாசமாக பெற்றுவிட்டார்.

வாணியின் அருள் சாதாரணமானதா என்ன? அவள் அருளால் கவி பாடும் கூத்தருக்கு இது சர்வ சாதாரணம் இல்லையா? அவர் கடமையே கண்ணாக பாடிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்ட அவரது குலத்தவர்களின் சூரத்தனமும் ரோசமும் உச்சத்தை அடைந்தது. இமைப்பினில் ஈட்டியை கையில் எடுத்தார்கள்.
அவர்களது குலத்தவர்களின் தலைச்சன் பிள்ளைகள் எழுபது பேரின் சிரத்தை வெட்டி சாய்த்தார்கள்.

அதைக் கண்ட கூட்டம் ஸ்தம்பித்து நின்றிருந்த போது, கூத்தர் அறுபத்தி ஒன்பது பாடல்கள் பாடி முடித்திருந்தார். நடந்ததை அறிந்த அவர் வழக்கம் போல ஒரு மர்மப் புன்னகை பூத்தார்.

வாணியின் அருளால் நடந்தது, நடப்பது, நடக்கப்போவது என அனைத்தும் அறிந்தவர் இல்லையா? ஆகவே அவரிடம் இந்த பக்குவம் இருப்பது ஆச்சரியமான ஒன்று இல்லை.
மெல்ல தனது மாணவர்கள் பக்கம் திரும்பிய அவர், பேச ஆரம்பித்தார். "இந்த எழுபது தலைகளையும் முண்டங்களையும் எடுத்துக் கொண்டு என் பின்னே வாருங்கள்" என்று மாணவர்களுக்கு கட்டளையிட்டார்.

மாணவர்கள், தலையையும், முண்டங்களையும் பொறுக்கி ஒரு கூடையில் போட்டுக் கொள்ளும் வரை காத்திருந்தவர், வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

தலைகளோடு கூடிய கூடையுடன், மாணவர்களும் மற்றவர்களும் அவரை பின்தொடர்ந்தார்கள்.

நேராக ராஜவீதிக்கு வந்தார் கூத்தர். அந்த எழுபது மண்டையோடுகளையும், சிம்மாசனம் போல அடுக்கச் சொன்னார். நடக்கும் அமளி துமளி மன்னன் காதுகளை எட்டியது.

பதறிக் கொண்டு வந்தான் அவன். "கூத்தரே, என்ன கூத்து இது?" என்று மேல் மூச்சும் கீழ் மூச்சும் இரைக்க கேட்டான். அவனுக்கும், கூத்தரின் மர்மப் புன்னகையே பதிலாக அமைந்தது.
மெல்ல அந்த தலை சிம்மாசனத்தில் அமர்ந்தார் கூத்தர். தனது ஆராதனா தெய்வமான சரஸ்வதியை எண்ணி தியானித்தார்.

அவள் மீது இருந்த நம்பிக்கையால், அவரது முகம் தெளிவாக பிரகாசத்தோடு இருந்தது. அவரது முகம், கொஞ்சம் கூட அச்சத்தையோ, பயத்தையோ காட்டவில்லை. அவரது இதழ்கள் மெல்லப் பாட ஆரம்பித்தது.
"கலைவாணி நீயுலகில் இருப்பதுவுங்

கல்வியுணர் கவி வல்லோரை

நிலையாகப் புரப்பதுவு மவர் நாவில்

வாழ்வதுவும் நிசமே அன்றோ

சிலைவாண னாவிருந்தா யிரம்புயங்க

டுணிந்து முயர் சீவனுற்றான்

தலையாவி கொடுத்திடும்
செங்குந்தருயிர்

பெற்றிட நீ தயை செய்வாயே"

என்று பாடி முடித்து விட்டு, தலைகளால் ஆன சிம்மாசனத்தை விட்டு எழுந்தார் கூத்தர்.
அவர் எழுந்ததுதான் தாமதம். சிம்மாசனத்தின் அங்கமாக இருந்த தலைகள், உடன் பறந்து சென்று, தனது உடலோடு சேர்ந்து கொண்டது.

உடலை, தலை சென்றடைந்ததும் உயிரும் இமைப்பினில் வந்தது. அந்த எழுபது பேரும் உறக்கத்தில் இருந்து விழிப்பது போல எழுந்தார்கள். கூட்டமே வாய் பிளந்த படி, நடப்பதை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தது.

தலை வேறு முண்டம் வேறாக இருந்ததை வாணியை பாடி, அவள் அருளால் ஒட்டச் செய்ததால் கூத்தருக்கு, "@#ஒட்ட_வைத்த_கூத்தர்" என்ற பெயர் ஏற்பட்டு, அது "ஒட்டக் கூத்தர்" என்று @#மருவிப்_போனது. மேலும், அவர் தலைகளால் அமைந்த சிம்மாசனத்தில் அமர்ந்து, "ஈட்டி எழுபது", என்ற நூல் பாடியதால் அவருக்கு
"சிர சிம்மாசனாதிபதி" ( தலையால் ஆன சிம்மாசனத்தில் அமர்ந்தவர்) என்ற பட்டம் வழங்கப் பட்டது.
இப்படி, இறந்தவர்களையும் பிழைக்கச் செய்யும், இரக்கம் மிகுந்த தெய்வமான கலைவாணியை,
வணங்கி வாழ்வில் வளமான சௌபாக்கியங்களைபெறுவோம்.

அம்பிகையின் திருவடிகளில் சரணம்

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| ஓட்டம் நின்றால் போதும் ஆட்டம் நின்று போகும். அது என்ன? | ரத்தம் |
| கறுப்புக் காகம் ஓடிப்போச்சு, வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன? | உளுந்து |
| மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் அது என்ன? | தீபம் |
| காலில்லா பந்தலைக் காணக் காண சந்தோஷம் அது என்ன? | வானம் |
| உரசினால் உயிரே மாய்த்துக் கொள்ளும் அது என்ன? | தீக்குச்சி |
| ஆறு எழுத்துள்ள ஓர் உலோகப் பெயர். அதன் கடை மூன்று எழுத்துகள் சேர்ந்தால் ஒரு கொடிய பிராணி. அது என்ன? | துத்தநாகம் |

# தெரிந்த விஷயம் தெரியாத உண்மை

இராமாயணம் நம் எல்லோரும் அறிந்த விஷயம் தான். ஆனால் நமக்குத் தெரியாத ஒரு உண்மை 7 ம் எண்ணுடன் தொடர்பு உள்ளது என்பது எத்தனை பேருக்கு தெரியும் .
ஆமாம் இராமாயணத் துக்கும் ஏழு எண்ணுக்கும் ஒரு சம்பந்தம் உள்ளது.

ஏழு என்னும் எண் கேதுவின் ஆதிக்கம் பெற்ற எண்.

.இராமாயணதில்



ஏழு என்ற எண் ராமர் வாழ்வில் எப்படிப் பிணைந்து அமைந்துள்ளது என்னும் அதிசயத்தைப் பார்ப்போம்.

1.ராமர் வனவாசம் ஏற்றுக் கொண்ட ஆண்டுகள் 7x 2 ஆண்டுகள் ஆகும் .

2.ஸ்ரீ ராமர் விபீஷணனை பார்த்து உன்னோடு நாங்கள் எழுவர் என்று சொன்னார்.

3.சுந்தரகாண்டம் பாராயணம் 7 சர்க்கங்களைக் கொண்டது.

4.சப்தரிஷி ராமாயணம் 7 ரிஷிகளால் தொகுக்கப்பட்டதாகும்.

5.ராமாயணத்தை 7 சுத்த ஜாதி இசை அமைப்பாகப் பாலகாண்டம் நான்காவது சர்க்கத்தில் அமைந்து உள்ளது.

6.இக்கப்பியத்தில் வரும் கதாநாயகன் ஸ்ரீ ராமபிரான் ஏழாவது அவதாரம்.

7.ஸ்ரீ ராமகாதை ஏழு காண்டங்கள்.

8.ஸ்ரீராமன் இ ராவனனுடன் போர் புரிந்த நாள் ஏழு.

9.ஸ்ரீ ராமனின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசம் ஏழாவது ஆகும் .
எத்தனை அதிசயம் இயற்கை வகுத்த வழி. பார்த்தீர்களா?



# ஜோக்ஸ்

" நம்ம கட்சி வளருது உயருது சாதிக்க துடிக்குதுய்யா..."
" கட்சி கட்டிடத்தை திறந்ததுக்கே இத்தனை பில்டப் ஓவர் தான் தலைவரே...."

" நாலு ஐந்து கண்ட்டெய்னர் ரெடி பண்ணணும்ய்யா...."
" ஆமாம் தலைவரே.... லோக்சபா தேர்தலுக்கு ஐந்து கண்ட்டெய்னர் லோ பட்ஜெட் தான்..."

" கணவன் மனைவி சண்டை இப்பெல்லாம் டாஸ்மாக் கடை வாசல்ல நடக்குதே ஏன் சார் ....?"
" என்டர்டெயின்மென்ட் ஃபிளேஸ் ரேட்டிங்குல இப்ப அது தானே ஃபர்ஸ்ட்டுல இருக்கு...."

" ஆட்சியை கலைக்க 356 ஐ பயன்படுத்தினால் ...."
" தலைவர் எண் கணித மேதையை வைத்து அதையும் முடக்கி காட்டுவார் என்பதை...."

" மாப்பிள



பையனுக்கு குடி பழக்கம் இருக்குன்னு உங்க பொண்ணு எப்படி கண்டுபிடிச்சா ....?"
" எடுக்கெடுத்தாலும் பத்து ரூபாய் கூட கூட வெச்சு சொன்னாராமே..."

" எங்கள் தலைவருக்கு ஜாமீன் கிடைக்கவில்லை என்றால் ...."
" காஸ்ட்லி மீன் வருவல், குழம்பு , அவர் வீட்டில் இருந்து பெற அனுமதி தரும்படி தாழ்மையோடு எங்கள் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் ...."

# குழந்தைகளின் கை வண்ணம்

சிறுவர் உலகம்






A. நேசியா
6-ஆம் வகுப்பு
புனித வளனார் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி மேலப்புதூர்
பாலக்கரை திருச்சி

## யானை.!




ஓடிவந்து
பாருங்கோ
யானை வருகுது!
ஒய்யாரமாய் வீதியிலே
யானை வருகுது.!
கூடிநின்று பாருங்கோ
யானை வருகுது!
ஆடிஅசைந்து
குளித்துவிட்டு
யானை வருகுது.!

பாரம் சுமக்க
வித்தைக்காட்ட
யானையைப் பிடிச்சு
சங்கிலியால் காலில்கட்டி
பாடுபடுத்துவார்!
கோவில் வாசல் வீதியிலே
பிச்சை எடுக்க வைக்கிறார்
குட்டியானை தாய் யானை
பிரித்து வைக்கிறார்!

யானைமேலே முத்து அமர்ந்து
சுத்திப் பாக்குறான்!
யானைக்கொரு வாழைப்பழம்
பூமா கொடுக்கிறாள்.!
ஆசிவாங்க ரெண்டுரூபா
கிட்டு கொடுக்கிறான்!
ஆனையம்மா ஆனையென்று
பாட்டுப் படிக்குறான்!

காட்டில் யானை வாழும் இடத்தில்
வீடுகட்டுவார்!
நாட்டுக்குள்ளே யானைவந்தா
வெடி வெடித்து ஓட்டுவார்!
யானையதனின் மனக்குறையை
யார்தான் அறிவார்?
யானைகளை வாழவிட்டால்
மனிதர் வாழுவார்!

## நாங்களும் நல்லவர்களே..!



ஒரு காட்டில் நரிகளும் மற்ற விலங்குகளும் வாழ்ந்து கொண்டிருந்தன. அந்த காட்டில் நரிகள் என்றாலே ஏமாற்றுப் பேர்வழிகள் என்று பெயர் பெற்றிருந்தன. அதனால் அந்தக் காட்டுக்குள் இருக்கும் நரிகளை எல்லா விலங்குகளும் அடித்து விரட்டின. அதனால் நரிகள் அந்தக் காட்டை விட்டு வெளியேறி அடுத்த காட்டிற்குச் சென்றுவிட்டன.

இரண்டு தலைமுறைகள் கடந்துவிட்டது. மூன்றாவது தலைமுறையில் பரதன் என்ற இளம் நரி இருந்தது. அந்த நரி அவமானத்தை துடைத்து திரும்பவும் சொந்த காட்டில் நாம் வாழ வேண்டும். நம் இனத்தையும் சொந்த காட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியது.

அதற்காக பழைய காட்டிற்கு சென்றது. பரதனைக் கண்ட வயதான விலங்குகள் நரியை அடையாளம் கண்டு கொண்டு, இவன் இங்கு எதற்கு வந்தான் என்று முறைத்து பார்த்தனர். அவனிடம் யாரும் பேச வேண்டாம்! என்று இளைய தலைமுறைக்கு உத்தரவிட்டன.

எங்கள் இனத்தை சகுனி குணம் படைத்தவர்கள், கூட இருந்தே குழி பறிப்பவர்கள். தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பாதீர்கள். நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? மலர்களில் எல்லாமே மணமிக்கதா? மணமற்றவையும் கலந்துதான் உள்ளன. எங்களிலும் நல்லவர் இருக்கிறோம் என்று வாதம் செய்து விலங்குகளிடம் நியாயம் கேட்டது.

ஆனால் எல்லா விலங்குகளும் அதை ஏற்பதாக இல்லை. நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு! என்று மற்ற விலங்குகள் பரதன் நரியை விரட்டின. மனம் உடைந்த நரி, மலை மீதேறி கீழே விழுந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில், நரி அண்ணே உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்க தானே புறப்பட்டு வந்தீர்கள்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி செய்து அவைகளின் நம்பிக்கையைப் பெற்றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். முதலில் முயற்சி செய்யுங்கள்! என்று கூறியது.

இதைக் கேட்ட நரி, நீ கூறுவதும் சரிதான் என்று கூறி தன் தற்கொலை முடிவை கைவிட்டு, புத்திசாலித்தனமாக செயல்பட முடிவெடுத்தது. இதற்காக வேடர்கள் வலை விரித்திருப்பதை முன்பே அறிந்து, அதை பறவைகளிடம் கூறி நன்மதிப்பைப் பெற்றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து விட்டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவி குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரியை வாழ்த்தியது.

இதுபோல சின்னச் சின்ன உதவிகளை செய்து நரி கொஞ்சம் கொஞ்சமாக நற்பெயர் பெற்று வந்தது. ஒரு நாள் வேட்டைக்காரர்கள், பெரிய பள்ளம் வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதை நரி பார்த்தது. அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டத்தை எச்சரிக்கை செய்து யானைகளை காப்பாற்றியது.

யானைக்கூட்டம் காட்டுக்கு ராஜாவான சிங்கத்திடம் நரி செய்த உதவியை சொல்லின. அதேபோல முயல், புறாக்கள் என அனைத்து பறவைகளும் தங்களுக்கு நரி செய்த நன்மையைக் கூறினர். இதைக்கேட்ட சிங்கராஜா, நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. இதைக் கேட்டதும் பரதன் சந்தோஷமாக தங்கள் வசிப்பிடத்திற்குச் சென்று, மற்ற நரிக்கூட்டங்களை அழைத்து வந்து தனது சொந்தகாட்டில் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது.

தத்துவம் :
உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அனைவரையும் தீயவர்கள் என்று நினைக்கக்கூடாது. அது நாம் செய்யும் பெரும் தவறாகும்.

## வெள்ளைச் சேவல்





மங்களம் என்ற அழகான பசுமை எழில் சூழ்ந்த கிராமத்தில் ஒரு பண்ணை வீடு இருந்தது. அங்கு ஆடு, மாடு,கோழி,சேவல்... என அனைத்தும் வாழ்ந்து வந்தன. மயூ என்கிற ஆட்டுக்குட்டியும் அழகான வெள்ளை நிற சேவலும் நண்பர்களாக பழகி வந்தன. தினமும் காலை ஆட்டுக்குட்டியை " கொக்கரக்கோ" என சேவல் கூவி எழுப்பும். உடனே ஆட்டுக்குட்டியும் எழுந்து துள்ளி குதித்து விளையாட சென்று விடும்.

வெள்ளை நிற சேவல் ஆட்டுக்குட்டியுடன் மிகவும் நட்பாக பழகியதை மற்றொரு சேவல் கண்டு பொறாமை பட்டது. வெள்ளை நிற சேவல் இடம் வந்து நீ அவற்றுடன் பழகக் கூடாது.நம் இனத்துடன் தான் பழக வேண்டும் என்று கூறி எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தது.

இதை கவனித்த மயூ ஆட்டுக்குட்டி... வெள்ளைச்சேவலே நீ.. நீ ஏன் உன்னை மிரட்டும் சேவலிடம் கடிந்து பேச மறுக்கிறாய். எப்பொழுதும் சதுவாகவே ஏன் பேசுகிறாய். நான் யாருடன் வேண்டுமானாலும் பழகுவேன் நீ உன் வேலையை பார்த்துக் கொள் என்று கூற வேண்டியது தானே என்றது.

அதற்கு அந்த வெள்ளைச் சேவல்.. மயூ நண்பா.. இந்த சேவல் இப்பொழுது தான் என்னிடம் இப்படி வம்பு செய்கிறது. மூன்று மாதத்திற்கு முன் எனக்கு காலில் அடிபட்டு படுத்த படுக்கையாக இருந்த பொழுது அந்த சேவல் தான் எனக்கு தினமும் உணவு கொண்டு வந்து கொடுத்து உதவியது. அந்த நன்றி என்றும் எனக்கு இருக்கும் என்றது வெள்ளைச்சேவல்.

அதற்கு மயூ ஆட்டுக்குட்டி.. ஒரு சிறிய உதவியை நீ இவ்வளவு பெரிதாக எடுத்துக்கொண்டு... காலத்திற்கும் நினைத்திருக்க வேண்டுமா? ஒரு நாள் உதவி செய்துவிட்டு பலமுறை உன்னை கட்டுப்படுத்துகிறதே.. என்றது. அப்படி இல்லை நண்பா... எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல்... எனக்கு அது உதவி செய்தது. நான் உதவி கேட்பதற்கு முன் தானாக பிறருக்கு உதவி செய்ய வேண்டும் எண்ணத்தில் உதவி செய்தது.அந்த உதவி சிறியதாயினும் எனக்கு அது பெரிய உதவி தான். இதைத்தான் திருவள்ளுவர்,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்.

என்று கூறுகிறார் என்றது வெள்ளைச் சேவல். சரி நண்பா... இனிமேல் நானும் யாருடைய உதவியையும் அலட்சியப்படுத்த மாட்டேன் என்று கூறி இரண்டும் விளையாட சென்றன.



முனைவர்
-உமாதேவி பலராமன்
திருவண்ணாமலை.

## காலமே கடவுள்



காலமே கடவுள்
கண்மணி பாப்பா
காலந்தாம் கடவுள்
கண்மணி பாப்பா..

காலம் தவறாதே என்றும்
கடமை மறக்காதே
காலம் மாறாமல்
எதையும்
செய்தால் கண்மணி
பாப்பா
கடவுள் காலமாய்
நிற்பார் கண்மணி
பாப்பா..

எதற்கும் காலமே கடவுள்
கண்மணி பாப்பா இதை
எப்போதும் கைவிடாதே
கண்மணி பாப்பா..

காலம் சொல்வதை நீ
கேட்டால் கண்மணி
பாப்பா
காரியம் யாவிலும்
வெற்றிதான் கண்மணி
பாப்பா..

கடவுளும் காலமும்
ஒன்றே
கண்மணி பாப்பா..
கண்டே உணர்ந்திடு
கண்மணி பாப்பா.,

ஹரணி
தஞ்சாவூர்

## செருப்பு..!



செருப்பு செருப்பு
செருப்புத் தான்
காலில் அணியும்
செருப்புத் தான்
காலைக் காக்கும்
செருப்புத் தான்
எதற்கும் கவலைப்படாத
செருப்புத் தான்.
காடு மேடு செல்வதற்கும்
கல் முள் உள்ள
பாதைக்கும்
கட்டாயம் நாம் அணிய
வேண்டும்
காலில் என்றும்
செருப்புத் தான்.
உன்னைத் தூக்கிச்
செல்லுகின்ற
செருப்புக்கு நன்றி சொல்ல
வேண்டாமா?
வேண்டாதா விருந்தாளி போல்
வீட்டுக்குக்கு வெளியே
கழற்றுவது ஏன்?
செருப்புத் தைக்கும்
தொழிலாளியை
உன்னோடு சேர்க்கைத்
தயங்குவதேன்
செருப்பைப் போற்றிய பரதன்
போல்
அந்தத் தொழிலாளியைப்
போற்ற வேண்டுமே.
ஒவ்வொரு வேலைக்கும் ஒரு
செருப்பு
நாம் அணியும் காலம்
வந்தாச்சு
எத்தனை செருப்புகள்
வந்தாலும்
அதைச் செய்வோருக்கு நன்றி
சொல்லிடுவோம்.

## தேரு வருது!

தேரு வருது தேரு வருது
தூரமா போங்கோ..
எல்லாம்
தூரமா போங்கோ!

ஊரு மக்கள் கூடி விட்டார்
ஒற்றுமை பாருங்கோ...
இங்கே
வேற்றுமை இல்லீங்கோ!

தேருக் குள்ளே சாமி பாரு
தெளிவான முகங்கோ...சாமி
ஒளிர்வாய்த் தெரியுங்கோ!

சீர்மை யான தேரு வருது
செழிப்பைப் பாருங்கோ...சாமி
அழைப்பைப் பாருங்கோ!

வடத்தைப் பிடித்துத் தேரை
இழுப்போம்
வரிசை கட்டுங்கோ...ஆம்
பெருமை கூட்டுங்கோ!

இடத்தை விட்டு இடமே பெயரும்
இனிய தேருங்கோ....
ஆம்
புனிதத் தேருங்கோ!

முனைவர்
இராம.வேதநாயகம்.

## பொது அறிவுப் பூங்கா




1).1978ஆம் ஆண்டு மின்னஞ்சலைக் (email) கண்டு பிடித்தவர் சிவ ஐயாத்துரை என்னும் 14வயது தமிழர்.

2) சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி 1894ஜூன் 13ஆம் நாள் ஆரம்பிக்கப் பட்டது.

3) நான்கு பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட நாடு கிர்கிஸ்தான்.

4) 1947ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், குண்டூசி என்னும் சினிமா இதழ் வெளியிடப் பட்டது.

5) இந்தியாவின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனம் "இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்".

6) மாக்ஸ்சிஸ்ட் கமியூனிஸ்ட் கட்சி, 1964, ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

7) சர் வல்லபாய் பட்டேல், குஜராத் மாநிலம், நாடியாட் என்னும் ஊரில் பிறந்தார்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## ஸ்ரீ மலையாள நாச்சியார் ஸ்ரீபெருமாள் புறப்பாடு



காஞ்சி ஸ்ரீ வரதன் சன்னதி பங்குனி உத்திரம் உற்சவம் ஐந்தாம் நாள் ஸ்ரீ மலையாள நாச்சியார் ஸ்ரீபெருமாள் புறப்பாடு.

## ஸ்ரீ பரிமள ரெங்கநாயகி தாயார்



திருஇந்தளூர் ஸ்ரீ பரிமள ரங்கன் சன்னதி ஸ்ரீ பரிமள ரெங்கநாயகி தாயார்.



ஸ்ரீ மதே ராமாநுஜாய நம: ஸ்ரீஎன்னைபெற்றதாயார்சமதே ஸ்ரீ பக்தவச்சல பெருமாள் திருக்கோவில் 58வது திவ்ய தேசம் திருநின்றவூர் நேற்று பல்லவ உத்ஸவம் இரண்டாம் நாள் சேவை அடியேன் ராமாநுஜதாசன்

## சிறப்பு திருவாராதனம்



திருமாலிருஞ்சோலைமலை ஸ்ரீ கல்யாண சுந்தரவல்லி தாயார் சமேத ஸ்ரீ பரமஸ்வாமி திருக்கோயில்.

திருப்பங்குனி உத்திர திருக்கல்யாண உத்ஸவம் இரண்டாம் நாள் மாலை ஸ்ரீ தேவி ஸ்ரீபூமிதேவி நாச்சியாருடன் ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளி சிறப்பு திருவாராதனம் நடைபெற்று திருவீதி புறப்பாடு கண்டருளி திவ்ய சேவை

## இளையான்குடி லிட்டில் ஸ்டார் நர்சரி பள்ளியில் பட்டமளிப்பு விழா



மானாமதுரை ஏப் 01: சிவகங்கை மாவட்டம் இளையான்குடி கீழையூர் குறுக்கு சாலையில் உள்ள கேஏகே கார்டனில் உள்ள லிட்டில் ஸ்டார் நர்சரி பள்ளியில் 2026 பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்கள் இளையான்குடி டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி முதல்வர் ஜனாப் ஜபருல்லாஹ் கான், சாகிர் உசேன் கல்லூரி வேதியியல் துறை தலைவர் ஜனாப் டாக்டர் சையது அபுதாஹிர், சிவகங்கை நியூ கிரேயான்ஸ் பாலர் பள்ளி செயலர் ஜனாப் அப்துல் அஜ்மல் ஆகியோர் கலந்து கொண்டு மழலையர் களை வாழ்த்தி பட்டங்களை வழங்கினார்கள்.

விழாவில் தொழில் அதிபர் கேஏகே.செய்யதுகான், இளையான்குடி முன்னாள் பேரூராட்சி தலைவர் கவுன்சிலர் செய்யது ஜமீமா ஆகியோர் கலந்து கொண்டனர். குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## கச்சைகட்டியில் 100 சதவிகிதம் வாக்களிக்க வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரம்



வாடிப்பட்டி, ஏப்.01: மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கச்சைகட்டி ஊராட்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தர வின் படி இணை இயக்குனர் மற்று ம் திட்ட இயக்குனர், உதவி இயக்குநர் (பயிற்சி) ஆலோசனையின்படி, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி பொதுமக்களுக்கு 100சதவிகிதம் வாக்களிக்க வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு சுவர் ஓவியம், ரங்கோலி, கையெழுத்து இயக்கம், ஒயிலாட்டம், பேரணி ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) செல்லப்பாண்டியன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ராஜமார்த்தாண்டன் தொட தொடக்கி வைத்தார். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நிர்மலா, ரம்யா, வட்டார ஒருங்கிணைப்பாளர் நாகராஜன், ஊராட்சி செயலாளர் கள் செல்வம், புஷ்பலதா, சுந்தரி, சரஸ்வதி, தனலட்சுமி, மகாராஜன், ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீராம நவமியை முன்னிட்டு சீதா ராமர் திருக்கல்யாணம் உற்சவம்



சேலம், ஏப்..01: சேலம் மாவட்டம் ஆத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு மூலவருக்கும், உற்சவர்க்கும்,சிறப்பு அபிஷேகங்கள், சீதா ராமர் திருக்கல்யாணம் உற்சவத்தில் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, மூலவர் நம் வாசவி அம்மன் மயிலிறகு மாலையுடன் சிறப்பு அலங்காரத்துடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. சீதா ராமர் திருக்கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் சீதா ராமர் திருக்கல்யாணம் உற்சவத்தில் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்



திருப்பூர், ஏப்.01: திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், செவ்வரளி மலர்களால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய, வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் பூரம் நட்சத்திரத்தை முன்னிட்டு அன்னதானம்



கடலூர் மாவட்டம் புவனகிரி கடைவீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பூரம் நட்சத்திரத்தை முன்னிட்டு 300 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மண்டல பூஜை 37- ஆம் நாள் சிறப்பு வழிபாடு



தர்மபுரி, ஏப்.01: தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 37 -ஆம் நாள் மண்டல பூஜை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து வெட்டிவேர் மாலையுடன், தங்க ஆபரணங்களுடன், விநாயகர் அஷ்டோத்திரம், கௌரி அஷ்டோத்திரம், லலிதா சஹஸ்ரநாமம், 108 மஞ்சளினால் செய்த அம்மனை அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. உபயதாரர் R.N.ஜெயபிரகாஷ் &சன்ஸ் பாலக்கோடு. திருமதி ஊர்மிளா ரகு மற்றும் குடும்பத்தினர் பெங்களூர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சீர்காழி தொகுதி அதிமுக வேட்பாளர் அறிமுக கூட்டம்



சீர்காழி , ஏப் , 01 தேசிய ஜனநாயக கூட்டணியின் சீர்காழி சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் அறிமுக கூட்டம் சீர்காழியில் நடைப் பெற்றது. சீர்காழி சட்ட மன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ம.சக்தி அவர்களுக்கு சீர்காழி நகர அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அ.ம.மு.க. மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் பாரிவள்ளல், சீர்காழி நகர செயலாளர் அருண் பாலாஜி உடன் உள்ளனர்.

## சொற்சுவைத் தேனீ விருது



தேனித் தமிழ்ச் சங்கம் மற்றும் திருச்சிராப்பள்ளி, சி. பா. ஆதித்தனார் தமிழியல் ஆய்வுக் கழகம் இணைந்து வழங்கிய சொற்சுவைத் தேனீ விருதினைப் பயண எழுத்தாளரும், உலகப் பயணியுமான சங்கரன்கோவில் அருணகிரிக்குத் தேனித் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும் எழுத்தாளருமான தேனி மு. சுப்பிரமணி வழங்கினார். அருகில் முனைவர் செ. ராஜேஷ்கண்ணா, முனைவர் சி. சிதம்பரம், வி.பி. மணிகண்டன் ஆகியோர் உள்ளனர்.

## வேலூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமீறல்: 9,213 இடங்களில் விளம்பரங்கள் அகற்றம் – 44 வழக்குகள் பதிவு!



வேலூர், ஏப். 01: தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, மாவட்டம் முழுவதும் விதிகளை மீறி வைக்கப்பட்டிருந்த சுவர் விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இது குறித்து வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: மாவட்டத்தில் உள்ள அரசு, பொது மற்றும் தனியார் இடங்களில் அரசியல் கட்சிகளால் செய்யப்பட்டிருந்த விளம்பரங்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி பணியாளர்களால் அகற்றப்பட்டு வருகின்றன. இதுவரை மாவட்டம் முழுவதும் மொத்தம் 9,213 இடங்களில் சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பர பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளை மீறி சுவர் விளம்பரங்கள் செய்ததாக இதுவரை பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், 44 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பள்ளியில் தொங்கும் நூலகம்




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் ஆல் தி சில்ட்ரன் தொண்டு நிறுவனத்தின் மூலமாக தொங்கும் நூலகம் அமைக்கப்பட்டது. தலைமையாசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## ராம நவமி சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை, ஏப்.01: திருவண்ணா மலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் காந்தி தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு மணி ஐயர் அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள், மல்லிகை பூக்கள் மாலைகளால் அலங்காரங்கள், சுண்டல், பானகம் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் வாசவி அம்மனையும், ஸ்ரீ ராமர், சீதா தேவியையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

உபயதாரர் : தீனதயாளன் விஜயா குடும்பத்தினர்கள் கீழ்பென்னாத்தூர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




## கோவில்பட்டி நாடார் காமராஜ் பள்ளியில் மழலையர்பட்டமளிப்பு விழா

கோவில்பட்டி,ஏப்.01: கோவில்பட்டி நாடார் உறவின் முறைக்கு சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மழலைகளுக்கான 44 வது ஆண்டு பட்டமளிப்பு விழா 28/3/2026 சனிக்கிழமை மாலை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத் தலைவர் திரு. எம்.எஸ்.எம்.ஆர். ரமேஷ் அவர்களின் வழிகாட்டுதலின்படி கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்க உபதலைவர் திரு.செல்வராஜ் தலைமை தாங்கினார். சங்கம் செயலாளர் திரு. ஜெயபாலன், பொருளாளர் திரு.சுரேஷ்குமார், உறுப்பினர் திரு. ராஜேந்திரபிரசாத், அருள்மிகு ஸ்ரீபத்திர காளியம்மன் கோவில் தர்மகர்த்தா மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளிச் செயலாளர் அட்வகேட் திரு.செல்வம், பொருளாளர் திரு.பாஸ்கரன் உறுப்பினர்கள் திரு.செந்தில்குமார், திரு.பொன்ராமலிங்கம் மற்றும் ICM பள்ளி பொருளாளர் திரு.ராஜா அமரேந்திரன், நாடார் நடுநிலைப் பள்ளி உறுப்பினர்கள் திரு. வெங்கடேஷ், திரு.வைத்திலிங்கம், எஸ்.எஸ். டி.எம்.கல்லூரி உறுப்பினர் திரு. அருண் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளிக்குழந்தைகள் நிரல்யா, யாகேஷ், பிரகதீஸ்வரி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். பள்ளி முதல்வர் பிரபு ஆண்டறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக குழந்தைகள் நல அரசு மருத்துவர் திருமதி.தேவசேனா கலந்து கொண்டு சுகாதாரம், குழந்தைகளின் பழக்கவழக்கங்கள், கல்வி முன்னேற்றம் மற்றும் குழந்தைகளின் வளர்ப்பில் பெற்றோர்களின் பங்கு போன்ற பல்வேறு முக்கிய குறிப்புகளை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

பின்னர் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 58 க்கும் மேற்பட்ட மழலையர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், பட்டங்களையும் வழங்கினர். இதுபோல் கல்வியிலும், பல்வேறு திறன் சார்ந்த போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ-மாணவியர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் சங்க பெரியோர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மூலம் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யுகேஜி ஆசிரியர்கள் ஐஸ்வர்யம், அன்னலட்சுமி உட்பட இருபால் ஆசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் விழா நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மாணவிகள் ஷாக்ஷி, கார்த்திகா லட்சுமி ஆகியோர் நன்றி கூறினர்.

**செய்தியாளர் கோவில்பட்டி கோ. சுரேஷ்குமார்.**

## தொண்டியில் உயர்கல்வி வழிகாட்டல் முகாம்



தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக கடலியல் மற்றும் கடலோரவியல் துறை இணைந்து நடத்தும் உயர்கல்வி வழிகாட்டல் முகாம் தொண்டி நாச்சியார் மகாலில் நடைபெற்றது.முகாமிற்கு தொண்டி அழகப்பா பல்கலைக்கழக கடலியல் மற்றும் கடலோரவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ரவிக்குமார் தலைமை வகித்தார் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஜெ.ஜே.லியோன், திருவாடானை வழக்கறிஞர் தனபால் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் ஜீவானந்தம் வரவேற்றுப் பேசினார்.

கல்லல் வட்டாரக் கல்வி அலுவலர் ஜோசப் ஆண்டோ ரெக்ஸ், பணி நிறைவு தலைமையாசிரியர் மாணிக்கம் வாழ்த்துரை வழங்கினர் சிவகங்கை மாவட்ட அரசு மாதிரிப்பள்ளி தலைமையாசிரியர் காளிதாஸ், இராமநாதபுரம் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி ஆசிரியர் முத்துகுமார் மாணவர்களுக்கான வழிகாட்டல் முகாமை வழிநடத்தி, மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில துணைத் தலைவர் காந்தி நிறைவுரை வழங்கினார். நிறைவாக, தமிழ்நாடு அறிவியல் இயக்க திருவாடானை வட்டாரச் செயலாளர் போது ராஜா நன்றி கூறினார். மாவட்ட நிர்வாகி பிரியங்கா நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். முகாமில் 200க்கும் மேற்பட்ட 10,11,12 வகுப்பு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பைல், நோட்டு, பேனா, குளிர்பானம வழங்கப்பட்டது.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகிகள் நவனீதகிருஷ்ணன், கணேசன், பரமேஸ்வரன், வின்சென்ட் வீரு, சசிக்குமார், ஜெரோம், கல்பனா மற்றும் திருவாடானை கிளை நிர்வாகிகள் காளிமுத்து, ஜெகதீஷ் குமார், தமிழரசி போன்றோர் செய்திருந்தனர்

# சுற்றுலா: மேற்குத் தொடர்ச்சி மலையின் விசித்திரமான சுற்றுலாத் தலங்கள்!

எங்காவது ஒரு மலை வாசஸ்தலம் சென்று உடலையும் மனதையும் குளிர்ச்சியாக்கிக்கொண்டு வரலாமா என்ற ஆசை வருகிறதா? உடனே ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற ஊர்கள் நினைவுக்கு வருமே... அவற்றைத் தவிர்த்து, இந்தியாவில் உலக பாரம்பரியத்தளமான மேற்குத் தொடர்ச்சி மலை மீது வேறு பல கோடை வாசஸ்தலங்கள் அமைந்திருப்பது பல பேருக்குத் தெரிவதில்லை.

மூடுபனி நிறைந்திருக்கும் காலைப்பொழுது, நெருங்க முடியாத வனங்கள், அமைதியாய் காட்சி தரும் கிராமத்துக் கவர்ச்சி போன்றவற்றை ரசிக்க விரும்புவோருக்கு இந்த ஊர்கள் ரம்மியமானதாகத் தோன்றும். அந்த ஊர்களின் பட்டியலை இப்போது பார்க்கலாம்.



1. ஆகும்பே - AGUMBE

“தென் இந்தியாவின் சிரபுஞ்சி” என்று அழைக்கப்படும் மழைக்காடுகள் நிறைந்த சொர்க்கம்போல் காட்சி தரும் இந்த ஊர் சூரிய அஸ்தமனம் பார்க்க விரும்புவோர் மற்றும் இயற்கையை நேசிப்போருக்கு ஏற்ற இடமாகும்.

2. வாகமோன் - VAGAMON

கேரளா:பைன்மரக்காடுகள்,பனி சூழ்ந்த மலைகள் மற்றும் ரோலிங் புல்வெளிகள் நிறைந்த அமைதியான ஊர் இது.

3. குட்ரமுக் - KUDREMUKH

கர்நாடகா: பசுமை நிறைந்த மலை உச்சிகள் மற்றும் மலையேற்ற பயணங்களை மேற்கொள்ள விரும்பும் பயணிகளுக்கு உதவும் சிறப்பான அமைப்புகள் கொண்ட ஊர். சாகசம் புரிய விரும்பும் நபர்களுக்கு சரியான தேர்வாகும் குட்ரமுக்.

4. அம்போலி, மகாராஷ்டிரா:

அடர்ந்த பசுமை நிறக் காடுகளுடன் ஆங்காங்கே நீர்வீழ்ச்சிகள் கொட்டும் ஆழ்ந்த அமைதிகொண்ட மலை வாசஸ்தலம் இது. பருவ மழைக்காலங்களில் இங்கு செல்வது கூடுதல் சிறப்பாகும்.

5. பொன்முடி, கேரளா

திருவனந்தபுரத்திலிருந்து சிறிது நேர பயணத்திலேயே பொன்முடி சென்றுவிடலாம். பொன்முடி செல்லும் பாதைகள் காற்றோட்டம் நிறைந்தும், கண்களைக் கவரும் டீ எஸ்டேட்களுடனும் ரம்மியமாக காட்சி தரும்.



6. பந்தர்தாரா, மகாராஷ்டிரா

பிரசித்தி பெற்ற ஆர்தர் ஏரி மற்றும் ரந்தா (RANDHA) நீர்வீழ்ச்சி இங்கு உள்ளன. அமைதியான இந்த இடங்களில் முகாம் அமைத்து, ஓய்வாக அமர்ந்து வானில் ஒளிரும் நட்சத்திரங்களை ரசிப்பது சுகானுபவம் தரும்.

7. யானா, கர்நாடகா:

யானாவிலுள்ள மலைகளில்,பாறைகளின் அமைப்பு தனித்துவம் கொண்டதாக இருக்கும். சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பை மாசு படுத்தாமல், இயற்கை சூழலைப் பற்றி அறிந்து கொள்ளவும், அதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளவும் வரும் ஈக்கோ ட்ராவெலர்களுக்கு (ECO TRAVELLER) உகந்த இடம் யானா.

8. மீசா புலிமலா, கேரளா:

மேற்குத் தொடர்ச்சி மலை மீதுள்ள இரண்டாவது உயரமான சிகரம் இது. மூச்சு முட்ட வைக்கும் அழகுடன் தோற்றமளிக்கும் இயற்கைக் காட்சிகள் மற்றும் சீரான மலையேற்றப் பாதைகள் கொண்ட அழகான மலை இது.

அடுத்த முறை சுற்றுலா செல்ல நினைக்கையில் மேற்கூறிய இடங்களையும் மனதிற்கொண்டு திட்டமிடுங்கள்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## அழைக்கிறது உர நிறுவனம்

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இன்ஜினியர் 17, மேனேஜர் 3, ஆபிசர் 3, சேப்டி ஆபிசர் 1 உட்பட மொத்தம் 25 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்., / எம்.பி.ஏ., / சி.ஏ.,

வயது: 18 - 40, 18 - 48 (16.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 16.4.2026

விவரங்களுக்கு: bvfcl.com

## கடற்படையில் பணியிடங்கள்




கடற்படை கப்பல் பழுதுபார்க்கும் தளம், கடற்படை விமான தளத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

‘அப்ரென்டிஸ்’ பிரிவில் பிட்டர் 31, கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் 21, எலக்ட்ரீசியன் 29, எலக்ட்ரானிக் மெக்கானிக் 18, இன்ஸ்ட்ருமென்ட் 15, வெல்டர் 14 உட்பட மொத்தம் 240 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., வயது: 18-60 (1.6.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

The Admiral Superintendent (for Officer- in-Charge ATS), Apprentices Training School, Naval Ship Repair Yard, Naval Base, Kochi - 682 004 கடைசிநாள்: 17.4.2026

விவரங்களுக்கு: rdsdekerala.dgt.gov.in

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஏப்.4 வரை மிதமான மழை வாய்ப்பு

**சென்னை, ஏப்.1:**

*தமிழகத்தில் நாளை (மார்ச் 31) முதல் ஏப்ரல் 4-ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு உள் கர்நாடகா வரை, தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக சுமார் 1.5 கிமீ உயரத்தில், ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.*

*இதன் காரணமாக, நாளை (31-ம் தேதி), மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக் கூடும்.*

*ஏப்.1, 2 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களிலும், 3-ம் தேதி மேற்கூறிய பகுதிகள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். 4, 5 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.*

*தமிழகத்தில் ஏப்.3-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும் இருக்கக்கூடும்.*

# சுவிதா செயலியில் பெறப்பட்ட 724 விண்ணப்பங்கள் ஏற்பு: மாவட்ட தேர்தல் அதிகாரி தகவல்

**சென்னை, ஏப்.1:**

*மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி, தெருமுனைக் கூட்ட பிரச்சாரம் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் சுவிதா (Suvidha) செயலி மூலம் நிகழ்வு தொடங்குவதற்கு 48 மணிநேரத்துக்கு முன்பாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.*




*இந்த செயலி மூலம் நேற்று காலை 11 மணி நிலவரப்படி, 1,157 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 724 விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 219 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.*

*214 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. சென்னை மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள் நடத்த 112 இடங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்த 179 இடங்கள் என மொத்தம் 291 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த 291 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

# தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தலில் 81% வாக்குகள் பதிவு

**சென்னை, ஏப். 1:**

தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தல் நேற்று நடைபெற்றது. மாலை 5 மணி நிலவரப்படி 81 சதவீத வாக்குகள் பதிவாகின. ஏப்.3-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சிலுக்கு 23 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று நடைபெற்றது. இத்தேர்தலில் 30-க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட மொத்தம் 143 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தமிழகத்தில் 166, புதுச்சேரியில் 2 என மொத்தம் 168 வாக்குச்சாவடிகளில் காலை 10 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது. முதல்முறையாக, இந்த தேர்தலில் மொத்த வாக்காளர்களான ஒரு லட்சத்து 540 வழக்கறிஞர்களின் அனைத்து விவரங்களும் க்யூஆர் கோடு வடிவில் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அந்த படிவம் மற்றும் வழக்கறிஞர் அடையாள அட்டையுடன் வந்தவர்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். க்யூ-ஆர் கோடு குறியீட்டை ஸ்கேன் செய்து, வழக்கறிஞர்களின் விவரங்களை சரிபார்த்து, அவர்களை புகைப்படம் எடுத்த பிறகே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மட்டும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். இதற்காக, நீதிமன்றத்தின் எஸ்பிளனேடு நுழைவுவாயில் அருகே கலையரங்கம் பகுதியில் 56 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, போலீஸ் பாதுகாப்புடன் வழக்கறிஞர்கள் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இத்தேர்தலில் பதிவான வாக்குகள் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு, ஏப்.3-ம் தேதி வாக்கு எண்ணிக்கை தொடங்க உள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: 9 குற்றவாளிகளுக்கான தண்டனை விவரம் தள்ளிவைப்பு

**மதுரை, ஏப்.1:**

*சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் நேற்று தண்டனை விவரம் அறிவிப்பதாக மதுரை நீதிமன்றம் தெரிவித்திருந்த நிலையில், ஏப்.2-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளது.*

*தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கரோனா ஊரடங்கின்போது குறித்த நேரத்தைத் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி, இவர்கள் இருவரையும் கடந்த 2020 ஜூன் 19-ம் தேதி இரவு சாத்தான்குளம் போலீஸார், காவல் நிலையம் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர். இதில் ஜூன் 22-ம் தேதி பென்னிக்ஸும், 23-ம் தேதி ஜெயராஜும் உயிரிழந்தனர்..*

*இந்த வழக்கை சிபிசிஐடி விசாரித்த நிலையில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவின்படி, சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது.*

*இந்த வழக்கில், போலீஸார் தாக்கியதால்தான் தந்தை, மகன் இருவரும் உயிரிழந்தனர் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வருகிறது. சாட்சியங்களின் அடிப்படையில் 9 பேர் மீதான கொலைக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேரும் குற்றவாளிகள் என முடிவு செய்யப்படுகிறது. இவர்களுக்கான தண்டனை விவரம் மார்ச் 30-ம் தேதி (நேற்று) அறிவிக்கப்படும்” என தெரிவித்தார்.*

*இதையடுத்து, குற்றவாளிகள் 9 பேருக்கும், மதுரை அரசு மருத்துவமனையில் உடல், மனநல பரிசோதனை நடத்தப்பட்டு, அதற்கான அறிக்கையை மருத்துவர்கள் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தனர். இதைத் தொடர்ந்து, குற்றவாளிகள் 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். உயிரிழந்த ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.*

*நீதிபதி முத்துக்குமரன் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது தண்டனை விவரம் தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் அறிக்கை தாக்கல் செய்யாததால், ஏப்.2-ம் தேதி தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தார். இதற்கிடையே, குற்றவாளிகள் 9 பேருக்கும் உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என, உயிரிழந்த ஜெயராஜ் குடும்பத்தினர் வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.*

# குவைத் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் ராமநாதபுரம் இளைஞர் உயிரிழப்பு

**ராமநாதபுரம், ஏப்.1:**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா அணிகுருந்தான் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் சந்தான செல்வம்(36). இவர் நேற்று முன்தினம் இரவு குவைத் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார்.

குவைத் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், மின் உற்பத்தி நிலையங்கள் மீது நேற்று முன்தினம் இரவு ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அங்குள்ள ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்த சந்தான செல்வம் உயிரிழந்தார். இதுகுறித்து இந்திய தூதரகம் மூலம் அவரது குடும்பத்துக்கு நேற்று காலை தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சந்தான செல்வத்தின் மனைவி கவுசல்யா, தனது மகன் ஜஸ்வின் (7), மகள் சாய் யுவன்யா (3) மற்றும் உறவினர்கள், கிராம மக்களுடன் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு நேற்று வந்தார். அங்கு ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோனை சந்தித்து, குவைத் நாட்டில் இறந்த தனது கணவரின் உடலை சொந்த ஊருக்கு கொண்டு வரவும், தனது குடும்ப வாழ்வாதாரத்துக்கும், குழந்தைகளை படிக்க வைக்கவும் நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கண்ணீர் மல்க மனு அளித்தார்.

# புழுதிவாக்கம் ரயில் நிலைய லிப்டில் சிக்கிய 17 பேர் மீட்பு: ரயில்வே அவசர எண் இயங்கவில்லை என குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.1:**

ஆதம்பாக்கம் பகுதியில் வசிப்பவர் சங்கர். இவரது மனைவி சாந்தி. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் திருவல்லிக்கேணி சென்றனர். பின்னர், அங்கிருந்து பறக்கும் ரயில் மூலம், ஆதம்பாக்கம் அருகே அமைந்துள்ள புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு இரவு 9:30 மணிக்கு வந்தனர்.



அங்கிருந்து இருவரும் மின்தூக்கி (லிஃப்ட்) மூலமாக கீழே இறங்க முடிவு செய்தனர். அங்கு ஏற்கெனவே, 15 பேர் காத்திருந்தனர். அவர்கள் அனைவரும் மின்தூக்கி வந்தவுடன் அதில் ஏறினர்.

மின்தூக்கி புறப்பட்ட சில நொடியில் 2-வது மாடிக்கும் - முதல் மாடிக்கும் இடையே பாதியிலேயே நின்றது. இதில் பயணம் செய்த 17 பேரும் சிக்கித் தவித்தனர். மேலும், உதவி கேட்டு குரல் எழுப்பினர்.

இருப்பினும் யாரும் வரவில்லை. இதையடுத்து, தெற்கு ரயில்வே நிர்வாகத்துக்கும், மின் தூக்கியில் ஒட்டப்பட்டிருந்த அவசர உதவி எண்ணுக்கும் தொடர்ந்து தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். ஆனால், எந்தவித உதவியும் கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, சங்கர் செல்போன் மூலமாக, தனது நண்பரை அழைத்து அவர் மூலம் காவல்துறை அவசர உதவிக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார்.

இதன்பேரில், அடுத்த 15 நிமிடத்தில், வேளச்சேரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலைய அதிகாரி பிரபாகரன் தலைமையிலான 5 தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வீரர்கள் புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு வந்தனர். பின்னர், நீண்ட போராட்டத்துக்குப் பின், தீயணைப்பு துறை வீரர்கள் 2-வது தளத்தில் உள்ள மின்தூக்கி நுழைவு வாயிலை திறந்து, அதன் வாயிலாக மின்தூக்கி மேற்பகுதிக்கு சென்று, அதில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறியை அகற்றினர்.

பின்னர், அதன் வழியாக முதலில் 4 குழந்தைகளை மிகவும் பத்திரமாக மீட்டனர். பின்னர் மற்ற 13 பேரையும் மீட்டனர். இதுகுறித்து, ரயில் பயணிகள் கூறுகையில், "தெற்கு ரயில் வேயின் அவசர எண்ணுக்கு தொடர்பு கொண்டாலும் எந்த பதிலும் இல்லை.

மின்தூக்கியில் ஒட்டப்பட்ட உதவி எண்ணும் இயங்கவில்லை. சிறிது தாமதம் ஏற்பட்டு இருந்தால் கூட விபரீதம் ஏற்பட்டிருக்கும். ரயில்வே நிர்வாகம் இனிமேலாவது கவனமாக செயல்பட வேண்டும். ரயில் நிலையத்தில் பயணிகளின் அடிப்படை வசதிகளை முறையாக பராமரிக்க வேண்டும் என்றார்,

## க்ரைம் கார்னர்

### வன்கொடுமை செய்த வழக்கில் கோயில் பூசாரிக்கு 178 ஆண்டு சிறை தண்டனை

**சிவகங்கை, ஏப்.1:**

சிவகங்கை அருகே ஒரு சிறுமி, 2 சிறுவர்களை மிரட்டி காயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்த கோயில் பூசாரிக்கு 178 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சிவகங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிவகங்கை அருகே சோழபுரத்தைச் சேர்ந்த கோயில் பூசாரி பெரியசாமி (70). இவர் கடந்த 2024-ம் ஆண்டு கோயிலுக்கு வந்த 2 சிறுவர்கள் மற்றும் ஒரு சிறுமியை மிரட்டி, காயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதுகுறித்து குழந்தைகள் நலக்குழுவினர் அளித்த புகாரின் பேரில் சிவகங்கை அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து பெரியசாமியை கைது செய்தனர். இந்த வழக்கு சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி கோகுல்முருகன் குற்றம் சாட்டப்பட்ட பெரியசாமி 3 குழந்தைகளை மிரட்டியது, காயம் ஏற்படுத்தியது, பாலியல் வன்கொடுமை செய்தது, பூசாரியாக இருந்து கொண்டு பாலியல் குற்றம் புரிந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. இந்த வழக்கில் 2 பேரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக தலா 30 ஆண்டுகள் சிறை, ரூ.2 ஆயிரம் அபராதம், மேலும் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக 20 ஆண்டு சிறை, ரூ.1000 அபராதம், கோயிலில் பூசாரியாக இருந்துகொண்டு 3 பேரை வன்கொடுமை செய்த குற்றத்துக்காக தலா 30 ஆண்டுகள் வீதம் 90 ஆண்டுகளும், ரூ.3,000 அபராதமும் மேலும் சில பிரிவுகளில் சிறைத் தண்டனை என மொத்தம் 178 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். மேலும் ஒவ்வொரு குற்றத்துக்கும் கொடுக்கப்பட்ட தண்டனையை தனித்தனியாக அனுபவிக்க உத்தரவிட்டார். இதனால் பெரியசாமி 178 ஆண்டுகள் சிறைத் தண்டனையை மொத்தமாக அனுபவிக்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமி, 2 சிறுவர்களுக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடாக வழங்க அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

### பெண்ணை அரிவாளால் தாக்கி கொலை முயற்சி: குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் சிறை

**திருநெல்வேலி, ஏப்.1:**

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் அருகே கடந்த 2020-ம் ஆண்டு, முன்விரோதம் காரணமாக புங்கனூர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை, அதே பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை (வயது 55) என்பவர் அசிங்கமாக பேசி அரிவாளால் தாக்கியது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, கங்கைகொண்டான் காவல் நிலைய முந்தைய போலீஸ் இன்ஸ்பெக்டர் சோபாஜென்சி புலன் விசாரணை மேற்கொண்டு அந்த நபரை கைது செய்தார்.

புலன் விசாரணை முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது திருநெல்வேலி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், செல்லத்துரை மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி ராமலிங்கம் நேற்று குற்றவாளிக்கு, கொலை முயற்சி குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். இந்த வழக்கில் திறம்பட சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த திருநெல்வேலி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. ரகுபதிராஜா, கங்கைகொண்டான் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேல்கனி, இந்த வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் சோபாஜென்சி (தற்போது தூத்துக்குடி மாவட்டம்), வழக்கின் விசாரணைக்கு உதவி செய்த பெண் ஏட்டு கன்னிமரியாள் மற்றும் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தர சிறப்பாக வாதிட்ட அரசு வழக்கறிஞர் ஜெயபிரபா ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பாராட்டினார். 2026-ம் ஆண்டில் இதுவரை 3 கொலை முயற்சி வழக்குகளில் குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு 6 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதில் ஒரு சரித்திர பதிவேடு உடைய குற்றவாளி உட்பட, 3 குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட காவல்துறையானது, நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சிகளை ஆஜர்ப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரும் முனைப்பில் தொடர்ந்து உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

## விளையாட்டு செய்திகள்

### பாரா வில்வித்தையில் வரலாற்றுச் சாதனை... இந்திய வீராங்கனைக்கு சர்வதேச அங்கீகாரம்

**லாசானே, ஏப்.1:**

இந்தியாவின் இளம் வில்வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவிக்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய அங்கீகாரமாக, உலக வில்வித்தை சம்மேளனம் அவரை '2025-ஆம் ஆண்டின் சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனை' விருதுக்கு தேர்ந்தெடுத்துள்ளது.

தென்கொரியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலக பாரா வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் 19 வயது இளம் வீராங்கனை ஷீத்தல் தேவி வரலாற்றுச் சாதனை படைத்தார். பெண்களுக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றதுடன், இரட்டையர் மற்றும் கலப்பு அணிகள் பிரிவுகளிலும் பதக்கங்களை கைப்பற்றி தனது திறமையை நிரூபித்தார். ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த ஷீத்தல் தேவி, இரண்டு கைகளும் இல்லாத நிலையிலும் தனது கால்கள் மற்றும் தோள்பட்டை உதவியுடன் குறி தவறாமல் அம்புகளை எய்தி உலக அளவில் கவனம் ஈர்த்துள்ளார். அவரது அசாதாரண சாதனைகளை பாராட்டி, கடந்த ஆண்டுக்கான உலகின் சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனை விருதுக்கு உலக வில்வித்தை சம்மேளனம் அவரை தேர்வு செய்துள்ளது.

### ஸ்பானிஷ் பாரா பேட்மிண்டன் - 2 தங்கம், 1 வெள்ளி வென்று தமிழக வீராங்கனை சாதனை

**டோலெடோ, ஏப்.1:**

ஸ்பெயினின் விட்டோரியா-காஸ்டீஸ் நகரில் நடைபெற்ற ஸ்பானிஷ் பாரா பேட்மிண்டன் சர்வதேச தொடரில், தமிழக வீராங்கனை துளசிமதி முருகேசன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி மூன்று பதக்கங்களை வென்று அசத்தினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் சிறப்பாக விளையாடிய அவர் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். தொடர்ந்து கலப்பு இரட்டையர் பிரிவிலும் தங்கம் வென்று அசத்தினார். மேலும் பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றார். முன்னதாக ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கம் வென்றிருந்த துளசிமதி, இப்போது சர்வதேச மேடையிலும் தொடர்ந்து வெற்றிகளைப் பதிவு செய்து வருகிறார். இந்த சாதனை தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமையை சேர்த்துள்ளது.

### மீண்டும் களம் திரும்ப கடுமையாக உழைக்கிறேன்' - மேரி கோம்

**மும்பை, ஏப்.1:**

பெண்கள் குத்துச்சண்டையில் 6 முறை உலக சாம்பியனும், ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்றவருமான 43 வயதான இந்தியாவின் மேரி கோம், வயதாகி விட்டதால் இனி தேசிய அணிக்காக அமெச்சூர் குத்துச்சண்டையில் பங்கேற்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து விட்டார். அதனால் தொழில்முறை குத்துச்சண்டைக்கு மாறுவது குறித்து பரிசீலித்து வருவதாகவும், மீண்டும் களம் திரும்ப கடுமையாக உழைத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தஞ்சை அருகே முதல்வர் ஸ்டாலின் சென்ற வாகனத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை

**தஞ்சாவூர், ஏப்.1:**

தஞ்சாவூர் அருகே முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்ற வாகனத்தை தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் நிறுத்தி சோதனை செய்தனர்.

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க மாநிலம் முழுவதும் தீவிர வாகனச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு அதிகாரிகள் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கும் மேல் கொண்டு செல்லப்படும் ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். பறிமுதல் செய்யப்படும் ரொக்கப் பணம், பொருட்களுக்கு உரிய ஆவணங்களை காண்பித்த பிறகு அவற்றை விடுவித்து





வருகின்றனர். இந்த நிலையில் திருவாரூரில் இன்று மாலை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்காக முதல்வர் காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தஞ்சாவூர் விமானப்படை தளத்திற்கு வந்தார். பின்னர் அவர் அங்கிருந்து பிரச்சார வாகனத்தில் சாலை மார்க்கமாக திருவாரூர் நோக்கி புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார். இந்த வாகனத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்டோரும் உடன் இருந்தனர். தஞ்சாவூர் அருகே சாலியமங்கலம் நாலுரோடு பகுதியில் வாகனம் சென்றபோது அங்கு தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் முதல்வரின் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். வாகனத்தில் இருந்த பைகள் மற்றும் உடைமைகளை திறந்து சோதனையிட்டனர். இந்தச் சோதனை ஓரிரு நிமிடம் நடைபெற்றது.

வாகனத்தின் முன்சீட்டில் அமர்ந்து இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பறக்கும் படையினருக்கு ஒத்துழைப்பு அளித்தார். தேர்தல் பறக்கும் படையினரின் சோதனைக்குப் பிறகு திருவாரூர் நோக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாகனம் சென்றது.

# நீர் மேலாண்மை ஆய்வு மையத்துக்கு ரூ.5 கோடி நிதி: ஐஐடி முன்னாள் மாணவர் வழங்கினார்

**சென்னை, ஏப்.1:**

ஐஐடி சென்னையில் அக்குவா மேப் நீர் மேலாண்மை மற்றும் கொள்கை ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தின் உதவியுடன் செயல்பட்டு வரும் இந்த மையம், கடந்த 2022-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அந்த நேரத்தில் ஐஐடி முன்னாள் மாணவரும் தீம்வொர்க் அனலிட்டிக்ஸ் தலைமைச் செயல் அலுவலருமான பரசுராம் பாலசுப்பிரமணியன், இதிகாஷா ஆராய்ச்சி மற்றும் டிஜிட்டல் நிறுவனத்தின் தலைவர் கிருஷ்ணன் நாராயணன் ஆகியோர் கணிசமான நிதியுதவி வழங்கினர்.

இந்த மையம் நீர் மேலாண்மையில் ஏற்படும் சிக்கல்களுக்கான தீர்வுகளைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது இந்த ஆராய்ச்சி மையத்தின் தொடர் வளர்ச்சிக்காக முன்னாள் மாணவரான பரசுராம் பாலசுப்பிரமணியன் ரூ.5 கோடி வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக ஐஐடி டீன் (பழைய மாணவர் தொடர்பு மற்றும் பெருநிறுவன உறவுகள்) பேராசிரியர் அஷ்வின் மகாலிங்கம் கூறும்போது, "ஐஐடி அக்குவாமேப் நீர் மேலாண்மை மற்றும் கொள்கை ஆராய்ச்சி மையத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து நிதியுதவி செய்து வரும் முன்னாள் மாணவர் பரசுராம் பாலசுப்பிரமணியனுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரது நிதியுதவியானது நீர் மேலாண்மை ஆராய்ச்சிப் பணிக்கு மட்டுமின்றி நம் நாட்டின் நீர் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கான தீர்வுகளைக் கண்டறியவும் பேருதவியாக இருக்கும். ஐஐடி-யை பொருத்தவரையில் பழைய மாணவர்கள் தான் ஐஐடி மேற்கொள்ளும் சமூகரீதியிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு வலிமையான தூண்களாக விளங்குகிறார்கள்" என்றார்.

பரசுராம் பாலசுப்பிரமணியன் கடந்த 1971-ம் ஆண்டு சென்னை ஐஐடியில் பிடெக் பட்டமும், 1973-ல் எம்டெக் பட்டமும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, ஐஐடியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கருத்தியல் கணினி ஆய்வு மையத்துக்கு முன்னாள் மாணவர் அரவிந்த் ரகுநாதன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஐஐடியில் பிடெக் பட்டம் பெற்ற அவர் தற்போது ஆர்ஓசி 360 என்ற நிறுவனத்தின் இணை நிறுவனராகப் பணியாற்றி வருகிறார். இந்த ஆராய்ச்சி மையத்துக்கு தாராளமாக நிதியுதவி அளித்து மாணவர்களின் முன்னேற்றத்துக்கு அரும்பணியாற்றிவரும் அரவிந்த் ரகுநாதனை கவுரவிக்கும் வகையில் இந்த மையத்துக்கு அவரது பெயர் சூட்டப்படுவதாக ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி தெரிவித்துள்ளார்.

## வணிகச் செய்திகள்

### கார்பன் கிரெடிட் மூலம் ரூ.50 கோடி வருவாய் ஈட்ட வஉசி துறைமுகம் திட்டம்

**தூத்துக்குடி, ஏப்.1:**

தூத்துக்குடி: தூத்துக்குடி வஉசி துறைமுகம் கார்பன் கிரெடிட் திட்டத்தின் மூலம் 10 ஆண்டுகளில் ரூ.50 கோடி வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்த குமார் புரோஹித் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி வஉசி துறைமுக ஆணையம் தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களில் இருந்து கார்பன் கிரெடிட்டுகளை உருவாக்கும் பணியை அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் துறைமுகம் 5 முக்கியமான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களை வெற்றிகரமாக பதிவு செய்துள்ளது. இத்திட்டங்களின் மொத்த மின்சார உற்பத்தி திறன் 12.4 மெகாவாட் ஆகும்.

இந்த திட்டத் தொகுப்பில் 400 கிலோவாட் மேற்கூரை சூரியமின் ஆற்றல் அமைப்பு, அதனுடன் 1 மெகாவாட் மற்றும் 2 மெகாவாட் தரைத்தள சூரிய மின்நிலையங்கள், மேலும் 6.3 மெகாவாட் மற்றும் 2.7 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் திட்டங்களும் அடங்குகின்றன.

அடுத்த பத்து ஆண்டுகளில், இந்த திட்டங்கள் மூலம் சுமார் 19,483 கார்பன் கிரெடிட்கள் உருவாகும் என்று கணிக்கப்படுகிறது. இந்த கார்பன் கிரெடிட்கள் மூலம் தற்போதைய சந்தை நிலவரத்தின் அடிப்படையில் வஉசி துறைமுகம் சுமார் ரூ.50 கோடி வருவாய் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிளஸ்-2 மாணவி கொலை வழக்கில் 20 நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல்: தூத்துக்குடி போலீசார் நடவடிக்கை

**சென்னை, ஏப்.1:**

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே பிளஸ்-2 மாணவி ஒருவர் அங்குள்ள காட்டுப்பகுதியில் கடந்த 11-ம் தேதி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டு கிடந்தார். தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த வழக்கில் பல்வேறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளியை தீவிரமாக தேடி வந்தனர். 100-க்கும் மேற்பட்ட போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.




அறிவியல்பூர்வமாக இந்த வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதனைதொடர்ந்து கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த தர்மமுனீசுவரன் என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரது டி.என்.ஏ.வுடன், கொலை செய்யப்பட்ட பிளஸ்-2 மாணவியிடம் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரியில் இருந்த டி.என்.ஏ.வுடன் ஒத்துப்போனது. இதனால் போலீசார் வழக்கு விசாரணையை தீவிரப்படுத்தினர்.

இந்த வழக்கின் குற்றப்பத்திரிகை முழுமையாக தயாரிக்கப்பட்டது. அதனை விசாரணை அதிகாரியான விளாத்திகுளம் டி.எஸ்.பி. சுந்தரபாண்டியன், நேற்று தூத்துக்குடி போக்சோ கோர்ட்டில் தாக்கல் செய்தார். பிளஸ்-2 மாணவி கொலை சம்பவம் நடந்து 20 நாட்களில் குற்றவாளி கைது செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகையும் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. வருகிற 2-ம் தேதி தர்மமுனீசுவரன் மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். அப்போது, அவருக்கு குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

# லாக்கரில் வாடிக்கையாளர்கள் வைத்துள்ள பொருள்களை வங்கிகள் கண்காணிக்காது: நிர்மலா சீதாராமன்

புதுடெல்லி, ஏப்.1:

மக்களவையில் காங்கிரஸ் எம்.பி. நாம்தேவ் தசராம் கிர்சான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியதாவது: வங்கிகளின் லாக்கரில் மதிப்புமிக்க பொருள்களை வாடிக்கையாளர்கள் பாதுகாப்பாக வைக்கின்றனர். அந்தப் பொருள்களின் மதிப்பை கணக்கிடுவதோ அல்லது பதிவு செய்வதோ வங்கி விதிகளை மீறும் செயல் என்பதால் எந்த வங்கியும் அதில் ஈடுபடுவதில்லை.



லாக்கரில் வைக்கப்படும் பொருள்களுக்கு ஆண்டு பாதுகாப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒருவேளை லாக்கரில் உள்ள பொருள்களை ஏதேனும் எதிர்பாராத சூழலில் வாடிக்கையாளர் இழக்க நேரிட்டால் அவர் அளிக்கும் ஆண்டுக் கட்டணத்தின் 100 மடங்கு தொகை இழப்பீடாகத் தரப்படும்.

ஒவ்வொரு லாக்கரிலும் உள்ள மதிப்புமிக்க பொருள்களை வங்கிகள் மதிப்பீடோ ஆய்வோ செய்யாது.

அதனால் அவற்றை வாடிக்கையாளர் இழக்க நேரிட்டால் காப்பீடு வழங்குவது மிகக் கடினம். தற்போது இந்த விதிகளை மாற்றுவது தொடர்பாக பரிசீலிக்கவில்லை.

இந்திய ரூபாய்க்கு பாதிப்பில்லை: ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையே பிப். 28-ஆம் தேதிமுதல் தொடர்ந்து வரும் மோதலால் மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இதன் காரணமாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு மார்ச் 27-ஆம் தேதி வரை 4 சதவீதம் சரிந்து ரூ.94.82-ஆனது.

இருந்தபோதிலும் இந்திய ரூபாய்க்கு எவ்வித பெரும் பாதிப்பும் இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டது.

## சட்டக்கல்லூரி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கறிஞர் - அதிர்ச்சி சம்பவம்

ராஞ்சி, ஏப்.1:

ஜார்க்கண்ட் மாநிலம் பகூர் மாவட்டத்தில் உள்ள சட்டக்கல்லூரியில் இளம்பெண் சட்டக்கல்வி படித்து வருகிறார். இவருக்கு திருமணமாகி கணவர் உள்ளார்.

இந்நிலையில், மாணவிக்கு கடந்த 7 மாதங்களுக்கு முன் பகூர் மாவட்டத்தை சேர்ந்த வழக்கறிஞர் முர்மு என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. படிப்பு உதவுவதாக கூறி முர்மு மாணவியிடம் பழகியுள்ளார். இதையடுத்து கடந்த சில மாதங்களுக்குமுன் முர்மு வீட்டிற்கு மாணவி சென்றுள்ளார். அங்கு மாணவியை முர்மு பாலியல் வன்கொடுமை செய்து வீடியோவாக எடுத்துள்ளார்.

வீடியோவை சமூகவலைதளத்தில் பதிவிட்டுவிடுவேன் எனக்கூறி மாணவியை கடந்த 7 மாதங்களாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதையடுத்து, இந்த சம்பவம் குறித்து மாணவி கடந்த ஞாயிற்றுக்கிழமை போலீசில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கறிஞரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## விமான நிலையத்துக்கு நிலம் விற்ற பணத்தில் ஹெலிகாப்டர் வாங்கிய உ.பி. விவசாயி!

நொய்டா, ஏப்.1:

உத்தர பிரதேசம் மாநிலம் நொய்டாவின் ஜேவார் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு உள்ள சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் தொடங்கி வைத்தார். சுமார் 11,750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த விமான நிலையம் ஆசியாவிலேயே மிகப்பெரிய விமான நிலையம் ஆகும்.

புதிய விமான நிலையத்துக்காக நொய்டா வின் ஜேவார் பகுதியைச் சேர்ந்த விவசாயி களிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது.

இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.10 கோடி முதல் ரூ.20 கோடி வரை வழங்கப்பட்டது. இதன் காரணமாக நொய்டாவைச் சேர்ந்த விவசாயிகள் திடீர் பணக்காரர்களாக மாறி உள்ளனர்.

பன்வாரி பாஸ் கிராமத்தைச் சேர்ந்த சிவம் பிரஜாபதி (26) இது குறித்து கூறும்போது, "தனியார் சூரிய மின் உற்பத்தி ஆலையில் தொழிலாளியாக பணியாற்றி வருகிறேன். நொய்டா சர்வதேச விமான நிலையத்துக்காக எனது விவசாய நிலத்தை விற்பனை செய்தேன்.

இதில் எனக்கு ரூ.15 கோடி கிடைத்தது. சொந்தமாக ஹெலிகாப்டர் வாங்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. நிலம் விற்ற பணத்தில் புதிதாக ஹெலிகாப்டரை வாங்கி உள்ளேன். மீதமுள்ள பணத்தை பல்வேறு முதலீட்டு திட்டங்களில் டெபாசிட் செய்துள்ளேன்.

இதன் மூலம் மாதந்தோறும் நிறைவான வருவாய் கிடைத்து வருகிறது. தற்போது தொழிலதிபரை போன்று வாழ்ந்து வருகிறேன். அடுத்த மாதம் எனது நண்பர்களோடு தாய்லாந்துக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டு உள்ளேன்" என்றார். நொய்டாவின் பன்வாரி பாஸ் கிராமத்தைச் சேர்ந்த மற்றொரு விவசாயி கூறும்போது, "விமான நிலையத்துக்கு நிலம் வழங்கியதால் சில கோடி ரூபாய் கிடைத்தது. இதில் புதிதாக வீடுகளை கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறேன். இதன் மூலம் நிறைவான வருவாய் கிடைக்கிறது. எங்கள் பகுதியைச் சேர்ந்த அனைவருமே திடீர் பணக்காரர்களாகி உள்ளோம். நொய்டா விமான நிலையம் எங்களது வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றிவிட்டது" என்றார்.

## சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வு இந்தி, ஆங்கிலத்தில் மட்டும் நடத்தப்படுவது ஏன்?

புதுடெல்லி, ஏப்.1:

திமுக எம்.பி.வில்சன் மாநிலங்களவையில் பூஜ்ஜிய நேரத்தில் பேசியதாவது: யுபிஎஸ்சி-யின் சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படுகிறது.

இதனால் தென்னிந் தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த திறமையான தேர்வர்கள் முதல் சுற்றிலேயே வெளியேற்றப்படுகிறார்கள். இதனால் அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே தமிழ் உட்பட அனைத்து 22 மொழிகளிலும் சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட வேண்டும். யுபிஎஸ்சி தேர்வுக்கான மதிப்பெண் வழங்கும் முறையில் ஆங்கிலத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகும், நேர்காணலில் மாணவர்களுக்கு மிகக் குறைந்த மதிப்பெண்களே கிடைக்கிறது. ஓபிசி, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு இது மிகவும் பொருந்தும். மேலும், தேர்வு நடைமுறை முழுமையாக நிறைவடைய 15 மாதங்கள் ஆகின்றன. ஒரு மாணவர் தோல்வி அடைந்தால், அவருடைய முழு ஆண்டும் வீணாகி விடுகிறது. எனவே, யுபிஎஸ்சி முதல்நிலைத் தேர்வை ஆண்டுக்கு 2 முறை நடத்த வேண்டும். இவ்வாறு எம்.பி. வில்சன் மாநிலங்களவையில் பேசினார்.

## மணிப்பூர்: பல்வேறு குழுக்களை சேர்ந்த 17 பேர் கைது; பயங்கர ஆயுதங்கள் பறிமுதல்

புதுடெல்லி, ஏப்.1:

*இந்திய ராணுவம் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படையினர், மணிப்பூர் போலீசாருடன் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் கடந்த வாரத்தில் முழு அளவில் சோதனையில் ஈடுபட்டனர்.*

*இதில், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு பிஷ்ணுபூர், சந்தேல், கங்போக்பி, சுராசந்த்பூர் மற்றும் தெங்னவுபோல் மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடத்திய சோதனைகளில் மலை மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளில் செயல்பட்டு வந்த பயங்கரவாத குழுக்களை சேர்ந்த 17 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், வெடிபொருட்கள், துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், மொபைல் போன், சிம் கார்டு, போரில் பயன்படுத்தும் ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.*



*மணிப்பூரில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட வன்முறை, பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவியதில் 60-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர். இதனை அடுத்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர துணை ராணுவ படையினர் வரவழைக்கப்பட்டனர்.*

*இதன்பின்னர் வன்முறை பரவாமல் தடுக்கப்பட்டது. எனினும், தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் நடந்து வந்தன. அதனை போலீசார் தடுத்து சூழலை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.*

*இந்த நிலையில், போலீசாருடன் இணைந்து ராணுவம் மேற்கொண்ட சோதனையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பயங்கர ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.*

## "பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் பினராயி விஜயன்" - ராகுல் காந்தி

திருவனந்தபுரம், ஏப்.1:

இருநாள் பிரச்சாரப் பயணமாக கேரளா வந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி இன்று பத்தினம்திட்டா, புதுப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் அவர் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியது: "கேரள சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி மார்க்சிஸ்ட் கட்சியும் பாஜகவும் ரகசிய கூட்டணியை அமைத்துள்ளன. இந்த ரகசிய கூட்டணிக்கும் காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக என் மீது 36 வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன. என்னிடம் 55 மணி நேரம் இடைவிடாமல் விசாரணை நடத்தப்பட்டது. ஆனால் ஊழலில் திளைத்து வரும் மார்க்சிஸ்ட் தலைமை மீது மத்திய அரசு விசாரணை நடத்தவில்லை. கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு மத்திய அரசு எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவில்லை. சபரிமலை



ஐயப்பன் கோயிலில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்று உள்ளன. பிரதமர் நரேந்திர மோடி பாலக்காட்டில் பிரச்சாரம் செய்தபோது சபரிமலை ஊழல் விவகாரம் குறித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. மார்க்சிஸ்ட் கட்சிக்காக அவர் மவுனம் காக்கிறார். மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் கேரளத்தின் பொருளாதாரம் பின்னடைவை சந்தித்து வருகிறது. ஆளும் மார்க்சிஸ்ட் கட்சி தொழிலாளர்களின் நலனுக்காக போராடுவதாக கூறுகிறது. ஆனால் ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் நலன்களில் மார்க்சிஸ்ட் தலைவர்கள் துளியும் அக்கறை செலுத்தவில்லை. அதற்கு மாறாக ரப்பர் தோட்ட முதலாளிகளின் நலனில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றனர். சர்வதேச அரங்கில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியை கட்டுப்படுத்தி வருகிறார். ட்ரம்ப்பின் கைப்பாவையாக பிரதமர் மோடி செயல்பட்டு வருகிறார். அதேபோல கேரள முதல்வர் பினராயி விஜயன், பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார்" என்று ராகுல் காந்தி பேசினார்.

## சிவபெருமான் என்னை அழைக்கிறார் என உருக்கமான கடிதம் எழுதி வைத்துவிட்டு மாணவி மாயம்

நகரி, ஏப்.1:

தெலுங்கானா மாநிலம் மேட்ச்சல் மாவட்டம், மேடுபள்ளி சாயி ஐஸ்வர்யா காலனியைச் சேர்ந்தவர் பெல்லம்கொண்ட சைலஜா. இவரது மகள் மது ஹசிதா (வயது 19). பிளஸ்-2 முடித்துவிட்டு வீட்டில் இருந்து வந்த மது ஹசிதா, நேற்று முன் தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திடீரென மாயமானார். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய தாய் சைலஜா, மகளை காணாமல் அதிர்ச்சியடைந்து அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தேடினார்.

இதற்கிடையே, வீட்டில் மது ஹசிதா எழுதி வைத்திருந்த உருக்கமான கடிதம் ஒன்று சிக்கியது. அதில், "நான் கடும் மன அழுத்தத்தில் இருக்கிறேன். சிவபெருமான் என்னை அழைக்கிறார், அதனால் நான் சென்று கொண்டிருக்கிறேன்" என எழுதப்பட்டிருந்தது. இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்த தாய், மேடுபள்ளி போலீசில் புகார் அளித்தார். போலீசாரின் முதல்கட்ட விசாரணையில், மாணவி முன்பு வசித்த லாலா பேட்டை பகுதியில் ஒரு வாலிபருடன் பழகி வந்ததும், குடும்பத்தினர் கண்டித்ததால் கடந்த 10 மாதங்களாக அந்த தொடர்பு துண்டிக்கப்பட்டதும் தெரியவந்தது. இதனால் விரக்தியில் இருந்த மது ஹசிதா. கடந்த சில நாட்களாக யாரிடமும் பேசாமல் எப்போதும் தியானத்தில் இருப்பது போலவே இருந்துள்ளார். சிவபெருமான் அழைப்பதாக கூறி மாயமான மாணவியை போலீசார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

## எம்எல்சி பதவியை ராஜினாமா செய்தார் நிதிஷ் குமார்

பாட்னா, ஏப்.1:

பிஹாரில் மிக நீண்ட காலம் முதல்வராக பதவி வகித்தவர் எனற பெருமைக்குரியவர் நிதிஷ் குமார்.

ஐக்கிய ஜனதா தளம் தலைவரான அவர், மத்திய அரசியலுக்கு செல்ல முடிவு செய்தார். இதையடுத்து கடந்த 16ம் தேதி நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலில் வெற்றி பெற்று எம்.பி. ஆனார். இந்நிலையில் அவர் தனது சட்ட மேலவை உறுப்பினர் (எம்எல்சி) பதவியை நேற்று ராஜினாமா செய்தார். எனினும், முதல்வர் பதவியை இன்னும் ராஜினாமா செய்யவில்லை. இந்நிலையில் மாநிலங் களவை உறுப்பினராக நிதிஷ்குமார், ஏப்ரல் 9ம் தேதி பதவியேற்கலாம் எனத் தெரிகிறது.

## 2025-ம் ஆண்டில் 431 பேர் பாம்பு கடித்து உயிரிழப்பு: மத்திய அரசு



புதுடெல்லி, ஏப்.1:

காங்கிரஸ் உறுப்பினர் பிரபா மல்லிகார்ஜுன் எழுப்பிய ஒரு கேள்விக்கு, மத்திய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: நாட்டில் பாம்பு கடியால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த 2023-ல் 183-ஆக இருந்த இது, 2024-ல் 370-ஆக உயர்ந்து. இது, கடந்த 2025-ல் 431-ஆக மேலும் அதிகரித்துள்ளது. மாநில வாரியான புள்ளி விவரங்களின்படி, கர்நாடகத்தில் தான் அதிகபட்சமாக கடந்த ஆண்டில் 157 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

## முக்கிய நக்சலைட் சரண்: அதிகளவில் ஆயுதம் பறிமுதல்

அமராவதி, ஏப்.1:

ஆந்திர மாநிலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், பாதுபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் சோமண்ணா என்கிற நாராயண ராவ். இவர் 1990-களில் நக்சலைட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தேசிய அளவில் அந்த இயக்கத்தில் முக்கிய நிர்வாகியாகவும், மூளையாகவும் செயல்பட்டு வந்தார். இவரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்தால் கோடிக்கணக்கில் பரிசு வழங்கப்படும் என ஆந்திரா, தெலங்கானா, ஒடிஷா உள்ளிட்ட மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இந்நிலையில், சோமண்ணா உள்ளிட்ட பலர் ஆந்திர டிஜிபி முன்னிலையில் நேற்று சரண் அடைந்தனர். அப்போது ஏகே 47 உட்பட பல ஆயுதங்களை அவர்கள் போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

# இந்தியாவுக்கு வரவேண்டிய 19 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கித் தவிப்பு!

புதுடெல்லி, ஏப்.1:

*கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுடன் (எல்பிஜி) இந்தியாவுக்கு வர வேண்டிய 19 சரக்கு கப்பல்கள், ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் தற்போது சிக்கித் தவிப்பதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்தடங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*அமெரிக்கா-இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக, வளைகுடா நாடுகளில் இருந்து எரிசக்தி ஏற்றுமதிக்கு முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளது.*

*இந்த நீரிணையைக் கடந்து செல்ல இந்தியா உள்ளிட்ட சில நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு*



*மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும், இதற்காக தங்கள் நாட்டு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் ஈரான் சில தினங்களுக்கு தெரிவித்தது.*

*இந்தச் சூழலில், மேற்காசிய நிலவரம் குறித்து பல்வேறு அமைச்சகங்களுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்தடங்கள் அமைச்சக சிறப்புச் செயலர் ராஜேஷ் சின்ஹா, 'கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜியுடன் இந்தியாவுக்கு வர வேண்டிய 19 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் தற்போது சிக்கித் தவிக்கின்றன' என்றார்.*

*அவர் மேலும் கூறுகையில், 'இந்த 19 கப்பல்களில் 10 கப்பல்கள் வெளிநாட்டு கொடியும், 9 கப்பல்கள் இந்தியக் கொடியும் பொருத்தியவையாகும். இக்கப்பல்களில் சுமார் 500 மாலுமிகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.*

*இதுவரை இந்தியக் கொடி பொருத்திய 8 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைப் பாதுகாப்பாக கடந்து வந்துள்ளன.*

*கடந்த 2 நாள்களில் மட்டும் 94,000 டன் எல்பிஜியுடன் இரண்டு கப்பல்கள் இந்தியாவை வந்தடைந்துள்ளன.*

*இந்தியக் கொடி பொருத்திய கப்பல்களை மீட்பதே நமது முன்னுரிமையாகும்.*

*மேற்காசிய பிராந்தியத்தில் நிலவும் நிலையற்ற சூழலை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். வளைகுடா பகுதிகளில் இருந்து கொள்முதலுக்காக மீண்டும் கப்பல்களை அனுப்பத் தொடங்கும் நிலையை நாம் இன்னும் எட்டவில்லை' என்றார்.*

*பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடையிலான ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் மொத்தம் 500 கப்பல்கள் சிக்கித் தவிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது*

## தயார் நிலையில் பாராசூட் வீரர்கள்



**வாஷிங்டன், ஏப்.1:**

ஈரானின் கார்க் தீவை கைப்பற்றுவது குறித்து அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களில் சுமார் 45,000 வீரர்கள் முகாமிட்டு உள்ளனர். சுமார் 20 போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கில் குவிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக அமெரிக்க கடற்படையின் ட்ரிபொலி போர்க்கப்பல் கடந்த 28-ம் தேதி மத்திய கிழக்கு பகுதியை வந்தடைந்தது.

இதில் 3,500 வீரர்கள் உள்ளனர். இவர்கள் கடல், வான், தரை வழி போரில் சிறந்தவர்கள். மேலும் பாக்சர் என்ற போர்க்கப்பல் அடுத்த சில நாட்களில் மத்திய கிழக்கு பகுதியை வந்தடையும். இதில் 2,500 வீரர்கள் உள்ளனர். இவர்களும் தரைவழி போரில் திறன் பெற்றவர்கள்.

அமெரிக்காவின் பாராசூட் படையை சேர்ந்த 3,000 வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் பாராசூட் மூலம் தரையிறங்கி அதிதீவிர போரில் ஈடுபடும் திறன் படைத்தவர்கள். தற்போதைய படை பலத்தின் மூலம் ஈரானின் கார்க் தீவை மிக எளிதாக கைப்பற்ற முடியும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஈரானிலிருந்து இந்தியா வரவிருந்த விமானம் மீது அமெரிக்கா தாக்குதல்!




**வாஷிங்டன், ஏப்.1:**

ஈரானில் உள்ள மஷ்ஹத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து 'மஹான் ஏர்' எனும் விமானம் மனிதாபிமானப் பணிகளுக்காக மருத்துவ உதவிகளைப் பெற இந்தியா வரவிருந்தது. இந்த நிலையில் விமான நிலையத்தில் வைத்து அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல் மூலம் அந்த விமானம் தாக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து உடனடியாக எந்த உறுதிப்படுத்தலும் வெளியாகவில்லை.

ஈரான் விமானப் போக்குவரத்துத் துறை இந்தத் தாக்குதலுக்குக் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். இதனைப் போர்க்குற்றம் என்றும் சர்வதேச சட்டங்களை மீறியதாகவும் அமெரிக்கா மீது ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. பல நாடுகளிடமிருந்து மனிதாபிமான முயற்சியின் ஒரு பகுதியாக மருத்துவ உபகரணங்களைக் கொண்டுவர அந்த விமானம் பயன்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும், மனிதாபிமான உதவிகளுக்குப் பயன்படுத்தப்படும் பயணிகள் விமானத்தைத் தாக்குவது, சர்வதேச விமானப் போக்குவரத்து மற்றும் மனித உரிமை தொடர்பான சட்டங்களின்படி தவறாகும். சிகாகோ உடன்படிக்கை (1944), மாண்ட்ரியல் உடன்படிக்கை (1971), பயணிகள் விமானங்களின் மீதான தாக்குதல்களைத் தடைசெய்து அதனைப் போர்க்குற்றமாக அறிவிக்கும் ஜெனிவா உடன்படிக்கை பிரிவு (52) ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி ஈரான் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பாக சுதந்திரமான விசாரணையைத் தொடங்கவும், சம்பந்தப்பட்டவர்களைப் பொறுப்பேற்கச் செய்து, இதுபோன்ற அச்சுறுத்தல்களிலிருந்து சிவில் விமானப் போக்குவரத்தைப் பாதுகாக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த ஈரான் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சர்வதேச அமைப்புகளை வலியுறுத்தியுள்ளது. தாக்குதலுக்குள்ளான விமானம் நாளை (ஏப். 1) மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருள்களை ஏற்றிச்செல்ல இந்தியா வரவிருந்தது.

# அமெரிக்கா: விமான நிலைய பெயரை டிரம்ப் விமான நிலையம் என மாற்றி அறிவிப்பு

**வாஷிங்டன், ஏப்.1:**

அமெரிக்காவில் ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப் பதவி வகித்து வருகிறார். கடந்த ஆண்டு ஜனவரியில் பொறுப்பேற்றது முதல் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுதல், அமெரிக்க விசா விதிகளில் மாற்றம், அரசு நிர்வாகத்தின் செலவுகளை குறைக்க புதிய பதவிகளை ஏற்படுத்துதல், ஈரான் மீது தாக்குதல் என பல்வேறு விசயங்களில் ஈடுபட்டு வருகிறார்.

நான் 7-க்கும் மேற்பட்ட போர்களை தடுத்து நிறுத்தியுள்ளேன் என்று தொடர்ந்து கூறி வருவதுடன், அவற்றுக்காக தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு தர வேண்டும் என்றும் கூறி வருகிறார். இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பின் மகன் மற்றும் தொழிலதிபரான எரிக் டிரம்ப் வெளியிட்ட செய்தியொன்றில், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள பாம் பீச் என்ற சர்வதேச விமான நிலையம், இனி ஜனாதிபதி டொனால்டு ஜே. டிரம்ப் சர்வதேச விமான நிலையம் என்று பெயர் மாற்றம் செய்து அழைக்கப்படும் என தெரிவித்து உள்ளார்.




இதற்கான மசோதா ஒன்றிற்கு புளோரிடா கவர்னர் ரான் டிசேன்டிஸ் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளார். இதற்காக புளோரிடா மாகாண பிரதிநிதி மேக் வெயின்பெர்கர், கவர்னர் ரான் டிசேன்டிஸ், புளோரிடா அட்டார்னி ஜெனரல் ஜேம்ஸ் உத்மெயர் மற்றும் புளோரிடா அவையின் உறுப்பினர்களுக்கும் எரிக் டிரம்ப் தன்னுடைய நன்றியை தெரிவித்து கொண்டார்.

ஜனாதிபதி டொனால்டு ஜே. டிரம்ப் சர்வதேச விமான நிலையம் என்ற இந்த புதிய பெயர் மாற்றம் வருகிற ஜூலை 1-ந்தேதி முதல் நடைமுறைக்கு வரும் என தகவல் தெரிவிக்கின்றது. ஆனால், மத்திய விமான போக்குவரத்து நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில், பெயர் மாற்றங்களுக்கு நாங்கள் ஒப்புதல் அளிப்பதில்லை என்றும் அது உள்ளூர் விவகாரம் என்றும் தெரிவித்து உள்ளது.

எனினும், பயண அட்டவணை மற்றும் தகவல் தொகுப்புகளை மாற்றம் செய்வது உள்ளிட்ட சில நிர்வாக பணிகளை நாங்கள் செய்து முடிக்க வேண்டும் என்றும் தெரிவித்து உள்ளது.

## மேற்கு ஆசிய போரால் உலகம் முழுவதும் மருந்து விநியோகம் பாதிப்பு

**தெஹ்ரான், ஏப்.1:**

ஈரான், அமெரிக்கா இடையிலான போரால் விமான போக்குவரத்து மற்றும் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. இதனால் உலகளவில் எரிபொருள் மட்டுமல்லாமல் மருந்து விநியோகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கேன்சர் மருந்துகள், இன்சுலின், உயிர்க் காக்கும் மருந்துகளின் விநியோகம் தாமதப்படுவது மட்டும் அல்லாமல் அவற்றின் விலைகளும் உயர்ந்து வருகின்றன. இதனால் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. குறைந்த வருமானம் உள்ள நாடுகள் பல மருந்து பொருட்களுக்கு இறக்குமதியைச் சார்ந்தே உள்ளன.




இந்நிலையில் ஈரான் போர் நீடித்தால், இங்கு மருந்து விநியோகம் கடுமையாக பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. எரிபொருள் விலை அதிகரிப்பால் மருந்து விலையும் அதிகரித்து வருகிறது. பல நாடுகளின் விமானப் போக்குவரத்துக்கு துபாய் மையமாக விளங்கியது. இங்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மருந்துகளின் விலை 30 சதவீதம் உயர்ந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவசர கால மருந்துகள் பல வழிகளைச் சுற்றி அனுப்பப் படுகின்றன. எரிபொருள் பற்றாக்குறை மருந்துகளின் விநியோகத்தை தாமதப்படுத்தியுள்ளது. காசா போன்ற பகுதிகளுக்கு செல்ல வேண்டிய மருந்துகள் எல்லாம் பல இடங்களில் தேங்கிக் கிடக்கின்றன. கேன்சர் மருந்துகள் உள்ளிட்ட சில மருந்துகளுக்கு குளிர்சாதன வசதி தேவை. அதனால் ஈரான் போர் நீடித்தால் இவற்றின் விநியோகம் கடுமையாக பாதிக்கும் என கூறப்படுகிறது.

## தெற்கு லெபனானில் தாக்குதல்; இஸ்ரேல் வீரர்கள் 4 பேர் பலி

**டெல்அவிவ், ஏப்.1:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடுமையாக தாக்கியதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இந்த தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. 4 வாரங்களுக்கு மேலாக நீடித்து வரும் இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவாக லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு செயல்பட்டது. இதனால், லெபனானையும் இஸ்ரேல் தாக்கியது.

தெற்கு லெபனானில் உள்ள பகுதிகளை இஸ்ரேல் தன்னுடைய கட்டுக்குள் கொண்டு வரும் வகையில் படையினரை கொண்டு தாக்குதலை தீவிரப்படுத்தியது. இந்த நிலையில், தெற்கு லெபனானில் இஸ்ரேல் வீரர்கள் 4 பேர் பலியாகி உள்ளனர். இதனை இஸ்ரேல் பாதுகாப்பு படை இன்று உறுதிபடுத்தி உள்ளது. இதுதவிர 2 வீரர்கள் காயமடைந்து உள்ளனர். அவர்களில் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு உள்ளது.

வீரர்கள் தொடர்பான தகவல்கள், அவர்களுடைய குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது என இஸ்ரேல் ராணுவம் குறிப்பிட்டு உள்ளது. ஈரானின் ஆக்கிரமிப்பில் லெபனான் உள்ளது என இஸ்ரேல் குற்றச்சாட்டாக கூறியது. இஸ்ரேல் வெளியுறவு துறை மந்திரி கிதியோன் சார் கூறும்போது, லெபனானில் உள்ள ஈரானின் தூதர் முகமது ரெசா ஷிபானை வெளியேறும்படி லெபனான் வெளியுறவு அமைச்சகம் கடந்த வாரம் கெடு விதித்தது.

ரெசா வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்து விட்டது. இருந்தபோதும், தன்னுடைய முடிவை லெபனானால் இன்னும் செயல்படுத்த முடியவில்லை என்று குற்றச்சாட்டாக கூறினார்.

2024-ம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்த விதியை மீறி கடந்த 2-ந்தேதி முதல் லெபனான் பிராந்தியத்தில் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ராக்கெட்டுகளை ஹிஸ்புல்லா அமைப்பு ஏவியுள்ளது. இந்த தாக்குதல் தீவிர விதிமீறலாகும் என்றும் அவர் கடுமையான குற்றச்சாட்டை கூறினார். லெபனனில் நடந்து வரும் மோதலில் இதுவரை மொத்தம் 9 வீரர்கள் உயிரிழந்து உள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்து உள்ளது.

## யுஏஇ போரில் ஈடுபட்டால் துபாய் தகர்க்கப்படலாம்: அமெரிக்க பொருளாதார நிபுணர் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.1:**

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதையடுத்து, இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைத்தலங்கள் அமைந்துள்ள ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) உள்ளிட்ட வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்று அளித்த பேட்டியில் அமெரிக்காவின் முன்னணி பொருளாதார நிபுணர் ஜெஃப்ரி சாக்ஸ் கூறியதாவது: யுஏஇ ஒரு அர்த்தமற்ற குழப்பத்தில் சிக்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான தனது உறவின் மூலம் செய்த தவறுகளை அது மீண்டும் மீண்டும் தொடர்கிறது.

அடிப்படையில், யுஏஇ போரில் இறங்கினால் துபாயும் அபு தாபியும் தகர்க்கப்படக்கூடும். சுற்றுலாத் தலங்களாக வடிவமைக்கப்பட்ட இவ்விரு நகரங்களும் ஏவுகணைத் தாக்குதலைத் தடுக்கும் பலப்படுத்தப்பட்ட பகுதிகள் அல்ல. பணக்காரர்கள் பார்ட்டி செய்வதற்கும், முதலீடு செய்வதற்குமான இடங்கள் இவை. ஒரு போர் மண்டலத்துக்குள் நுழைவது என்பது துபாய் போன்ற ஒரு இடத்தின் நோக்கத்தையே சிதைப்பதாகும். யுஏஇ தெரிந்தே ஒரு முட்டாள்தனமான குழப்பத்தில் சிக்கியுள்ளது. 'ஆபிரகாம் உடன்படிக்கை' மூலம் அமெரிக்காவுடன் இணைந்த வளைகுடா நாடுகளின் முடிவு ஒரு பேரழிவுக்கான அழைப்பு. இது அவர்களை அமெரிக்கப் பாதுகாப்பை அதிகம் நம்பியிருக்கச் செய்துள்ளது. முன்னாள் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹென்றி கிஸிங்கர் குறிப்பிட்டதைப் போல இது பேரழிவுக்கான நட்பு ஆகும். ஒவ்வொரு நாளும் கிஸிங்கரின் புகழ்பெற்ற கூற்றை நான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன். அமெரிக்காவுக்கு எதிரியாக இருப்பது ஆபத்தானது, ஆனால் அதன் நண்பனாக இருப்பது மரணத்தை விளைவிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஈரானின் கார்க் தீவை கைப்பற்றும் முனைப்பில் அமெரிக்கா



**வாஷிங்டன், ஏப்.1:**

ஈரானின் எண்ணெய் வளமிக்க கார்க் தீவை மிக எளிதாக கைப்பற்றுவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரானுக்கு இடையே கடந்த பிப். 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இந்த போர் நேற்று 31-வது நாளாக நீடித்தது.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: ஈரான் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதன் ஒரு பகுதியாக அமெரிக்கா சார்ந்த 20 எண்ணெய் கப்பல்கள் ஹார்முஸ் ஜலவந்தி வழியாக கடந்து செல்ல ஈரான் அனுமதி வழங்கியிருக்கிறது.

அமெரிக்கா, ஈரான் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாக வாய்ப்பிருக்கிறது. ஒருவேளை ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் ஈரானின் எரிசக்தி நிலையங்கள் தகர்க்கப்படும். தற்போதைய சூழலில் அமெரிக்கா, இஸ்ரேல் படைகளில் தாக்குதலில் ஈரான் முழுமையாக சீர்குலைந்திருக்கிறது. ஈரானில் சுமார் 13,000-க்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தியிருக்கிறோம்.

தாக்குதலை சமாளிக்க முடியாமல் அந்த நாடு பேச்சுவார்த்தையில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஈரானின் கச்சா எண்ணெய் வளத்தை கைப்பற்ற திட்டமிட்டு இருக்கிறோம்.

குறிப்பாக ஈரானின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி தளமான கார்க் தீவை கைப்பற்றுவோம். அந்த தீவில் பெரிய அளவில் பாதுகாப்பு இல்லை. எனவே கார்க் தீவை எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது மிகவும் எளிது. தற்போது ஈரானில் ஆட்சி மாற்றத்துக்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி வரும் ஈரான் பிரதிநிதிகள் புத்திசாலிகள். அவர்கள் சூழ்நிலையை நன்று அறிவார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஈரானில் ஹார்முஸ் நீரிணையை எண்ணெய் கப்பல்கள் கடக்க இனி சுங்கக் கட்டணம்..!

**தெஹ்ரான், ஏப்.1:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்து வரும் தாக்குதலில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும், ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் கொல்லப்பட்டனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்தது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற




நிலை காணப்படுகிறது.

இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால், பல்வேறு நாடுகளிலும் எரிபொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு உள்ளிட்ட சிக்கல்கள் எழுந்துள்ளன. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது.

இந்த சூழலில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நடந்து வரும் நேரடி மற்றும் மறைமுகபேச்சுவார்த்தைகளின் பலனாகவே ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

மத்திய கிழக்கு மோதல் தொடர்பான பதட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், உலகின் மிக முக்கியமான எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் நீரிணை மீது தனது கட்டுப்பாட்டை மேலும் கடுமையாக நிலைநாட்டும் விதமாக ஈரான் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், அந்தப் பாதையின் திறமையான வாயில்காப்பாளராக தன்னை நிலைநிறுத்தி வருகிறது.

உலகளாவிய எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு வழக்கமாக கடந்துசெல்லும் இந்த ஹார்முஸ் நீர்வழிப்பாதையை, ஈரான் ஒரு பொருளாதாரக் கருவியாகவும் புவிசார் அரசியல் அழுத்தப் புள்ளியாகவும் அதிகளவில் பயன்படுத்தி வருகிறது. இந்நிலையில் ஈரானில் ஹார்முஸ் நீரிணையை எண்ணெய் கப்பல்கள் கடக்க இனி சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஈரான் அரசு சுங்கக் கட்டணம் வசூலிக்க அந்நாட்டு நாடாளுமன்ற பாதுகாப்பு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. தற்போது 2 ஆயிரம் கப்பல்கள் ஹார்முஸ் நீரிணை பகுதியில் சிக்கி உள்ளன.

பாதுகாப்பான பயணத்திற்காக ஏற்கனவே இரண்டு கப்பல்கள் பணம் செலுத்தியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# தோற்பதற்காக தமிழ்நாடு வந்துள்ளது தே.ஜ. கூட்டணி : மு.க. ஸ்டாலின்




# தமிழ்நாட்டில் 68 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு: இன்று முதல் அமல்

# இந்தியாவுக்கு வரவேண்டிய 19 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கித் தவிப்பு!

# அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட 19 செல்லாத ஓட்டுகள் திமுகவில் போட்டி: பழனிசாமி

# பிஹார் கோயில் கூட்ட நெரிசல் பலி எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

# வரி பாக்கி: ஹைதராபாத்தில் ஜெயலலிதாவின் சொத்து பறிமுதல்!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

01.04.2026 புதன்கிழமை

இலவச இ-பேப்பர்